# கிராமச் சீரமைப்பு

159

"Rural Reconstruction is a combined movement. A plan is made—all help to make it—and when it is made, every one in his own way helps to carry it out," Brayne, '*Socrates Persists in India*'.

*"We appeal to both past and present members of Indian Universities to apply themselves to the social and economic problems of the country-side, and so fit themselves to take the lead in the movement for the uplift of the rural classes. We trust that the authorities and teachers of Universities will do all in their power to encourage the study of these important subjects" (Report of the Royal Commission on Agriculture in India, P. 67).*

# முகவுரை

'கிராமச் சீரமைப்பு' என்னும் இந்நூல் இச்சொற்றொடராற் குறிக்கப்பட்ட பணிக்குப் பயன்படுமாறு பலர் ஆராய்ச்சியாற் கண்டறிந்த முடிந்த கருத்துக்களையும் பிறர் சேவையாற் பெறப்பட்ட அநுபவ உண்மைகளையும் அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் முதற்பாகத்தில் கிராம மக்கள் தம் சுய முயற்சியாற் செய்யவேண்டும் பணியிவையெனக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில், நமது கிராம வாழ்க்கையிற் காணப்படும் குறைகளிற் பெரும்பாலன கிராம மக்களாலன்றி எளிதில் தீரப்பெறுவனவாம். அன்றியும், சுயமுற்சியில்லாவிடிற் பிறர் முயற்சியாற் பெரும்பயன் விளையாது. இக்கருத்துக்களை முதன் முதலாகத் திறம்பட உரைத்தவர் இப்பொழுது பஞ்சாப் மாகாணக் கிராமச் சீரமைப்பு நிர்வாக அதிகாரியாக விளங்கிவரும் பிரெய்ன் துரை (F. L. Brayne I. C. S.) அவர்களாவர். இக்கருத்துக்கள் வெற்று ஊகங்கள் அல்ல. இவை பிரெய்ன் துரையவர்களின் கிராமச் சீரமைப்புப் பணியினாற் பெறப்பட்ட

அநுபவ உண்மைகள். இவை இந்தியாவின் எல்லாப் பாகங்களுக்கும் பொருத்தமானவை. ஆதலினுற்றான், இவை இந்நாலிலும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இக்கருத்துக்களை யான் ஆராய்ச்சிசெய்து வரும்பொழுது, இவை நம் பழந் தமிழ்மக்களால் நன்கறியப்பட்டிருந்தன வெனக் கண்டேன். கண்டதும், இவற்றிற்காதாரமான பல குறிப்புக்களைப் பண்டை நூல்களினின்றும் பொறுக்கியெடுத்தேன். இக் குறிப்புக்கள் தமிழ் மக்களின் பெருமைக்குத் தக்க சான்ருவன. இவை கிராமமக்கள் செய்ய வேண்டும் பணிக்கு மிக்க ஊக்கமளிப்பன. மேலும், இவை தமிழ்மொழியைக் கற்போருக்கும் விருப்பத்தையும் ஆர்வத்தையும் மிக ஊட்டுவன. இவைபற்றியே இம்மேற்கோள்களை இந்நூலிற் பலவிடங்களிலும் பெய்துள்ளேன். பண்டைக் காலத்து அறவொழுக்கங்களை மீண்டும் நிலைநிறுத்துவதும் கிராமச் சீரமைப்புப் பணியின் ஒரு முக்கிய உறுப்பு ஆகுமன்றே!

இந்நூலின் இரண்டாம் பாகத்தில், நமது சென்னை மாகாணத்தில் கிராமச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் தொண்டு

விவரிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் விவரிக்கும் போது ஒவ்வொரு தலத்திலும் ஆற்றப்பட்டு வரும் பணியின் சிறப்பியல்பு தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பிற மாகாணங்களிற் செய்யப்படும் சேவையும் ஆங்காங்கே சுட்டிக் காட்டப்பெற்றிருக்கின்றது. இங்ஙனம் விவரிக்கப்பட்ட குறிப்புக்கள் இப்பணியின் சிறப்பையும், இதுகாறும் பெற்ற அநுபவங்களையும் நன்கு விளக்கும் என்பது ஒருதலை.

மூன்றாம் பாகத்தில் நம் மாகாணத்தில் நடைபெறவேண்டிய கிராமச் சீரமைப்பு இயக்கத்துக்கு ஒரு திட்டம் வகுத்துக்காட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் நமது மாகாணத்தின் பொருளாதார நிலைமைக்குப் பொருத்தமானதாகவே செய்யப்பட்டுள்ளது. பிற மாகாணங்களைக் காட்டிலும் நம்மாகாணத்திலேயே பரோபகார சங்கங்கள் மிகப் பல உள்ளன. இவை ஆற்றிவரும் சேவையும் மிக்க பலன் விளைத்துள்ளது. ஆதலின், நம் மாகாணத்தின் கிராமச் சீரமைப்புப் பணி இத்தகைய ஸ்தாபனங்களாலேயே நடைபெற வேண்டும் என்ற உண்மை நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும், அரசாங்கத்தார் மேற்பார்வையும் ஆதரவும் மிகவும் அவசியமாத

லால் அதற்குச் சார்பான மாகாணப்பொருளா தாரக்கழகமும் ஜில்லாப் பொருளாதாரக்கழக மும் அமைக்கப்படவேண்டுமென்றும் எடுத் துக்காட்டப்பட்டது. யாம் இங்கு எடுத்துக்காட் டிய திட்டம் மிகச்சொற்பச்செலவில் இயங்கக் கூடியதும், பெரிய மாறுதல்களை விளைவி யாததும் ஆம்

கிராமச் சீரமைப்புப் பணிக்கு வேண்டிய நிதியில் ஒரு பாகம் கிராம மக்களாலேயே அளிக்கப்படவேண்டுமென இந்நூலிற் பல விடங்களிலும் கூறப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாகாணத்திலும் அவ்வம்மாகா ணக் கவர்னருடைய ஆதரவிலும் கிராமச் சீரமைப்பு நிதி சேகரிக்கப்படவேண்டும் என வும் காட்டப்பட்டுள்ளது. மாகாணக் கவர்ன ரவர்களும் மாட்சிமை தங்கிய இராஜபிரதி நிதியவர்களும் தத்தம் சுற்றுப்பிரயாணங்களி லெல்லாம் இவ்வியக்கத்திற்கு நிதி சேர்க்க முயன்றால் பொருள்படைத்த பெருமக்களிட மிருந்து போதிய ஆதரவு பெறப்படுமென்பது உண்மை. மேலும், அரசாங்க நிர்வாகம் மிகமிகச் சிக்கனமாக நடத்தப்படவேண்டும். இவ்விஷயம் அரசாங்க நிர்வாக நிபுணர்களா லேயே ஆராய்ச்சி செய்யப்படவேண்டுமாத

லால் இதுபற்றி இந்நூலில் விரிவாகக் கூறப் படவில்லை.

இந்நூலின் நான்காம் பாகத்தில் அரசாங் கத்தாருடைய அபிவிருத்தி இலாகாக்கள் செய்யவேண்டும் பணிக்குச் சில ஆலோசனை கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாலோசனைகளிற் சில இவ்விலாகாக்களின் வருடாந்த அறிக்கை களையே ஆதாரமாகக் கொண்டவை. வேறு சில மூன்றும் பாகத்தில் விவரிக்கப்பட்ட கிரா மச் சீரமைப்புத் திட்டத்திற்குச் சார்பாகக் கூறப்பட்டவை.

ஜமீந்தார்களை ஒழித்தல், நாணயத்தைப் பெருக்கல் (currency inflation) போன்ற பெரிய மாறுதல்களினுல் கிராமங்களிலுள்ள குறைகள் நீங்கிவிடா. கிராமச் சீரமைப்புப்பணி ஒரு மந் திர வித்தை போல்வதன்று; ஒரு காலவரம் புக்குள் முடிந்துவிடக்கூடியதும் அன்று. அது கிராமமக்களின் சுயமுயற்சியாலும், அர சாங்கத்தாருடைய பணவுதவியாலும் சிறிது சிறிதாகப் பல பலவாண்டுகள் இயற்றப்பட வேண்டிய பெரும் பணி ஆகும். ஆதலால் பெரிய மாறுதல்களையாவது, அரசாங்கத்தா ராற் செய்யவியலாத காரியங்களையாவது யான் இந்நூலிற் குறித்திலேன்.

இந்நூலிற்கண்ட விஷயங்கள் யான் பல வாண்டுகளாகச் சிறப்பாகக் கற்றவை. சில அநுபவத்தால் அறியப்பட்டவை. வேறு சில ஆராய்ச்சியாற் பெறப்பட்டவை. இந்நூல் எல்லா மக்களாலும் படித்தறியத்தக்கதாய் மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் எழுதுவதற்கு ஆதாரமாகவிருந்த நூல்கள் மிகப்பல. அவற்றுட்சில ஆங்காங்கே இந்நூலின் அடிக்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன. அவசியமானவிடத்து, அவற்றினின்றும் சில பகுதிகள் மேற்கோளாகவுந் தரப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சிறப்பாகக்குறிப்பிடத்தக்கவை பிரெய்ன் துரையவர்கள் எழுதிய நூல்களும், கிராமச்சீரமைப்புப்பணியில் ஈடுபட்டுள்ள சங்கங்களின் வருடாந்த அறிக்கைகளும் துண்டுப்பிரசுரங்களும் ஆம். அவற்றை என்வேண்டுகோட்கிணங்கித் தத்தம் நிலையங்களினின்று எனக்கனுப்பியுதவிய பெருமக்களுக்கு நன்றி செலுத்துகின்றேன், பிரெய்ன் துரையவர்கள் தாம் எழுதி வெளியிட்டுள்ள நூல்களையும், துண்டுப்பிரசுரங்களையும், கட்டுரைகளையும் அனுப்பியுதவினார்கள். கிறிஸ்தவமிஷன்கள்செய்துவரும் பணியைப்பற்றி ஒரு நூலை எழுதிவரும் பிஷப் லாப் (G. J. Lapp) என்னும் அமெரிக்க மிஷ

னெரியார் தாம் சேகரித்துள்ள குறிப்புக்களைத் தம் கடிதங்கள்மூலமாக எனக்குத் தெரிவித்தருளினர். மைசூர் அரசாங்கத்து விளம்பர இலாகாத்தலைவர் (Publicity Officer) அவ்வரசாங்கத்தார் செய்துவரும் பணியைப்பற்றிய குறிப்புக்கள் அடங்கிய நூல்களையும் அறிக்கைகளையும் அரசாங்க உத்தரவுகளையும் எனக்கு அனுப்பியுதவினர். இவர்களெல்லாருக்கும் என் நன்றி சிறப்பாக உரித்தாகுக. இறுதியாக, இந்நூற் கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு, மிக நுட்பமாகப் பல அரிய திருத்தங்கள் செய்து, வேண்டுமிடத்தெல்லாம் பொருத்தமான மேற்கோள்களைய்யு அமைத்துப் பலவாற்றாலும் இதனைச் சிறப்பித்தருளிய சென்னைக்கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. எஸ். டி. சற்குணர், பி. ஏ. அவர்களுக்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

மதுரை,
29—6—1936.

ஜே. எஸ். பொன்னையா

# பொருளடக்கம்


முகவுரை ... v

முதற்பாகம்
சுயமுயற்சி

1. சுத்தம் ... 1
Cleanliness
2. நமது அயலார் ... 12
Our Neighbours
3. சுகம் ... 18
Health
4. உணவு ... 25
Food
5. வறுமை ... 30
Poverty
6. நல்வாழ்க்கைச் சங்கங்கள் ... 37
Better-Living Societies
7. நகையணிதல் ... 41
Jewellery
8. பெண்கள் ... 50
Women
9. ஆடுமாடுகள் ... 58
Cattle

10. கிராமப்பாடசாலை ஆசிரியர் ... 63
The Village School-Master

11. கள்ளுண்ணாமை ... 69
Temperance

## இரண்டாம் பாகம்
## சீரமைப்புத் தொண்டுபுரிவோர்

12. மார்த்தாண்டம் ... 75
Martandam

13. ஆலமூரு ... 83
Alamuru

14. மாயனூர் ... 89
Mayanur

15. கிறிஸ்தவ மிஷன்கள் ... 96
Christian Missions

16. காங்கிரஸ் ... 105
The Congress

17. மைசூர் ... 114
Mysore

## மூன்றும் பாகம்
## கிராமச் சீரமைப்புத்திட்டம்

18. மாகாணப் பொருளாதாரக் கழகம் ... 121
Provincial Economic Council

19. கிராம அபிவிருத்தி ரிஜிஸ்டர் ... 128
Village-Improvement Register

20. சிரமைப்புத் தலைமைத்தலங்கள் ... 134
Rural Reconstruction Centres
21. ஜில்லாப் பொருளாதாரக் கழகம் ... 141
District Economic Councils.
22. ஸ்தல சுயஆட்சி ... 146
Local Self-Government

நான்காம் பாகம்

## அரசாங்க இலாகாக்கள்

23. பயிர்த்தொழில் ... 151
Agriculture
24. கால்நடை இலாகா ... 158
Veterinary Department
25. கைத்தொழில் ... 165
Industries
26. கூட்டுறவு ... 172
Co-operation
27. கல்வி ... 177
Education
28. முடிவுரை ... 183
Conclusion
அநுபந்தங்கள்

# PART ONE

# முதற் பாகம்

## சுயமுயற்சி

'The whole basis of rural reconstruction must be self-help', Brayne, *Presidential Address at the B. & O. Co-operative Congress.*

# 1

## சுத்தம்

## (CLEANLINESS)

நமது சென்னை மாகாணத்தில் ஏறக்குறைய 50,000 கிராமங்கள் இருக்கின்றன. அவற்றுட் சில பெரியன; சில சிறியன. சிலவற்றுள் ஒரே ஜாதிக்காரர் குடியிருக்கின்றனர்; சிலவற்றுள் பல ஜாதிக்காரர் கலந்து குடியிருக்கின்றனர். சில கிராமங்கள் மிகச் செழிப்பு வாய்ந்தவை; சில செழிப்பற்றவை. இங்ஙனமாகக் கிராமத்துக்குக் கிராமம் அமைப்பிலும் வளத்திலும் வேறுபடுகின்றது.

ஆனால் எல்லாக் கிராமங்களுக்கும் பொதுவான காரியங்கள் சில உண்டு; அவை அசுத்தம், நோய், வறுமை என்பன.

ஒரு கிராமத்துக்குள் நுழைந்தவுடனே இந்த மூன்று குறைகளும் தாமே தெரியும்.

ஓர் ஊரில் ஆறும் குளமும் இருக்குமானால், அவற்றின் பக்கங்களிலும் கரைகளிலும் ஜனங்கள்

மலஜலங்கழித்து, அவ்விடங்களை அசுத்தம் செய்திருப்பார்கள். ஊருக்குப் பக்கத்திலுள்ள மந்தை முதலான வெளிகளிலும் இவ்வாறே.

தெருக்களுக்குள் சென்றால், எச்சில் இலைகள், குப்பை கூளங்கள் முதலியன கொட்டிக்கிடப்பதைக் காணலாம். அவ்விடங்களில் ஈக்களும் கொசுகுகளும் மொய்த்துக்கொண்டிருக்கும்.[1] ஒரு பக்கம் வறட்டி தட்டிக் காயவைக்கப்பட்டிருக்கும். மற்றொருபக்கம் சிறுபிள்ளைகள் மலஜலங் கழித்து அசுத்தமாயிருக்கும். இப்படிப்பட்ட இடங்களிலேதான் பிள்ளைகளும் விளையாடிவருகின்றார்கள்.

கிராமங்களிலுள்ளவர்களுக்குச் சுத்தத்தின் அருமையும் அதைப்பற்றிய உணர்ச்சியுமே அற்றுப்

---

1. நகரசபை அமைக்கப்பட்டிருக்கும் இடத்திலும் இந்தக் கேடுகளா? சுதேசமித்திரன், மே, 28உ-யில் வெளிவந்த செய்தி: "வேலூர் கணேசபுரத்தில் சாக்கடைத் தண்ணீரை அப்புறப்படுத்தச் சரியான கால்வாய் கட்டாதபடியால் பின்பக்கத்தில் குளம்போல் தேங்கிக்கொண்டிருக்கிறது. அதனால் கொசு உபத்திரவம் அதிகமாய்இருப்பதோடு துர்க்கந்தமும் வீசுகிறது. பக்கத்தில் அநேக ஓட்டல்கள் (சிற்றுண்டி சாலைகள்) இருக்கின்றன. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவ்விடம் சாப்பிட்டு வருவதனால் துர்நாற்றம் வீசுவதுடன் ஈக்கள் அதிகமாகத் தொந்தரவும் கொடுக்கிறது."

போய்விட்டதுபோலும். கால் அலம்புவதும், குளிப்பதும், துணி துவைப்பதும், குடிப்பதும் ஒருகுளத்தில்! எல்லாக் காரியங்களும் இப்படி ஒரே இடத்தில் செய்யப்படுவது அதிர்ஷ்டந்தான் என ஒருவர் பரிகாசமாகக் கூறுகின்றார்.[1]

நீர்நிலைகளையும் வீடுகளையும் அன்றித் தம்முடலையும் உடையையும் அசுத்தமாக வைத்திருப்போர் பலர். "நல்ல வுடம்புக்கு நாழித்தண்ணீர்" என்று சிலர் பரிகாசமாகச் சொல்லுவார்கள்; அந்த நாழித் தண்ணீரைக்கூட நாள்தோறும் காணாத உடம்புகள் எத்தனையோ! "கூழானாலும் குளித்துக்குடி" என்பதும் "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்பதும் அல்லவோ நமது பழைய ஒழுக்கம்!

நமது பழையகாலத்துச் சுகாதார விதிகளை நன்றாய் ஆராய்ந்து பார்த்தால், நமது முன்னோர் எவ்வளவு நுட்பமான சுகாதார உணர்ச்சியுடையவர்களாயிருந்தார்கள் என்பது விளங்கும். அதிகாலையிலே எழுந்து குளித்துப் பூப்பறித்துக் கடவுளைத் தொழு

---

1. "Latrine, urinal, rubbish pit, bathing place, laundry and presumably drinking place for man and beast, all happily mixed up together! You are indeed lucky villagers" (Brayne, *Socrates Persists in India*, P. 32).

தல்,* குளிக்கும் இடத்தில் எச்சில் உமியாதிருந்தல், ஒருவர் படுக்கையில் மற்ரெருவர் படாதிருத்தல், ஒருவர் செருப்பை மற்றவர் அணியாதிருத்தல் முதலியன நமது பழைய ஒழுக்கங்கள். இவற்றைப் போற்றிவருகின்ற பலர் இன்றைக்கும் நம்மில் இல்லாமல் இல்லை. நாம் நம்மைத் தமிழ்மக்கள் என்று சொல்லிக்கொள்ளவேண்டுமானுல் நமது பழையஒழுக்கங்களை விடாமல் கைக்கொள்ளவேண்டுமன்ரே?

"சில ஊர்களில் குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லையே. குளிப்பதற்கும், உடை துவைப்பதற்கும் தண்ணீருக்கு எங்கே போவது?" என்று சிலர் கேட்பது உண்டு. இப்படிக் கேட்பவர்கள் முதலாவது தண்ணீர் வசதியுள்ள இடங்களிலுள்ள எல்லா

*1 'வைகறைத் துயிலெழு'—ஆத்திசூடி, 106.

2 'வைகறை யாமந் துயிலெழுந்து..' ஆசாரக்கோவை, 4.

3 'புலருமுன் புனலாடி நீருடி நம்புனிதன்
இலகுமாலயம் விளக்கி நந்தனப் பணியியற்றி
மலர்கொய்தாய்ந் தனர்தொடுத் தரன்புகழ் செவி
[மடுத்திவ்
வுலகவாணராய்ப் போக முற்றுறைகுநர் இவர்காண்'

திருவிளையாடற் புராணம், வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலம், 40.

4 'புலரியிற் சிவன்முத்தி புரேசனைக் காணப்பெற்ருல்...'
திருவிளையாடற்புராணம், மூர்த்திவிசேடம், 17.

மக்களையுமாவது சுத்தமாகவிருக்கக் கற்பிக்கவும் பழக்கவும் வேண்டும் அல்லவா?

தண்ணீர் வசதி அதிகமாக இல்லாத இடங்களிலுள்ளவர்களுக்கு என்ன செய்வது? "நீர்நிலைகளை உண்டாக்க அரசாங்கத்தார் பணம் கொடுக்கவேண்டும்" என்று சிலர் சொல்லுவர். இப்படிச் சொல்லுவோர் ஒரு சிறிய உண்மையை அறியாதவர். அரசாங்கத்தார் நமக்குப் பணம் கொடுக்கவேண்டுமானால், நாம் முதலில் அரசாங்கத்தாருக்குப் பணம் கொடுக்கவேண்டும். நாம் அதிகவரி கொடுத்தால்தான் கிணறு வெட்டுவதற்கும் குளம் வெட்டுவதற்கும் அரசாங்கத்தார் நமக்குப் பணங் கொடுக்கமுடியும்.

நமது பழைய தமிழ்மக்களின் வழக்கம் என்ன? அவர்களுக்குச் சென்னை போன்ற ஒரு மாகாண அரசாங்கத்தாரிடமிருந்தும், சிம்லா போன்ற ஒரு மத்திய அரசாங்கத்தாரிடமிருந்தும் பணம் வழங்கப்படவில்லை. நமது பழைய கிராமங்கள் பலவற்றில் வெட்டப்பட்டிருக்கும் குளங்கள், ஏரிகள் முதலியவை பெரும்பாலும் அவ்வவ்வூர் மக்களால்தான் வெட்டப்பட்டிருக்கவேண்டும். இவ்வுண்மை கீழ்க்கண்ட உதாரணங்களினால் விளங்கும்.

தண்டியடிகள் என்னும் பெயருடைய நாயனார் ஒருவர் இருந்தார். அவர் பிறவிக்குருடர். அவருக்கு ஒரு குளம் வெட்டவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. பிறவிக்குருடர் எப்படிக் குளம் வெட்ட

முடியும்? இதற்காக அவர் பின்வரும் உபாயத்தைக் கைக்கொண்டார். குளம் வெட்டவேண்டிய இடத்தில் ஒரு முளையையும், வெட்டிய மண்ணைப் போடவேண்டிய இடத்தில் வேறொரு முளையையும் அடித்துக் கொண்டு, இரண்டுக்கும் மத்தியில் ஒரு கயிற்றைக் கட்டி, அந்தக் கயிற்றைத் தம் வழிகாட்டியாக வைத்துக்கொண்டு ஒரு குளம் முழுதும் தாமே வெட்டி முடித்தார்.

> குழிவா யதனிற் குறிநட்டுக்
> கட்டுங் கயிறு குளக்குலையின்
> இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ
> டிசைத்துக் கட்டி யிடைத்தடவி
> வழியால் வந்துமண் கல்லி
> எடுத்து மறிந்துக் தடவிப்போய்
> ஒழியா முயற்சியா லுய்த்தா
> ரோதுமெழுத் தஞ்சுட னுயிர்த்தார்.[1]

நந்தனாரும் ஒரு குளம் வெட்டினதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தமது ஊரிலுள்ள அநேகரைத் திரட்டிக்கொண்டுபோய் அக்குளத்தை வெட்டினார் என்று கண்டிருப்பது கூட்டுறவு முறையின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றதல்லவா?

---

1. பெரியபுராணம், தண்டியடிகள்நாயனார் புராணம், 41.

சிவலோகம் உடையவர்தம்
திருவாயின் முன்னின்று
பவலோகம் கடப்பவர்தம்
பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வார்அலையப்
போவார்பின்(பு) ஒருசூழல்
அவலோடும் அடுத்ததுகண்(டு)
ஆதரித்துக் குளந்தொட்டார்.[1]

நமது நாட்டில் கிணறு குளங்கள் வெட்டுவது தருமமாகக் கருதப்பட்டு வந்தது. அவ்வாறு குளம் வெட்டும்போது அதன் பக்கத்தில் நந்தவனமும்[2] அமைக்கப்பட்டது. இப்பொழுதும் சில கிராமங்களில் வரிவிதித்துக் கிணறுகள் கோவில்கள் நந்த

---

1. பெரியபுராணம், திருநாளைப்போவார் நாயனர், 18.
2. திரிகடுகம், 16-வது செய்யுள்:—
   ‘கூவல் குறைவின்றித் தொட்டானும் ......
   சாவா வுடம்பு எய்தி ஞர்’. (கூவல்—கிணறு)

   திரிகடுகம், 70-வது செய்யுள் :—
   ‘காவோ டறக்குளம் தொட்டானும் ... ... ...
   செல்வ ரெனப்படு வார்’. (கா — நந்தவனம்)

   இனியவை நாற்பது, 24-வது செய்யுள் :—
   ‘காவோ டறக்குளம் தொட்டல் மிக வினிதே’

   பெரியபுராணம், திருநாவுக்கரசு, 36.
   ‘காவளர்த்துங் குளந்தொட்டுங் கட்டியாடு...’

வனங்கள் முதலியன அமைத்து வருகின்றனர். ஊர் ஒன்று கூடினால் அரிய பெரிய காரியங்களைச் செய்யலாம்.

உடலையும் உடையையும் சுத்தமாக வைத்துக் கொள்வதற்காகக் குளங்களை அமைக்கவேண்டும் என்பது மேலே கூறப்பட்டது. தெருக்களைச் சுத்தம் செய்வது எப்படி? நகரங்களில் குப்பை கூட்டுவோர் (Sweepers) அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அவ் வேலைக்காக நகரத்தார் வீட்டுவரி முதலான பலவரி களைச் செலுத்துகின்றார்கள். கிராமத்தார் இப்படிச் செய்யமுடியுமா? முடியாது. பின்னைத் தெருக்களைச் சுத்தம் செய்வது எப்படி?

நமது முன்னோர்கள் இதற்கு என்ன உபாயஞ் செய்தார்கள். என்று தெரியவில்லை. ஆனால் சீனர் கள் மிகப்பழைய காலந்தொட்டுக் கையாடிவரும் ஒரு சிறிய வழக்கத்தை நாம் கையாளலாம். அது குழிக் கக்கூசுகளை அமைப்பதாம்.

பத்து முதல் இருபதடி ஆழமும் பத்தடி அகலமுமுள்ள ஒரு குழியைத் தோண்டி அதன் வாயில் குறுக்காக ஒரு நெடுங்கல்லையாவது, அல்லது ஒரு சிறுதுவாரம் (hole) உள்ள வட்டக்கல்லையாவது இட்டு, குழியை மூடி, ஐந்து அல்லது ஆறடி உயரத் துக்குத் தட்டியினாலாவது இரும்பினாலாவது நான்கு பக்கமும் மறைத்து விட்டால், அது ஒரு சிறந்த கக்கூசு ஆகிவிடும். வீட்டிலுள்ள எல்லாரும் அந்தக்

குழியிலேயே மலஜலங் கழிக்கலாம். இக்குழிகளுள் இவ்வாறு சேர்க்கப்படும் மலமானது நிலத்துக்கு மிகச் செழிப்பான எருவாக மாறுகின்றது.

ஒரு சிறிய முறையினால் இரண்டு பெரிய நன்மைகள் உண்டாகின்றன. ஊர் சுத்தமாகின்றது; நிலங்களுக்கு எருச்சேருகின்றது. இந்த முறையைக் கையாளாவிட்டால் நாம் வியாதிகளை வரவழைப்பதோடு நிலத்துக்குச் சேரவேண்டிய எருவையும் அழிப்பவர்களாவோம்.

நமது தென்னாட்டில் குப்பைகூளங்களைக் குழிகளிற் சேமித்து வைக்கும் வழக்கம் கைக்கொள்ளப் பட்டுவருகின்றது. ஆனால் தெருக்களில் கிடக்கும் எல்லாவித அழுக்கையும் குப்பையையும் அந்தக் குழிகளுக்குட்போடுவதில்லை. தெருவைச் சுரண்டச் சுரண்ட நிலத்துக்கு அதிக எருக் கிடைக்கின்றது என ஒருவர் மிக்க அழகாகக் கூறியிருக்கின்றார்.*

எவ்வளவு எளிதான முறை.! இது இவ்வளவு எளிதாக இருப்பதனால்தான் அநேகர் இதன் பெரு

---

* "The more you scratch and clean the streets the more manure you will get." Brayne, *Socrates in an Indian Village*, P. 26.

மையைக் கவனிப்பதில்லை. இதனைக் கைக்கொள்ளுவதும் இல்லை.[1]

ஒவ்வொரு வீட்டிற்கும் குழிக்கக்குசு வைக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றி, அந்தச் சட்டத்தை மீறுபவர்களை அவ்வூர்ப் பஞ்சாயத்தாரால் தண்டித்தால் இந்த முறை கிராமங்களில் கைக்கொள்ளப்படும் என்று சிலர் கூறுகின்றார்கள்.[2]

தமிழ் மக்களே! உங்கள் உடல் சுத்தத்துக்கும் நிலவளத்துக்கும் அநுகூலமான ஒரு முறையை நீங்கள் கைக்கொள்வதற்குப் போலீஸாருடைய தடிகளும் சர்க்காருடைய பீனல் கோர்டுமா வேண்டும்? நீங்கள் உங்கள் கிராமங்களில் நல்வாழ்க்கைச் சங்கங்களை நிறுவுங்கள்.[3] இந்த முறை கைகூடும்.

ஊருக்கு வேண்டிய முக்கியமான முதற்காரியம் குழிக்கக்குசுகளும், எருக்குழிகளும்.[4] ஒவ்வொரு

---

1. "The evils of village life are in the main simple and so must be the remedies; and so they are. In fact it is their very simplicity that is often so baffling," *The Indian and the English Village*, P. 6.

2. *Socrates Persists in India*, P. 132.

3. கீழே 6 அத்தியாயம் பார்க்க.

4. "The very first thing is pits", *Brayne*, *Socrates Persists in India*, P. 94.



ஒரு ஊருக்கு முதன்மையாக வேண்டுவன எருக்குழிகளே
'The very first thing is pits.'

வீட்டிலும் ஒரு குழிக்கக்கூசும் ஒவ்வொரு ஊரிலும் பல எருக்குழிகளும் இருந்தால் ஊர் சுத்தமாகும்; நிலம் செழிக்கும்.

குழியின் பெருமையை ஒரு பாட்டாக அமைக்கலாம் என்று தோன்றுகின்றது.

**குழியுயர எருவுயரும்**
**எருவுயர நெல்லுயரும்**
**நெல்லுயரக் குடியுயரும்**
**குடியுயரக் கோனுயரும்.**

---

'In the current year. the Government have decided to utilise a sum of Rs. 2·75 lakhs for providing bcre-hole latrines in 100 selected villages in each area under the jurisdiction of a District Board.' (*G. O. No. 2819, P. H. 29—10—1935.*)

# 2

# நமது அயலார்

## (OUR NEIGHBOURS)

ஓர் ஊரிலுள்ள ஜனங்கள் எல்லாரும் தங்கள் வீடுகளையும் தெருக்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். சிலர் மாத்திரம் சுத்தமாகவிருந்து மற்றவர்கள் சுத்தமில்லாமலிருந்தால் சுத்தமாக விருக்கிறவர்களுக்கும் வியாதிகள் உண்டாகும்.

பக்கத்து வீட்டில் அழுக்கும் குப்பையும் கிடந்தால் அந்த வீட்டிலுள்ள துர்நாற்றம் அடுத்த வீட்டுக்குள்ளும் செல்லும். அசுத்தமுள்ள வீடுகளிலிருந்து வருகிற ஈக்கள் சுத்தமுள்ள வீடுகளிலுள்ள தண்ணீர் உணவு இவற்றின்மேல் போய் உட்கார்ந்தால் சுத்தமாக இருப்பவர்களுக்கும் வியாதி வருமல்லவா ?

ஓர் ஊரிலுள்ள ஜனங்கள் எல்லோரும் சுத்தமாக விருக்கவேண்டும். இந்த நியாயம் சேரிகளுக்கும் பொருந்தும்.

நமது கிராமங்களிலுள்ள சேரிகள் பெரும்பாலும் கிராமத்துக்கு வெளியே கட்டப்பட்டிருக்கின்

றன. நாம் சேரிகளில் வசிப்போரைத் தீண்டாதவர்கள் என்று விலக்கி, அவர்களைத் தொடாதும் இருக்கின்றோம். சுதாதார விதிப்படி இது நல்ல ஒழுங்காக இருக்கலாம். ஆனால் சேரிகள் சுத்தமாக இராவிட்டால் அங்குள்ள அசுத்தம் ஊருக்குள்ளும் பரவுமல்லவா ?

சேரிப்பக்கத்தில் மலஜலங்கழித்துக் கிடக்கும் அசுத்தம் காற்றுமூலமாக மற்ற இடங்களுக்கும் பரவும். அதன் பக்கமாய் நடப்போரின் கால்களிலும், ஆடுமாடுகளின் கால்களிலும் அவ்வசுத்தம் ஒட்டுவதன் மூலமாயும் வியாதிக் கிருமிகள் பரவும். இக்கிருமிகள் தண்ணீர்மூலமாக ஆகாரத்திலும் செல்லலாம். சேரிகள் சுத்தமாகவிராவிட்டால் உயர் குலத்தவர்களுடைய மூக்கு, வாய், செவி, குடல் எல்லாம் தீட்டாகிவிடும்.*

தீண்டாதவர்களை ஒதுக்கி வைத்துவிட்டால் நம்மைச் சுத்தமாக வைத்துக்கொள்வோம் என எண்ணுவது எவ்வளவு தவறு ! அவர்களைத் தீண்டாதார் என்று சொல்லவும் இனிக்கூடுமோ ? எல்லாத்

---

* "You are defiled everyday of your lives by what you eat, drink and breathe. Why bother about Chumars?" Brayne, *Socrates in an Indian Village*, P. 12.

துறைகளிலும் சுதந்தரம், சமத்வம், சகோதரத்வம் (liberty, equality and fraternity) என்ற தொனி கேட்கப்படுகின்றது. தீண்டாமை என்று சொல்வது அறியாமை!

நமது பழைய தமிழ்மக்கள் உயர்ந்த கொள்கையை உடையவர்கள். நாம் இப்பொழுது கொண்டிருக்கின்ற குறுகிய நோக்கம் அவர்களிடத்தில் இருக்கவில்லை. கீழ்க்குலத்தோர் கல்வி கற்றுவிட்டால் அவர்களை மேற்குலத்தோராகக் கருதினர்.

**வேற்றுமைதெரிந்த நாற்பா லுள்ளும்**
**கீழ்ப்பா லொருவன் கற்பின்**
**மேற்பா லொருவனும் அவன்கட்படுமே.[1]**

மேலும், அவர்களுள் அறிவு பக்தி உடையவர்கள் விளங்கினால் அவர்களுடன் சாப்பிடுதற்கும் உறவாடுதற்கும் அவர்கள் மலைக்கவில்லை.

---

1 புறநானூறு, 183.

இக்கருத்து நாலடியார், 195-வது செய்யுளிலும் காணப்படுகின்றது.

'நல்ல குலமென்றும் தீயகுலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவங்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்'.

சிவனெனு மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடின் அவனுட னுறைக;
அவனொடு கலந்து பேசுக; அவனோ டருகிருந்
துண்க; என்னும்
உவமையில் சுருதிப் பொருடனை நம்பா
உமரரோடு டன்பயில் கொடியேன்
இவரெனக் கழித்தால் ஐயனே கதிவே
றெனக்கில்லை கலசையாண் டகையே.[1]

கீழ்க்குலத்தோரில் அளவுகடந்த பக்தியுள்ளவர்கள் இருந்தால் அவர்களைக் கடவுளாகவே வணங்க வேண்டும் என்ற கொள்கை எவ்வளவு உயர்ந்தது என்று பாருங்கள்!

அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராயின்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாமே![2]

இவ்வளவு உயர்ந்த கொள்கையைக் கொண்டிருந்த தமிழ்நாட்டில் சில ஜாதிக்காரரையும் (எவ்வளவு சுத்த முடையவர்களாயிருந்தாலும்) ஹரிஜனங்களையும் கோவில்களுக்குள் நுழையக்கூடாதென்று தடுப்பது எவ்வளவு மடமை!

---

1 கலசைப் பதிற்றுப் பத்தந்தாதி.

2 திருநாவுக்கரசு, தனித்திருத்தாண்டகம், திருப்பாட்டு, 10.

கோவில்களைத் திறந்துவிட்டால்தானே ஹரி ஜனங்கள் சுத்தமாகவிருக்க முயல்வார்கள். ஹரி ஜனங்கள் சுத்தமாகுமட்டும் உயர்குலத்தோரெல்லாம் அசுத்தர்களே.

உங்கள் மதத்தின் உண்மைக்காகத் தீண்டாதா ரைக் கோவில்களுக்குள் செல்லவிடாவிட்டாலும் சுகா தாரத்துக்காகச் சுயநலங் கருதியாயினும் அப்படிச் செய்யுங்கள்!

சேரிகளைச் சுத்தம்பண்ணுவது உயர்குலத்தோர் கடமை. 'உன்னை நேசிப்பதுபோலப் பிறனையும் நேசி' என்பது இயேசுநாதரின் திருவுபதேசம்.

உயர்குலத்தோராகவுள்ள இந்துக்கள் ஹரிஜனங் களுக்குரிய உரிமையை மறுப்பதனால் அவர்கள் தலைவ ரான அம்பேத்கார் (Dr. Ambedkar) ஹரிஜனங்க ளெல்லோரும் வேறுமதம் புகவேண்டுமென்கின்றார். அது மட்டுமா? அவர் கூறுகின்ற சீற்றமொழியைச் சிறிது கேளுங்கள் :—

"பகுத்தறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் இடங் கொ டாத வேதங்களையும் சாஸ்திரங்களையும் 'டைனமைட்' (dynamite) வைத்துக் கொளுத்தவேண்டும்."

வேதங்கள் தீண்டாமையை வெறுக்கின்றன. சாஸ்திரங்கள் எல்லா மக்களையும் சமமாகப் பாவிக்கச் சொல்லுகின்றன. வேதங்களையும் சாஸ்திரங்களையும் அறியாதவர்களே தங்கள் அறியாமையினால் ஹரி ஜனங்களை இம்சித்து வருகின்றனர்.

வேதங்களைக் கொளுத்தவேண்டா. வேதங்களை வைத்திருப்பவர்களையும் கொளுத்த வேண்டா. வேதங்கள் வெறுக்கின்ற அசுத்தத்தையும் அழுக்கையுமே நமது கிராமங்களில் கொளுத்துவோம்.

சுத்தமுடையவர்கள் மனத்தில்தான் கடவுள் இருப்பார் என்ற நம் முன்னோருடைய கொள்கை 'பக்திக்குப்பின் வைத்தெண்ணப்படுவது சுத்தம்' (cleanliness is next to godliness) என்ற மேல் நாட்டுக்கொள்கையிலும் சிறந்ததல்லவா? சுத்தமே கிராம முன்னேற்றத்தின் முதற் படி. ஊரைச் சுத்தம் பண்ணும்போது சேரியையும் சுத்தம் பண்ணுவோம்.

---

"The Mysore Government have granted free sites to the Harijans for constructing their houses in the midst of Caste-Hindus." Associated Press, June 11, 1936.

# 3

## சுகம்

## (HEALTH)

ஊரைச் சுத்தப்படுத்தினால் பயிர்த்தொழில் விருத்தியடையும்; அதுவே சுகத்தைப் பெருக்கும் வழியுமாம். ஊரைச் சுத்தப்படுத்தினால் வியாதிகள் நீங்கும் என்பதற்கு ஆதாரம் வேண்டுவோர் நமது தேச மக்களின் மரணக்கணக்குகளைச் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

நமது சென்னை மாகாணத்தின் நிலைமை பின்வருமாறு:— *The Indian Year Book*, 1935, P. 603.

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| வியாதி | காலரா | வைசூரி | பிளேக் | காய்ச்சல் |
| மரித்தோர் | 5278 | 5363 | 1561 | 291416 |
| Percentage | 0·1 | 0·1 | 0·05 | 6·3 |

| | (5) | (6) | (7) |
|---|---|---|---|
| | வயிற்றளைச்சல் | சுவாச நோய்கள் | பிற நோய்கள் |
| ஷை | 80410 | 94312 | 513684 |
| | 1·7 | 2.0 | 11·2 |

நமது தேசத்தில் காய்ச்சல் வியாதிக்காகமட்டும் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைபெறுவோர் தொகை ஒரு கோடி! **1934**-ம் வருஷத்தில் காய்ச்சலினுல் இந்தியா முழுதிலும் இறந்தவர் தொகை **34½** லக்ஷம்.[1]

வேறு ஒரு தேசத்திலாவது காய்ச்சல், வயிற்றளேச்சல், காலரா, வைசூரி முதலான வியாதிகளினுல் இவ்வளவு மிகுதியான பேர்கள் இறப்பதில்லே. இந்த வியாதிகளுக்கு முக்கிய காரணம் அசுத்தம்; அசுத்தத்தை நீக்கினுல் இந்த வியாதிகளே முழுதும் தடுத்து விடலாம் என வைத்தியநிபுணர் கூறுகின்றனர்.

உதாரணமாக, 'மலேரியா', என்னும் குளிர்காய்ச்சல் கொசுகுகளின் மூலமாகப் பரவுகின்றது. கொசுகுகள் தங்கக்கூடிய நீர்நிலேகளே மூடிவிடுவதனுலும் அல்லது அவற்றுள் (கிரோசின்) மண்ணெண்ணெயை ஊற்றி விடுவதனுலும் மலேரியாக்காய்ச்சலே முழுதும்தடுத்து விடலாம். வங்காள மாகாணத்தின் சில பாகங்களில் ஏராளமான ஜனங்கள் வருடந்தோறும் இவ்விதக் காய்ச்சலினுல் மரித்துவந்தனர். சில இடங்களில் ஒரு கிராமம் முழுதும் அழிந்தும் வந்தது. ஆனுல் இதைத் தடுப்பதற்கு அம்மாகாணத்தில் ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டது. அதைச் சேர்ந்த

---

1. The *Journal of the Christian Medical Association of India*, Nov. 1935, P. 488.

வர்கள் ஒவ்வோரூரிலும் தண்ணீர் தேங்கிக்கிடக்கும் இடங்களில் கொசுகுகள் உற்பத்தியாவதைத் தடுத்தனர். மலேரியாவினால் இறப்பவர்களின் தொகை இப்பொழுது அம்மகாணத்தில் மிகவும் குறைந்துவிட்டது.[1]

மலஜலங்கழித்து அசுத்தம் செய்வதிலிருந்து வரும் கிருமிகளின் மூலமாக நரம்புச்சிலந்தி (Guinea worm), கொக்கிப்புழு (hookworm),[2] மதுரைப்புற்று, (Madura-foot), யானைக்கால் (elephantiasis) முதலான வியாதிகள் பரவுகின்றனவென்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். இந்தக் கிருமிகள் தண்ணீர், உணவு இவற்றின் மூலமாக மனிதர் வயிற்றுக்குள்ளும் செல்லுகின்றன. ஊரைச் சுத்தமாக வைத்தால் மேற்காட்டிய வியாதிகளைத் தடுத்துவிடலாம்.

நமது கிராம ஜனங்கள் மேற்காட்டிய உண்மைகளை நம்பமாட்டார்கள். "ஆறிலுஞ்சாவு, நூறிலுஞ் சாவு". "விதியை வெல்ல யாரால் கூடும்?" என்று

---

1. *Co-operation in India*, Haji, P. 137–144.

2. 'Soil pollution with human excreta is the prime factor favouring its spread' *Report of the Director of Public Health, Madras*, 1934-35. P. 20.

'At Tiruvellore hook-worm eggs were detected in 90% of the stool samples' *Ibid*, P. 21.

சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் வைத்தியர்களை ஏன் தேடவேண்டும்? "ஆஸ்பத்திரிகள் வேண்டும்" என்று கேட்பானேன்?

"நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்" என்று நம் முன்னோர் கூறவில்லையா? நோய்களைத் தடுக்கும் முறைகளிருந்தால் நாம் நோய்வாய்ப்படாதல்லவோ வாழவேண்டும். நம் முன்னோரிற் பலர் நோயற்று வாழ்ந்ததுமன்றி, நீண்ட ஆயுளும் உடையவராகவுமன்றோ வாழ்ந்துவந்தனர். கல்வி கற்பதன் நோக்கமே சாவாமல் இருப்பது என்று ஒரு கவி கூறுகின்றார். "சாவாமல் கற்பதே கல்வி." சிறுபிள்ளைகளும் நோயற்றிருக்கவேண்டும் என்பது நமது நாட்டு நெறி. **"குழவி பிணியின்றி வாழ்த லினிதே".**[1] ஒரு நாட்டுக்கு முதன்மையாக வேண்டுவது பாதுகாப்பு (defence). ஆயினும், அதைவிட முதன்மையானது அந்நாட்டு மக்கள் பிணியின்றுவாழ்வது என்னும் கருத்துத் தோன்ற, பிணியின்மையை முதலிலும் பாதுகாப்பைக் கடைசியிலும் வைத்து, ஒரு நாட்டுக்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவரின் கூற்று எத்துணைச் சிறப்பு வாய்ந்தது!

***பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்***
***அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.***[2]

---

1. இனியவை நாற்பது, 13.
2. திருக்குறள், நாடு, 8.

ஆகையினால் ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் ஊரைச் சுத்தமாக வைத்துக்கொண்டு வியாதிகள் வராமல் தடுக்கவேண்டும்.

வைசூரி வராதபடி தடுப்பதற்காக அம்மை குத்திக்கொள்ளவேண்டும். காலரா, பிளேக் முதலிய நோய்கள் வந்தால் அவ்வியாதிகள் அவ்வூரில் பரவாத படி ஊசி குத்திக்கொள்ளவேண்டும் (innoculation).

நமது தேசத்தில் ஆஸ்பத்திரிகள் மிகக்குறைவு. 41 ஆயிரம் ஜனங்களுக்கு ஒரு ஆஸ்பத்திரிதான் இருக்கின்றது; இது போதாது; அதிகமான ஆஸ்பத்திரிகள் கட்டவேண்டும் என்று சிலர் நினைக்கின்றார்கள்.

ஆஸ்பத்திரிகளை அதிகப்படுத்திவிடுவதனால் வியாதிகள் நீங்கா. அசுத்தமான நீர்நிலைகளும் கிணறுகளும், தெருக்களும், சாக்கடைகளும் — இவைகள் தாம் நமது கிராமக் கைத்தொழிற்சாலைகள் என்று ஒருவர் பரிகாசமாகக் கூறுகிறார்[1] — இருக்கும்வரைக்கும் ஆஸ்பத்திரிகளை அதிகப்படுத்துவதனால் பயன் இல்லை.

வியாதிகளின் உற்பத்திசாலைகளை அழித்துவிட்டால், கிராம மக்களுக்கு மருத்துவ சாலைகளும் வைத்தியர்களும் வேண்டா. மருந்தும் வேண்டா. இதுதான் நமது முன்னோருடைய கொள்கையும்.

---

1. Brayne, *Socrates Persists in India*, P. 132.

கிராமாந்தரங்களில் உள்ளவர்கள் மிக அதிர்ஷ்ட சாலிகள். நகரங்களிலுள்ள பல கேடுகள் அவர்களுக்கு இல்லை. வண்டிகளின் இரைச்சல், தெருப் புழுதி, சாக்கடை நாற்றம், நெருக்கடி (congestion) சுத்தக் காற்று இன்மை ஆகிய குறைகள் கிராமங்களில் கிடையா. நகரவாசிகளுக்குக் கிடையாத பல அநுகூலங்களும் கிராம வாசிகளுக்கு இலவசமாகக் கிடைக்கின்றன. ஊருக்கு வெளியே சென்றால் மனோரம்மியமான காற்று! கண்ணுக்கினிய பயிர்பச்சைகள்! கிராமவாழ்க்கை எவ்வளவு ஆனந்தமானது!

பிறப்பில் மக்கட்பிறப்பு மேலானது. மக்கட் பிறப்பினால் கிடைக்கும் பயனை அடைவதற்கு ஆதாரமாக இருப்பது உடல்.

> **அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்**
> **பெரும்பயனும் ஆற்றவே கொள்க.**[1]

உடல்நலம் உயிர்நலம். ஆதலால் உடலை ஓம்புதல் மெய்யறம். உடலை இயற்கை (nature) எனவும், உயிரை இறை (கடவுள்) எனவும் உண்மை கண்ட பெரியோர் கூறியிருக்கின்றனர்.

இவ்வளவு உயர்ந்த கொள்கையையுடைய நமது தமிழ் நாட்டிலுள்ள கிராம மக்கள் பற்பலவிதமான

---

1. நாலடியார், 34.

வியாதிகளினால் பீடிக்கப்பட்டு, உயிர்துறப்பது மிகவும் வருந்தத்தக்கது.

கிராம மக்களே! நீங்கள் நோயற்ற வாழ்வை விரும்பினால், உங்கள் உடலையும், உடையையும், வீடுகளையும் தெருக்களையும் ஊரையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் சுத்தமாகவிருந்தால் சுகாதார இலாக்கா (Public Health Department) ஒன்று அவசியமில்லை! அசுத்தமாகவிருந்து நமது சுகத்தை நாம் கெடுத்து, நம்மை வறியவர்களாக்கிக் கொள்வதுமன்றி, நமக்குள்ள அற்ப வருமானத்திலிருந்தும் வரி கொடுத்து, ஒரு தனி இலாக்காவையும் நாம் நடத்திவருவோமானால் நம் அறியாமையை என்னென்று சொல்வது!

---

'The villager is the centre of all village activities and unless he is physically fit, there can be no hope of improvement of any kind in the village'. Bharatan Kumarappa, Ph. D.

# 4

## உணவு

## (FOOD)

கிராமவாசிகளுடைய நோய்களுக்கு முதற் காரணம் அசுத்தம். இரண்டாவது காரணம் நல்ல உணவில்லாமை. நல்ல உணவு இல்லாமைக்குக் காரணம் வறுமைதான். "வறுமையை நீக்கிவிட்டால், எல்லாக் குறைகளும் தாமே நீங்கிவிடும்" எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆயினும், வறுமைக்குக் காரணங்கள் என்ன? ஒரு சில காரணங்கள் நம்முடைய அறியாமையினால் விளைவன அல்லவா? சிலர் தமக்குக் கிடைக்கும் நற் சந்தர்ப்பங்களை நெகிழவிடுகின்றனர். சிலர் தம்மிடமுள்ள பொருளைத் தகாதவழிகளிற் செலவிட்டு வறியராகின்றனர். சிலர் ஒரு உழைப்பும் இல்லாது சோம்பியலைகின்றனர். இப்படிப்பட்டவர்களின் வறுமை நோயைத் தீர்க்க இறைவனாலும் முடியாது.

இவர்களுடைய பசிப்பிணியை இவர்களுடைய முயற்சி தான் நீக்கமுடியும்.

சலியாத ஊக்கம் உடையவனிடத்தில் செல்வம் தானே வழிகேட்டுக்கொண்டு செல்லும் எனவும். "என் குடும்ப வாழ்க்கையை மேன்மையுறச்செய் வேன்" என்று உறுதிகொண்டு, அதற்கு ஏற்ற முயற்சிகள் செய்யும் ஒருவனுக்கு உதவிசெய்யும்படி தெய்வம் தனது ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு வந்து அவன் முன் நிற்கும் எனவும் திருவள்ளுவர் கூறியுள்ளார்:—

**ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா**
**வூக்க முடையா னுழை** [1]

**குடிசெய்வ லென்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்** [2]

வேலைசெய்து சம்பாதிக்கும் சிலர் தங்கள் பணத் தில் ஒரு பாகத்தைத் தகாதவற்றில் செலவழிக் கின்றனர். நமது நாட்டிலுள்ள சில ஹரிஜனக் கூலி ஜனங்கள் தாங்கள் சம்பாதிப்பதில் ஒரு பாகத்தைக் கள்ளுக்கடை சாராயக்கடைகளில் செலவிடுகின்றனர். "ஏன் அவ்வாறு செலவிடுகின்றீர்கள் ?" என்று

1. திருக்குறள், ஊக்கமுடைமை, 4.
2. ஷை குடிசெயல்வகை, 3.



கையினால் நெல்குற்றும் தொழில் ஒவ்வொரு ஊரிலும் போற்றப்படவேண்டும்.

கேட்டால், "உடம்பு நோவ வேலை செய்கின்றோம்; அந்நோவைத் தணிக்க நாங்கள் குடிக்கவேண்டியது அவசியம்" என்கின்றார்கள். எட்டணுச் சம்பாதித்து நாலணுவைக் கள்ளுக்கடையில் செலவழிப்பதைவிட நான்கணுவுக்கு மட்டுமே உழைத்துவந்தால் உடம்பு நோவாமல் இருப்பதுமன்றி, கள்ளுண்பதனுல் உடலுக்கு விளையும் கேடுகளும் இன்றிச் சுகமாக இருக்கலாமல்லவா?

நமது முன்னோர் உண்டுவந்த சில உணவுகள், உதாரணமாக, கேழ்வரகு, கம்பு முதலானவை மிக்கச் சத்துள்ளவைகளும் உடலுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடியவைகளுமாம் எனத் தற்கால உணவாராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றார்கள். ஆயினும், தற்காலத்திலுள்ள பல கிராம ஜனங்கள் இப்படிப்பட்ட உணவுகளை உண்பது நாகரிகம் அல்லவென்று நினைத்து, ருசியுள்ள, ஆனுல் பலமற்ற, அரிசியுணவை உண்கின்றார்கள். நல்ல உணவு உண்பதற்கு மிக அதிக வருவாய் அவசியமில்லை. தமக்கு இருக்கின்ற குறைந்த வருவாயைக்கொண்டும் சத்துள்ள உணவுகளை உண்டு சுகமாக வாழலாம்.

காப்பி, தேயிலை முதலான பானங்களையும் இப்பானங்கள் விற்கப்படும் கடைகளிற் செய்யப்படுகின்ற சிற்றுண்டிகளையும் அருந்தும் வழக்கம் கிராமங்களிலும் பரவிவருகின்றது. இப்படிப்பட்ட உணவுகள் தேகத்துக்கு ஆரோக்கியத்தை அளிப்பன அல்ல.

இயந்திரங்களின் உதவியினால் ஆலைகளிற் செய்யப்படும் சர்க்கரையும்* எண்ணெயும் இயந்திரங்களில் அறைக்கப்படும் அரிசியும் ஜீவசத்துக்கள் (Vitamins) அற்றவை. ஆகையினால் இப்படிப்பட்ட உணவுகளை நீக்கிக் கையினாற் குற்றப்பட்ட அரிசி, கையினாற் செய்யப்பட்ட வெல்லம் முதலான உணவுகளை உண்பது நல்லது.

சில கிராமங்களில் உள்ள ஜனங்களுக்குக் காய்கறி உணவுகளின் அருமை தெரிவதில்லை. தெரிந்தவர்களேனும் தங்கள் தோட்டங்களில் அக்காய்கறிச் செடிகளைத் தங்கள் உணவுக்காகவாகிலும் பயிரிட்டு வரலாம். இப்படிச் செய்தால் ஜனங்கள் நல்லுணவுண்டு சுகமாக வாழலாம்.

நமது கிராமஜனங்களுக்கு உள்ள வேறொரு குறை அவர்களுக்குப் பால் மோர் கிடையாதிருப்பது. சிறிது முயற்சிசெய்தால் அநேகர் இந்தக் குறையைத் தாங்களே நீக்கிக்கொள்ளலாம். ஏனென்றால், சில கிராமங்களில் நிலமில்லாத ஜனங்களிற் சிலர் ஒரே மாட்டை வைத்துக்கொண்டு நன்றாய்ப் பிழைத்து

---

* "Our analysis of palmyra gur gave the following figures. Cane sugar 86%, invert sugar 5%, and ash 2·2%. Ash contains calcium, magnesium silicate, phosphate, all of which are good for health" (*A. I. V. I. A. Report*, P. 13).

வருகின்றார்கள். வீட்டுக்கொரு மாடு இருக்குமானால் பாலுணவு கிடையாதிருக்கும் குறை நீங்கிவிடும்.

மேலும், நமது கிராமங்களில் புதிய முறையில் தேனீக்களை வளர்த்துத் தேனை எடுத்து அதனை அருந்தி வரலாம். இதற்கு வேண்டும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டால், (விவரங்கள் பின்னால் கூறப்படும்) கிராம மக்களுடைய உணவிலுள்ள சில குறைகள் நீங்கும்.

தற்காலத்தில் புதிய முறையில் கோழிகள் (poultry) வளர்க்கப்படுகின்றன. இதற்குரிய சங்கங்களில் (poultry clubs) கிராம ஜனங்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தால், (விவரங்கள் கீழே காட்டப்படும்) புலால் உண்போர் உணவிலுள்ள சில குறைகளும் நீங்கும்.

இவ்வாறாக, நமது கிராமஜனங்களுடைய உணவிலுள்ள பல குறைகளைக் கிராமஜனங்களே சிறிது முயற்சியினாலும், கூட்டுறவினாலும் நீக்கிக்கொள்ளலாம். பொருள்கள் குறைவாயிருக்கும் வறுமையைக் காட்டிலும் (poverty of material resources) அறிவும் முயற்சியும் குறைவாயிருக்கும் வறுமையே (poverty of ideas and enterprise) மிகக் கொடிது.

---

**கொடிது கொடிது வறுமை கொடிது**
**அதனினும் கொடிது அறிவி லாமை**
**அதனினும் கொடிது முயற்சியி லாமை.**

# 5

## வறுமை

## (POVERTY)

உணவு சம்பந்தமான குறைகள் எல்லாம் வறுமை காரணமாக எழுந்தன அல்ல; அவற்றுட் பெரும்பாலன கிராம ஜனங்களின் சுயமுயற்சியினாலேயே நீக்கத்தக்கன என முந்தின அத்தியாயத்தில் எடுத்துக்காட்டினோம். நமது கிராம ஜனங்களின் வறுமைக்குக் காரணமாகவுள்ள வேறு சில குறைகளையும் அவற்றை நீக்கும் முறைகளையும் இந்த அத்தியாயத்திற் கூறுவோம்.

பெரும்பான்மையான நமது கிராமங்களில் ஊர்ச்சாவடிகளும் மடங்களும் உண்டு. பழைய காலத்தில், சாவடிகளில் ஊர்ப்பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. மடங்களில் வழிப்போக்கர் தங்கிவந்தனர். ஆனால் இந்த இடங்கள் இப்பொழுது வீண்பொழுதுபோக்குகிறவர்களுக்கும் ஊர்ச்சோம்பேறிகளுக்கும் உறைவிடமாகிவிட்டன. பலர் அங்கு நாள் முழுதும் தூங்கித்

தூங்கிப் பொழுதுபோக்குகின்றனர். ஒரு ஊரின் வறுமையை அளவிடவேண்டுமானல் இப்படிப்பட்ட சாவடிகளும் மடங்களும் தகுந்த அளவு கருவிகளாகும் என்பதற்கு ஐயமென்னே? ஒரு ஊரின் வறுமையைப் போக்கவேண்டுமானல் சாவடிகளை வாசகசாலைகளாக்க வேண்டும். வீண் விளையாட்டுக்கள் விளையாடுவோரை அவற்றுள் நுழையவிடக்கூடாது. ஊர்க் கட்டுப்பாடு இருந்தால், இப்படிப்பட்ட விதிகளை விதித்து, மக்களை நல்வழிப்படுத்தல் மிக எளிது.

நமது கிராமங்களிற் சிலருடைய வறுமைக்கு முக்கிய காரணம் சோம்பல். "சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்" என்பது அவ்வையாரின் வாக்கு. சோம்பலைத் தன்னிடங்கொண்டு திரியும் அறிவீனனுடைய குடும்பம், அவன் அழிவதற்கு முன்னே அழிந்துவிடும்.

**"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து"** [1]

என்று திருவள்ளுவரும் கூறியிருக்கின்றார். "சோம்பலாயிருக்கின்றவர்களைத்தான் பேய் பாவச்செயல்களைச் செய்விக்கின்றது" என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி.[2]

---

1. திருக்குறள், மடியின்மை, 3.
2. Satan finds mischief for idle hands.

வேறு சிலருடைய வறுமைக்குக் காரணம் தீய பழக்கங்கள். சிலர் சூதாட்டத்தில் தங்கள் பொருளையும் காலத்தையும் நற்குணங்களையும் போக்கிக் கொள்ளுகின்றனர். சூது என்னும் மூதேவியால் ஆட்கொள்ளப்பட்டவர் இவ்வுலகில் தம் வயிறு நிறையார்; மறுமையில் நரகத்தில் வருந்துவார்.

"அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப்பட் டார்" [1]

என்று இவர்களைப்பற்றியே திருவள்ளுவர் கூறியுள்ளார்.

வேறு சிலர், விசேஷமாக நகரங்களை அண்மிய கிராமங்களில் வசிப்போர், வீண் ஆடம்பரங்களிலும், சிற்றின்பங்களிலும், நவீன நாகரிகப் பழக்கங்களிலும் தங்கள் பொருளைப் பொருட்படுத்தாது விரயஞ் செய்துவருகின்றனர். நற்கல்வியறிவை இவர்களுக்குப் புகட்டினால் இவருட் பெரும்பாலோர் தம் தீய வழக்கங்களை விட்டுவிடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும், கிராமங்களில் இப்படிப்பட்ட தீய பழக்கங்கள் வளருவதற்குக் காரணம் அவ்விடங்களிலுள்ள வாழ்க்கை இன்பமற்றிருப்பது என்கின்றனர் சிலர். ஆதலால் கிராமங்களில் ஆடல் பாடல், வேடிக்கைகள், விளையாட்டுகள், கழைக்கூத்து,

---

1. திருக்குறள், சூது, 6.

சினிமா முதலான படக்காட்சிகள் போன்றவற்றைப் பெருக்குவது நலம்.

சில வியவசாயிகளின் வறுமைக்குக் காரணம் மண் ஆசை. எல்லாத் தேசங்களிலும் கிராமவாசி களுக்கு மண் ஆசை அதிகம்; ஆனால் நம்முடைய தேசத்தில் அது மிகவும் அதிகம். ஓரடி நிலத்துக் காக ஓராயிரம் ரூபாயையும் நீதி ஸ்தலங்களில் செல வழிப்பர் சிலர். செழித்த வருடத்தில் சிறிது பொருள் கையிற்கிடைத்தால், அதை உடனே நிலத் திற் போட்டுவிடுகின்றனர். கைம்முதல் காணுவிட் டால், கடன்படுகின்றனர். நிலம் அந்த வருடம் விளையாவிட்டால், அடுத்த வருடம் விளையும், இன் னும் அதற்கடுத்த வருடம் விளையும் என முடிவில் லாக் கணக்கிட்டு இலவுகாத்த கிளி போல என்றும் ஏமாறுகின்றனர். இதற்கிடையில் வட்டி வளர்ந்து கொண்டேபோகிறது. கடைசியில், முதலுக்கும் மோசமாகும் நிலைமை வருகின்றது. அப்பொழுதாயி னும், "சட்டி சுட்டது கைவிட்டது" என்று விட்டு விடாமல், "பெரியோர்கள் சம்பாத்தியம்" என்ற மனப் பேய் பிடித்தாட்ட, உடும்பு பிடித்தாற் போல நிலத் தைச் சதமெனப் பிடித்துக்கொண்டிருந்து, முடிவில் எல்லாவற்றையும் இழந்து, கேடுறுகின்றனர். இக் கேட்டுக்குக் காரணம் நிலப்பைத்தியம். இப்பைத்தி யம் நீங்கினாற்றான் இப்படிப்பட்டவர்களின் வறுமை யும் நீங்கும்.

நமது தேசத்தில் நிலம் வாங்குவதில் அளவுக்கு மிஞ்சிய பணம் செலவிடப்படுகின்றது (over-investment in land). நிலத்தில் போடுகின்ற பணத்தைப் பாங்கிகளிலும் (banks) இன்சூரன்ஸ் கம்பெனிகளிலும் போட்டால், ஜனங்களுக்கு இலாபம்; நாட்டுக்கும் க்ஷேமம்.

கிராமவாசிகளில் வேறு சிலருடைய வறுமைக்குக் காரணம் கடன்படல். வீட்டில் சாப்பாட்டுக்கு இல்லாவிட்டால் கடன்! விதைப்பதற்கும் கடன்! களைபிடுங்குவதற்கும் கடன்! சுபகருமமாயினும் கடன்! அசுபகருமமாயினும் கடன்! சுருங்கச் சொல்லின் எல்லாவற்றிற்கும் கடன்! * கடன்வாங்கும்போது வட்டி எவ்வளவு எனக் கணக்குப்பாராது கடன்,

---

* 'Debt is the curse of the Indian farmer; for it robs him of the full fruit of his labour, saps his initiative, destroys hope and with it ambition and darkens the whole outlook of his life.' The Marquess of Linlithgow in '*The Indian Peasant*'.

'The money-lender is India's ruler'–Sir Daniel Hamilton.

'இந்திய வியவசாயி கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறக்கின்றான்' என ஓர் ஆங்கில ஆசிரியர் (Mr. Darling, *The Punjab Peasant in Prosperity and Debt.*) கூறுகின்றார்.

வாங்குகின்றனர். இதனால் விளையுங் கேடுகள் இவ்வளவு அவ்வளவு என வரையறுக்கமுடியா.

நாம் மேற்காட்டிய செலவுகள் வியவசாயிகளுக்கு அவசியமானவைகள். எல்லாருக்கும் ஏற்படக்கூடியவைகளும் ஆம். ஆனால் அவைகள் ஏற்கனவே சேமித்து வைத்திருக்கும் பொருளிலிருந்து செலவிடப்படவேண்டுமே யொழியக் கடன்பட்டுச் செலவழிக்கத் தக்கன அல்ல. 'தாளாளனென்பான் கடன்படா வாழ்பவன்'.[1] 'கடமுண்டு வாழாமை காண்டலினிது'.[2] தம் வருவாயில் காற்பங்கு சேமித்துவைப்பது நம் முன்னோர் வழக்கு.

**வந்த பொருளின் காற்கூறு வருமே**
**லிடர்நீக் குதற் கமைத்து**
**மைந்த விருகா ணினக்காக்கி மற்றைக்**
**காலே வழங்கிடுக.**

"ஏழைகளான வியவசாயிகள் எப்படிச் சேமித்து வைக்கக்கூடும்? அவர்களுடைய வருவாய் அவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கே போதுமானதாயிருப்பதில்லையே!" என்று சிலர் கூறுவர். எவ்வளவு குறைந்த வருவாயிருந்தாலும், அதிலும் ஒரு பகுதி

---

1. திரிகடுகம், 12.
2. இனியவை நாற்பது, 11.

யைச் சேர்த்துவைக்கலாம் என்பது எல்லோருடைய அநுபவம்.

**ஆகா(று) அளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகா(று) அகலாக் கடை.**[1]

ஆகையால், ஒவ்வொரு கிராமத்திலும் பொருள் சேமித்துவைக்கும் முறைகளையும் வழக்கத்தையும் பெருக்கவேண்டும். நமது தென்னாட்டிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்களிடமிருந்து 'செட்டு' (thrift) எப்படிப்பட்டது என்பதை நாம் நன்கு கற்கலாம். அன்னவர்களுடைய முறைகளை எல்லாக் குலத்தவர்களுக்குள்ளும் பரப்பினால் நமது கிராமங்களிலுள்ள வறுமையிற் பெரும்பாகம் நீங்கும். செட்டு தான் வறுமைக்கு மருந்து; எவ்வளவு வருவாயிருந்தாலும், செட்டு இல்லாவிட்டால் வறுமை நீங்காது.

---

"Thrift is an urgent lesson to be learnt. Increased production is of little value without thrift; it is merely pouring water into a leaky bucket." *Rural Reconstruction—A Note*, P. 39.

---

1. **திருக்குறள்,** வலியறிதல், 8.

# 6

## நல்வாழ்க்கைச் சங்கங்கள்
## (BETTER-LIVING SOCIETIES)

நமது கிராமமக்களின் நோய்க்கும் வறுமைக்கும் மூலகாரணமாக இருக்கும் அறியாமையை நீக்குவது எப்படி?

அறிவைப் புகட்டுவதே அறியாமையை நீக்கும் வழி. ஆனால் யாம் எடுத்துக்காட்டிய அறிவுரைகளைப் புகட்டத்தக்க அறிவுடையோர் கிராமங்களில் இல்லை. அவற்றைச் சாதித்துக் காட்டுவாரும் இல்லை. வெளியிடங்களிலிருந்து வருவோர் இந்நெறிகளை எவ்வளவு வலிமையாக எடுத்துக்காட்டினாலும், அவை பயன் அளியா. கிராமமக்களின் குறைகளை நீக்கவேண்டுமானால் கிராமமக்களே பிரசாரம் செய்யவேண்டும். அவர்களே அந்நெறிகளைச் சாதித்துக் காட்டவேண்டும். "இஃது எப்படி முடியும்" எனில் "நல்வாழ்க்கைச் சங்கங்களால் முடியும்" என்க.

நல்வாழ்க்கைச் சங்கம் என்பது ஒரு கூட்டுறவுச் சங்கம் (co-operative society). கொடுக்கல் வாங்கல்

(credit), விளைபொருள்களை விற்றல் (marketing) ஆகிய துறைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப் படுவதுபோல மக்கள் நற்பழக்கங்களை மேற்கொள்ள வும், தங்கள் கிராமங்களை மேன்மைப்படுத்தவும் நல் வாழ்க்கைச் சங்கங்கள் நிறுவப்படுகின்றன. இப் படிப்பட்ட சங்கங்கள் நமது மாகாணத்தில் இல்லை. பஞ்சாப் மாகாணத்தில் இருக்கின்றன. அவை அங்குச் சிறந்த வேலையைச் செய்துவருகின்றன. அவற்றை நம்முடைய மாகாணத்திலும் நிறுவ வேண்டும்.

நல்வாழ்க்கைச் சங்கங்களை நிறுவும் முறை பின் வருமாறு:—ஒவ்வொரு கிராமத்திலும் சுத்தம், சுகம், நற்பழக்கங்கள் ஆகிய இவற்றைப் போற்ற விரும்பு கின்ற இளைஞர் சிலரைக் கூட்டவேண்டும். அந்தக் கிராமத்தில் மதிப்பும் செல்வாக்கும் உடைய பெரி யவர் ஒருவரைத் தலைவராக வைத்து, அந்தச் சங்கத் தைக் கூட்டுறவு இலாகா அதிகாரியாற் பதிவுசெய்து கொள்ளவேண்டும். இதுவே நல்வாழ்க்கைச் சங்கங் களை ஆரம்பிக்கும் முறை.

இச்சசங்கங்கள் செய்யவேண்டும் வேலை கிராமத் துக்குக் கிராமம் வேறுபடும். ஆனால், எல்லாக் கிராமங் களுக்கும் பொதுவான சில வேலைகளும் உண்டு. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் சுகாதார விஷயமாகச் செய்யவேண்டுவன:—(1) எருக்குழிகளும் குழிக்



நல்வாழ்க்கைச் சங்கங்கள் செய்யவேண்டிய முதல் வேலை, எருக்குழிகளும் குழிக்கக்குசுகளும் அமைத்தல்.

கக்குசுகளும் அமைத்தல், (2) உபயோகமில்லாமல் நீர் தேங்கிக்கிடக்கும் குளங்குட்டைகளைத் தூர்த்தல், (3) குளங்களையும் கிணறுகளையும் சுத்தஞ் செய்தல், சுற்றுச்சுவர் கட்டல், நந்தவனங்கள் அமைத்தல், (4) அதிகாலையில் எழுந்திருத்தல் முதலான நமது பழைய ஒழுக்கங்களைத் தாங்கள் கைக்கொள்ளல், அவற்றை மற்றவர்கள் கைக்கொள்ளும்படி தூண்டல், (5) சேரிகளைச் சுத்தம் செய்தல், ஹரிஜனங்கள் முன்னேற்றத்துக்கு உதவி செய்தல், (6) ஊரில் தொற்று வியாதிகள் பரவாததற்குரிய முயற்சிகளைச் செய்தல், நோய்களைத் தடுப்பதற்கான நல்லொழுக்கம், உடற்பயிற்சி, நல்லுணவு இவற்றைப் பற்றிய அறிவைப் புகட்டல் போல்வனவாம். பொருளாதார விஷயமாய்ச் செய்யவேண்டுவன: ஆடுமாடுகள் வளர்த்தலும், பயிர்த் தொழில், கைத்தொழில் ஆகிய இவற்றின் அபிவிருத்திக்குரிய முயற்சிகளைச் செய்தலும் இன்னும் இவை போன்ற பிறவும் ஆம்.

"இவ்வளவு காரியங்களையும் கிராமமக்கள் சாதித்துக்கொள்ளுவார்களா? சாதிக்கவல்லவர்களாயிருந்தால் கிராமங்களில் இவ்வளவு குறைகளும் இன்றுவரைக்கும் காணப்படுமா ? இவைகளைச் செய்யத்தக்க திறமையாவது பொருளுதவியாவது கிராமவாசிகளுக்கு உண்டா?" என்று வினவலாம். இந்த எல்லா வினைக்களுக்கும் உடன்பாட்டிலேயே யாம் விடையளிக்கத் தயாராயிருக்கின்றோம்.

யாம் இங்குக் காட்டிய சேவைகள் எல்லாம் கிராமமக்களாலேயே எவ்விதப் பணச்செலவுமில்லா

மல் செய்துகொள்ளத்தக்கன. இதற்கு வேண்டுவதெல்லாம் நல்லுணர்ச்சியும், ஊர் ஒற்றுமையும் கூட்டுறவு முறையும் ஆம். ஊர் கூடுவதுதான் அரிது. ஊர் கூடிவிட்டால் எவ்வளவு பெரிய தேரானாலும் இழுத்துவிடலாம். ஊரைக் கூட்டுவிப்பதும் ஒவ்வொரு ஊர் மக்களையும் தத்தம் குறைகளைத் தாங்களே நீக்கிக்கொள்ளும்படி நல்வாழ்க்கைச் சங்கங்களை அமைப்பதும் அரசாங்கத்தாருடைய கடமை.

ஒவ்வொரு நல்வாழ்க்கைச் சங்கத்துக்கும் ஒவ்வொரு ரிஜிஸ்டரும் அச்சங்கத்து அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒரு பேரேடும் இருக்கவேண்டும். அப்பேரேட்டில் ஒவ்வொரு அங்கத்தினரும் தனது அபிவிருத்தியைக் குறிப்பிட்டுவருவது அவசியம். அப்படிச் செய்துவந்தால் அது அவ்வூர் மக்களின் முன்னேற்றத்துக்கு மிக்க ஊக்கம் அளிப்பதாகும். மாதிரிப் பேரேடு ஒன்று கீழே காண்க.

தாலூகா............கிராமம்............நல்வாழ்க்கைச்சங்கம் நிர்.

அங்கத்தினர் பெயர்........................................

| வருஷம் | குடும்பத்திலுள்ள அங்கத்தினர் | சுகம் Health | வருமானம் 1) நிலம் 2) ஆடு 3) மாடு 4) பிற | கடன் | | சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | தீர்த்தல் | |
| 1936 | | | | | | |
| 1937 | | | | | | |
| 1938 | | | | | | |
| etc. | | | | | | |

# 7

## நகையணிதல்

## (JEWELLERY)

நமது தேசத்தில் ஆண்களும் பெண்களும் சிறுவர்முதல் பெரியோர்வரைக்கும் எல்லோரும் நகையணிகின்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் செல்வநிலைக்கும் குலவொழுக்கத்துக்கும் தக்கதாக நகையணிகின்றார்கள்.

நகையணிவதற்கு மூன்று முக்கிய காரணங்கள் கூறுகின்றனர். அவை (1) அழகு (2) வழக்கம் (3) பொருளைச் சேமித்துவைக்கும்முறை என்பன.

அழகுக்காக நகையணிவது மக்கள் இயற்கை. அழகு உணர்ச்சி மிகுந்த நமது தேசத்தில் நகையணிவதைக் குற்றமாகக்கொள்ளக்கூடாது. ஆனால் தகாதவர்கள் நகையணியும்போதும், அணியத்தகுந்தவர்கள் அளவுக்குமிஞ்சி அணியும்போதும் அதைத் தடுப்பது நியாயமே.

மக்கள் முதலாவதாகக்கொள்ளவேண்டும் அழகு உடற் சுத்தத்தாலும் உடைச் சுத்தத்தாலும் உண்டாகும் அழகே. செலவில்லாமல் குளிக்கமுடியும் போதும், சிறிது செலவில் நல்ல உடை அணியமுடியும் போதும், இவையிரண்டையும் செய்யாமல், மிக அதிகச் செலவில் நகைசெய்து போட்டுக்கொண்டலைவது மிக விபரீதம் என ஒரு ஆங்கிலேயர் கூறுகின்றார்.* நமது பண்டைத் தமிழ்மக்களின் கொள்கை இதனினுஞ் சிறந்தது. அவர்கள் கூறியது:--பெண்கள் உடைச்சுத்தத்தாலும் உடற்சுத்தத்தாலும் பெறும் அழகைக்காட்டிலும் கல்வியறிவாற் பெறும் அழகே சிறப்புடையது என்பதாம்.

**குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து**
**நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு.**

மக்கள் முதலாவதாகப் பெறவேண்டும் அழகு உடற் சுத்தம் உடைச்சுத்தம், கல்வியறிவு இவற்றால்

---

* "What an amazing thing to do! You allow yourselves and your families to go dirty and in rags when washing costs nothing and clothes not a very great deal and then counteract the slovenly and dirty result by expensive jewellery" *Socrates in an Indian Village*, P. 14.

உண்டாகும் அழகே. இதைப் பெற்றபின் பொருள் எஞ்சினுல் அதனை நகையிற் செலவிடலாம்.* அன்றேல் எல்லா மக்களும் நகையணியாமல் இருத்தல் நலம்.

கடந்த ஐரோப்பிய யுத்தம் நடந்த காலத்தில் மேல்நாடுகளில் நாணயஞ் செய்வதற்குத் தங்கம் இல்லாதிருந்தமையால், தங்கத்தையும் தங்க ஆபரணங்களையும் உடையவர்கள் எல்லோரும் அவற்றை அரசாங்கத்தாரிடத்தில் கொடுத்துவிடவேண்டும் எனச் சட்டம் இயற்றப்பட்டது. எழுதப்படிக்கத் தெரியாத ஆணுவது பெண்ணுவது நகையணியக் கூடாது என்ற ஒரு சட்டம் இயற்றினுல் நமது தேசத்தில் நகையணியும் வழக்கம் எவ்வளவு குறையும்! கல்வியறிவும் எவ்வளவு தீவிரமாகப் பரவும்!

நகையணிவதற்கு இரண்டாவது காரணம் 'வழக்கம்' (custom). கிராமங்களில் காதைத் துளைக்காத

---

* நமதுநாட்டு நகைகளிற் பல அழகைக் கொடுப்பனவாக இராமல், அழகைக் கெடுப்பனவாக இருக்கின்றன. சில ஆண்கள் (கிராமங்களில்) அணிந்துவரும் முருகு, வண்டிக் கடுக்கன் முதலானவைகளும், பெண்கள் அணிந்துவரும் தோடு, மாட்டல், குருடு, ஒன்னப்பூ, கொப்பு, முருகு. மூக்குத்தி, அடுக்குவளையல், தோட்காப்பு, கடகம், தண்டைக்கொலுசு, ஐவர்ணம் முதலானவைகளும் மிக்க விகாரமானவைகள்.

பெண்களை இன்றைக்கும் மூளி என்று அழைக்கின்றார்கள். ஏனென்றால் எல்லோரும் நகையணிகின்றார்கள். ஒருவர் அணிவதைப் பார்த்து மற்றவர்கள் அணிகின்றார்கள். குறைவாக நகை அணிந்திருப்பவர்கள் அதிகமாக நகை அணிந்திருப்பவர்களைப்பார்த்து அவர்களைப்போலத் தாங்களும் அதிகமாக அணிய முயலுகின்றார்கள். ஒவ்வொருவரும் இப்படி செய்வதனால் நகையணிதல் நாளுக்குநாள் அளவுக்குமிஞ்சி வளர்ந்துகொண்டுபோகின்றது.* இந்த வழக்கத்தைத் தடுக்கவேண்டும்.

நம் நாடு கல்வியிலும் செல்வத்திலும் செழித்து வளர்ந்துநிற்கும்போது நாம் ஆபரணங்களைச்செய்து அணிந்துகொள்வது குற்றமல்ல; ஆனால் அது கல்வியின்மையிலும் வறுமையிலும் ஆழ்ந்துகிடக்கும் பொழுது நாம் அவ்வாறுசெய்வது குற்றமாகும். நகையணியும் வழக்கம் குறையவேண்டுமானால், நகரங்களிலுள்ள உயர்குலப்பெண்கள் தாங்கள் மிகுதியான நகையணியும் வழக்கத்தைக் குறைத்து, அக்கொள்கையைக் கிராமமக்களுக்கு எடுத்துக்காட்டவேண்டும்.

* இஃது ஐரோப்பாவில் ஆயுத உற்பத்தி மிகுவதைப் போன்றிருக்கின்றதல்லவா? அங்கு, ஒவ்வொரு தேசமும் அடுத்த தேசத்தைப் பார்க்கிலும் அதிகமான ஆயுதங்களைச் செய்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என எண்ணுகின்றது. இதனால் ஆயுத உற்பத்தி மேலும் மேலும் வளர்ந்துகொண்டுபோகின்றது.

நகையணிவதற்கு மூன்றுவது காரணம் அது பொருள் சேமித்துவைக்கும் முறையெனக் கருதப் படுவது. இக்கொள்கை முற்றும் பிழைபாடுடையது. அது எவ்வாறெனக் கீழே விளக்கிக் காட்டுவோம்.

மக்கள் பெரும்பாலும் தாம் சேமித்துவைக்கும் பொருளிலிருந்துதான் நகை செய்கின்றுர்கள்; ஆயினும் பொருள் சிறிது குறைவாயிருந்தால் அதற்காகக் கடன்வாங்குகின்றனர். ஒரு சிலர் கடன் பட்டே நகைசெய்கின்றனர். அஃது பொருளைச் சேமித்து வைப்பதற்குக் காரணமாக இராமல் கடன்பட்டுப் பொருளை இழப்பதற்குக் காரணமாக முடிகின்றது. நகைசெய்வோரை நாம் நகைசெய்யாமல் (இகழாமல்) இருக்கமுடியுமா!

நகை செய்யத்தொடங்கும்பொழுது கடன்! செய்யும்போதோ நஷ்டம்! அதுவும் நமது தமிழ் நாட்டுப்பொற்கொல்லரிடம் செய்தால்! தட்டார் தாய்ப் பொன்னிலும் மாப்பொன் எடுப்பர் என்பது நமது நாட்டுப் பழமொழி. ஒட்டுவைத்தாலுங்கூடக் கால் வராகனெடைப் பொன்னிலும் ஒருமாப் பொன்னைப் பேராசையால் மோசஞ்செய்யாதிருக்கமாட்டான்; அவ்வாருயினும் நகைகள் செய்யாதிருக்கமாட்டான்; (செம் பொன் மலையாகிய மேருவைக் கட்டாகக் கட்டி ஒரு கடுகு அளவாக நிறுத்துக்காட்டக்கூடிய தட்டானுக் குப் பயந்தல்லவா சிவபெருமான் பொன் நகைகள் செய்து அணியாமல் பாம்புகளை அணிந்துகொண்டார்!)

"ஒட்டாக ஒட்டியும் காற்பொன்னில்
மாப்பொன் உலோகமதாய்த்
தெட்டாதிரான்; பணிசெய்யாதிரான்;
செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டிக் கடுகளவாய்
நிறைகாட்ட வல்ல
தட்டானுக் கஞ்சியல்லோ அணிந்தான்/
சிவன் சர்ப்பத்தையே!"

என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவரும் பாடியிருக்கின்றார்.

நூறு ரூபாய் நகை செய்தால் கூலி, சேதாரம், முதலியவை நீங்கச் சுமார் தொண்ணூறு ரூபாய் மதிப்புள்ள பொருள்தான் கைக்கு வரும். அதுவும் தட்டான் மிக உண்மையும் நாணயமும் உடையவனாக இருந்தால்! அன்றேல், நூறுரூபாய் நகையானது எண்பது முதல் பத்துரூபாய்வரைதான் தேறும்! உண்மையில் நம் கொல்லர் பொருளைக் கொல்பவரே யாவர்! "நகையைச் செய்து பொருளைச் சேமித்து வைக்கின்றோம்" என்போர் கூற்று எவ்வளவு பிழைபாடுடையது!

நகைகளைச் செய்யும்போது நஷ்டம் எனக் கூறினோம்; அவைகளை அணியும்போதும் நஷ்டம்தான். ஏனென்றால், அணிய அணிய அணிகலன்கள் தேய்கின்றன. தேய்ந்து கெடும் நகைகளைத் திரும்பத் திரும்பப் புதிப்பித்துச் செய்யவேண்டும்; திரும்பச்

செய்யவேண்டாத நகைகளும் தேய்வதனாலேயே தம் விலைமதிப்பையும் இழக்கின்றன. எனவே, நகை செய்வோருடைய பொருள் புகைபோலப் போய்விடுகின்றதேயன்றி, சேமித்துவைக்கப்படும் பொருளைப் போல நிலைபெறுவதுமில்லை, பெருகுவதுமில்லை.

நகைகளை அணிந்திருக்கும் காலத்திலும், அவற்றை அணியாது கழற்றிவைத்திருக்கும் காலத்திலும் வேறொரு பெரிய நஷ்டமும் விளைகின்றது. நகையணிந்து விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியர்களுடைய நகைகளைத் திருடும் திருடர்கள் அப்பிள்ளைகளுடைய உயிரையும் போக்கிவிடுகின்றார்கள். பொருளும் உயிரும் ஒருங்கே போய்விடுகின்றன! எத்தனை பெரிய பணக்காரர்கள் வீட்டில் நகைக் களவுகள் நடந்துவருகின்றன! நகையைச் செய்து பொருளையும் உயிரையும் பகைவர்க்கு இரையாக்குவது பேதைமையல்லவா?

பெற்றோர் தமது பெண்கள் செல்வமாய் வாழ வேண்டும் என்றெண்ணி, அவர்களுக்கு மிகுந்த அணிகளையிட்டு அவர்களை மணஞ்செய்து வைக்கின்றனர். ஆனால் இம்மக்களை மணந்த ஆடவரிற் சிலர் இவ்வணிகளை விற்றுச் சூதாட்டத்திலும் கள்ளுண்ணலிலும் செலவிடுகின்றனர். இவ்வாறு சில வேளைகளிற் பெண்களுக்கு அணிகள் பிணிகளாக மாறுகின்றன.

கடைசியாக, நகைகளைச்செய்து அணிந்துகொள்வதால் விளையும் வேறொரு நஷ்டத்தைப் பற்றியும்

நாம் இங்குக் குறிப்பிடவேண்டும். அஃது, இந்நகைகளின் விலை மதிப்பில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு. விலை இறங்கினால் நகைமதிப்புக் குறைகிறது; எனவே நஷ்டம். விலை ஏறினால் இலாபம்; ஆனால் விலை ஏறுங் காலத்தில்தான் சிலர் நகைகளை விற்க ஆரம்பிக்கின்றனர். நமது தேசமக்களுடைய தங்க நகைகளில் மிகுதியானவை கடந்த இரண்டு மூன்றாண்டுகளுக்குள் நமது தேசத்தைவிட்டுப் போய்விட்டன. பொருளைச் சேமித்து வைப்பவர் அப்பொருளை நிலம் வாங்கல், கிணறு வெட்டல் ஆகிய பொருள் அபிவிருத்திக்கான துறைகளிற் செலவிட்டிருந்தால், நம்மிடத்துள்ள பொருள் நமது தேசத்தைவிட்டுப் போயிராதன்றோ?

இங்ஙனமாக, நகையினால் விளையும் நஷ்டங்கள் பல. அவற்றைக் கீழ்க்கண்டவாறு ஒரு செய்யுளில் அமைக்கலாம் :

**நகையினைச் செய்நாள் நட்டம்;**
**அணிந்திடுநாளும் நட்டம்;**
**நகையி (ல்) ஆடவரால் நட்டம்;**
**விலைதணிந் திடினும் நட்டம்;**
**பகைவர்கைப் படின் பொருள்**
**உயிருடன் நட்டம்;**
**நகையுறல் நகையா (ல்) எந்நாள்**
**என்றைக்கும் நட்டமானால்!**

மேல்நாட்டார் நம்மைப்போல நகைகளிற் பணத்தைச் செலவழிப்பதில்லை. நாற்பது ரூபாய்ச் சம்பளம் வாங்கும் ஓர் இந்தியன் நாலாயிரம் ரூபாய்ச் சம்பளம் வாங்கும் ஓர் ஆங்கிலேயனைக் காட்டிலும் அதிக நகை வைத்திருக்கின்றான். ஆங்கிலேயர் தங்கள் பணத்தை உடையிலும், உணவிலும், பிள்ளைகள் கல்வியிலும், தாம் குடியிருக்கும் இடத்திலும் இன்னும் தமது வாழ்க்கைக்கு இன்பம் தரக்கூடிய பல துறைகளிலும் செலவிடுகின்றனர். மீதியான பணத்தைப் பாங்கிகளில் சேமித்து வைக்கின்றனர். ஆங்கிலேயரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டும் ஒழுக்கங்களில் இதுவும் ஒன்று.

---

"The money spent in each village gold-smith's shop is sufficient to run a female dispensary and to train and pay for a good *dai*. The cost of the ordinary Section 320 I. P. C. case would suffice for a stud bull, and the money spent on liquor would metal all the roads in the Punjab," *Socrates Persists in India*, P. 132.

# 8

## பெண்கள்

## (WOMEN)

ஒரு தேசமக்களில் ஏறக்குறைய பாதிப் பேர் பெண்கள். பெண்கள் முன்னேற்றமடைந்தாற்றான் கிராம முன்னேற்றம் முற்றுப் பெற்றதாகும்.

ஆனால், நமது தேசத்தோர் இவ்வுண்மையை உணர்வதில்லை. பெண்களைப்பற்றியும் பெண்களுடைய அந்தஸ்து, உரிமைகளைப்பற்றியும் தவறான எண்ணங்கள் நமக்குள் இருந்துவருகின்றன. இவை நம் கிராமங்களில் மிகவும் அதிகம்.

முதலாவது: பெண்ணைப் பெறுவது இழிவு என்று எண்ணுகின்றோம். "உன் பெண்டாட்டி பெண்ணைப் பெற!" என்று ஒருவனை வைவதும் நம் நாட்டில் வழக்கமாயிருக்கின்றது. பெண் பிறக்கும் பொழுதே வீட்டிலுள்ளவர்களுடைய மகிழ்ச்சி அற்றுப்போகின்றது. 'பெண் பிறந்த வீடு போல' என்பது நம் நாட்டுப் பழமொழி அல்லவா?

இரண்டாவது: பெண்குழந்தைகளுக்குப் பெரும்பாலும் நல்ல உணவு கொடுப்பதில்லை. இதனால், ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண்குழந்தைகளே மிகவும் அதிகமாய் மரிக்கின்றனர் என வைத்தியநிபுணர் கூறுகின்றனர்.

மூன்றாவது: நம் நாட்டார் தமது பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதில்லை. "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேன்?" எனச் சில அரைப்படிப்புள்ள ஆண்கள் இன்றைக்கும் சொல்லிவருகின்றார்கள். இது நமது பழைய தமிழ்நாட்டுக் கொள்கை யல்ல. ஆண்களும் பெண்களும் எல்லா விஷயத்திலும் சமமாக இருக்க வேண்டும். "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" என்றார் தமிழிற் பெரிய இலக்கணம் இயற்றியருளிய ஆசிரியர் தொல்காப்பியனாரும்.[1]

---

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், 2.

" ஒத்த உரிமையளா.........................
..............................கற்றறிஞர்ப்
பேணுந் தகையளாக் கொண்கன் குறிப்பறிந்து
நாணுந் தகையளாள் பெண்'

என்னும் 32-வது இன்னிலைச் செய்யுளுக்கு உரையெழுதியவர்: ஒத்த உரிமையளா=(வயது, கல்வி, செல்வம் முதலியவற்றில் கணவனுக்கு) ஒப்பான உரிமையை உடையவளாகவும் எனவும்; கற்றறிஞர்ப் பேணும் தகையளா=பல நூல்களையும் (அவன்) கற்று அறிஞரைப் பேணும் தன்மையுடையளாகவும் எனவும் பொருள்கண்டிருக்கின்றார்.

இயற்கை யழகைவிடக் கல்வியறிவே மேலான அழகு எனப் பல புலவர்களும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

**'இடைவனப்பும், தோள்வனப்பும், ஈடின் வனப்பும்**
**நடைவனப்பும், நாணின் வனப்பும்— புடைசால்**
**கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோ**
**டெழுத்தின் வனப்பே வனப்பு'**

மேலும், இந்நாடு அவ்வையார், காக்கை பாடினியார், காவற்பெண்டு, பாரிமகளிர், பேய்மகள் இளவெயினி, கழார்க்கீரன் எயிற்றியார், காமக்கணிப் பசலையார், நக்கண்ணையார், நல்வெள்ளியார், நம்பசலையார், வெள்ளிவீதியார், காமக்கண்ணியார் முதலான பல பெரிய பெண் புலவர்களும் இருந்த நாடு. அன்றியும், இந்நாடு கல்விக்குத் தெய்வமாகப் பெண்ணையே கொண்டுள்ள நாடு.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நமது நாட்டில் கல்விப் பயிற்சியுள்ள பெண்களின் தொகை மிகக் குறைவு. கல்வி கற்றுக் கிராமங்களிலேயே வாழ்ந்து வரும் பெண்களின் தொகையோ மிகமிகக் குறைவு.

பெண்கள் கல்வி கல்லாவிட்டால் அவர்களுடைய பிள்ளைகளுடைய கல்வியின்மேல் அவர்களுக்கு எப்படி அக்கறை ஏற்படும்? நான்காம் வகுப்புவரை கல்வி கற்றபிள்ளைகள் பள்ளிக்கூடத்தைவிட்டுநீங்கிய சிறிது காலத்திற்குள் தாம் கற்ற கல்வி முழுவதையும்

மறந்துவிடுவதற்குக் காரணம் அவர்கள் தாய்மார் கல்விப்பயிற்சி யற்றவர்களா யிருப்பதுதான் என ஒருவர் மிக நுட்பமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார்.[1] ஆண் கல்வி ஓங்கவேண்டுமானால் முதலில் பெண் கல்வி ஓங்கவேண்டும் என்னும் உண்மையை மனத்திற் கொள்க.[2]

கல்வி கல்லாத பெண்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சுகம், நல்லொழுக்கம் முதலானவற்றை எப்படிக் கற்றுக்கொடுக்க முடியும்? ஒரு தேசத்தின் பழக்கவொழுக்கங்களெல்லாம் வீட்டிலுள்ள தாய்மாரைப் பொறுத்தன. ஆதலால், தேச முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது பெண் கல்வி. பெண்கள் முன்னேற்றமே தேசமுன்னேற்றம்.[3]

---

1. "The lapse into illiteracy of so many boys after leaving school is entirely due to the illiterate atmosphere of the homes to which they return from school" (Brayne). Also *Rural Reconstruction*, P. 29.

2. "Education of women is the first necessity for rural reconstruction" *Lecture Notes*, P. 38.

3. 'The centre of the country is the home. The centre of the home is the woman. The rate of progress of a country is therefore the rate of progress of the women'. *The Village Dynamo*, P. 23.

இவ்வுண்மையை உணர்ந்து, ஒவ்வொரு ஊரிலும் உள்ள பெற்றோர் தங்கள் பெண்களையும் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பிக் கல்விகற்றுவருமாறு செய்ய வேண்டும். பெற்றோர் தமது கடமையை உணர்ந்து, பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பிவைக்க மனமற்றிருப்பார்களானால், அரசாங்கத்தாருடைய கட்டாயக் கல்வித்திட்டத்தினால் (compulsory education) என்ன பயன் விளையும்? கல்வியறிவில்லாதவர்களுடைய இருகண்களும் இரு புண்கள் என்னும் உயரிய கொள்கையையுடைய தமிழ் நாட்டு மக்களே! "நீங்கள் கட்டாயம் கல்வி கற்கவேண்டும்; இல்லாவிட்டால் உங்களைத் தண்டிப்போம்" என ஒரு அந்நிய அரசாங்கத்தார் சட்டம் இயற்றும் நிலைமைவரைக்கும் நீங்கள் உங்களைத் தாழ்த்திக்கொண்டது உங்களுக்கு இழிவல்லவா?

நான்காவது: நம் நாட்டுப் பெண்களைப்போலப் பணிவும் அடக்கமும் உடைய பெண்கள் வேறு நாடுகளில் இருப்பரோ என்பது சந்தேகம். ஆயினும், நமது கிராமங்களில் உள்ள ஆண்கள் பெண்களை மரியாதையாக நடத்துவதில்லை. சிலர் பெண்களைக் கொடுமையாக நடத்துகின்றார்கள். இக்கொடுமையைத் தாங்க இயலாமல் சில பெண்கள் ஊரைவிட்டு ஓடுகின்றார்கள், நஞ்சுண்கின்றார்கள், நான்றுகொண்டு சாகின்றார்கள் அல்லது கிணற்றில் விழுந்து உயிர் துறக்கின்றார்கள்.

கிராமங்களில் நடக்கும் இவ்வநியாயங்களுக்குக் காரணம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வியறிவு இல்லாமலிருப்பதுதான்.[1] பெண்களை 'மெல்லியலார்' என்பது நமது தமிழ் நாட்டு வழக்கம். பெண்களைச் சாந்தமாகவும் பெருமையாகவும் நடத்தவேண்டுமென்பது நமது பழைய நெறி.[2]

அன்றியும், தலைவியும் தலைவனும் பாலும் அதிலுள்ள சுவையும் போலவும்[3]; இருவரும் தம்முள் எவ்வித வேறுபாடின்றி ஒரே உயிர்போலவும்[4] வாழ வேண்டுமென்று நீதி நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

---

1. 'இல்லாளைக் கோலாற் புடைத்தலும்.........
அறியாமை யான்வருங் கேடு' (திரிகடுகம், 2.)

2. 'தாமலரின் மென்மையுறு தோற்றத்தே வைத்துய்க்க'
அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்' (திருக்குறள், 1120.)
'மெல்லிய நல்லாருள் மென்மை'... (நாலடியார், 188)

3. 'சொற்பா லமுதிவள் யான்சுவை
என்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று' (திருக்கோவையார், 8.)

4. 'ஒருயி ராக உணர்க; உடன்புணர்ந் தார்க்கு
ஈருயிர் என்ப இடைதெரி யார்'
(புறப்பொருள் வெண்பாமாலை, பொதுவியற்படலம், 23.)
'உடம்பொ(டு) உயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு' (திருக்குறள், 1122)

கிராமப் பெண்களின் நிலைமையைச் சீர்ப்படுத்துவது எப்படி? பழைய அறநெறிகளை எடுத்துக் காட்டுவதனால் அதிகப் பயன் விளைந்துவிடாது. ஒவ்வொரு கிராமத்திலும் பெண் கல்விக்காகவும், பெண்களின் முன்னேற்றத்துக்காகவும் உழைப்போர் வேண்டும். அப்படி உழைப்போர் இல்லாவிட்டால் கிராமப் பெண்களின் நிலைமை இப்பொழுதுள்ளவாறே தாழ்ந்த நிலைமையில் இருந்துவரும்.

நமது நகரங்களில் கல்வி கற்றும் நாகரிகமுற்றும் வாழ்ந்துவருகின்ற பல பெண்மணிகள் இருக்கின்றனர். இவர்கள் தங்களுக்கு ஒரு பெரிய சங்கத்தை நிறுவி, அதன்மூலமாகப் பெண்களுக்குச் சட்டசபைப் பிரதிநிதித்துவமும் (representation) வேறு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமையும் (franchise) பெற்றிருக்கின்றனர். இவைபோன்ற இன்னும் பல உரிமைகளுக்காகவும் போராடி வருகின்றனர். இம்முயற்சி மிகவும் மெச்சத்தக்கதுதான்.

ஆயினும், இந்தியாவிலுள்ள மாதர்களில் மிகப் பெரும் பகுதியினர் கிராமங்களில் வாழ்பவர். அவர்களுடைய குறைகளே நமது தேசத்திலுள்ள பெருங் குறைகள். இக்குறைகளை நீக்க வல்லோர் நகரத்திலுள்ள பெண்மணிகளேயாவர். பெண்களுடைய குறைகளை நீக்கப் பெண்களாலன்றி, வேறு எவராற் கூடும்?

ஆதலால் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள எல்லா மாதர்களுக்கு அறிவைப்புகட்டவும், அவர்களுடைய

அநாசாரமான பழக்க வழக்கங்களை நீக்கவும் சிசு பரிபாலனம் (child-welfare) முதலிய சேவைகளில் உதவிசெய்யவும் நகரப் பெண்மணிகள் உதவிசெய்ய முன்வரவேண்டும். இவ்வாறு செய்யும் சேவையானது இப்பெண்மணிகள் சட்டசபைக்குட்சென்று செய்யப்போகும் சேவையைக்காட்டிலும் பதினாயிரம் மடங்கு அதிகப் பலன் அளிப்பதாகும். கிராமச் சீரமைப்பு இயக்கத்தில் அதிகமாக உழைக்கவேண்டியவர்கள் மாதர்களே.

---

It is the women who must do most of the work of rural reconstruction' (*Lecture Notes*, P. 30).

# 9

## ஆடுமாடுகள்

## ( CATTLE )

பயிர்த் தொழிலை நம்பிவாழும் ஒரு தேசத்தினருக்கு ஆடுமாடுகள் மிக்க அவசியம். ஏனெனில், ஏருழுதல், நீரிறைத்தல், பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுய்த்தல் போன்ற எல்லாவித வேலைகளுக்கும் எருதுகள் உபயோகிக்கப்படுகின்றன. எருமைகளும் பசுக்களும் இல்லாவிடில் பால், மோர், நெய் கிடையா. மேலும், ஆடுமாடுகளின் சாணமும் நீரும் நிலத்துக்குரிய சிறந்த எருவாகின்றன.

நமது முன்னோர் ஆடுமாடுகளின் பெருமையை நன்கறிந்திருந்தனர். 'தான் மோர்விற்றதனால் வந்த நெல் முதலிய தானியங்களாலே தன் சுற்றத்தார் எல்லாரையும் உண்ணப்பண்ணி, பின்பு, தான் நெய் விற்ற விலைக்குக் கட்டியாகப் பசும்பொன்னையும்கூட வாங்க மனமில்லாதவளாய், பால் எருமையையும், நல்ல

பசுவையும், கரிய எருமை நாகையும் வாங்குவாள்' என்னும் கருத்துடைய அடியிற்கண்ட செய்யுள் அடிகள் எருமைகளும் பசுக்களும் பொன்னைவிட மிக விலையுயர்ந்தனவாக மதிக்கப்பெற்றன என்னும் உண்மையை எவ்வளவு அழகாக விளக்கிக்காட்டு கின்றன ! (பெரும்பாணாற்றுப்படை, 163-165).

அளைவிலை உணவில் கிளைஉடன் அருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்.

அன்றியும், காளைகளைக் கடவுளருக்கே ஒப்பிட்டு ஒரு கவி பாடியிருக்கின்றார்.[1]

பால்நிற வண்ணன்போல்
பழிதீர்ந்தவெள்ளையும்...
திருமறு மார்பன்போல்
திறல்சான்ற காரியும்...
முக்கண்ணான் உருவேபோல்
முரண்மிகு குராலும்...
வேல்வல்லான் நிறனேபோல்
வெருவந்த சேவையும்.

---

1. முல்லைக்கலி, 4. மதுரை ஜில்லாவில் கம்பம் நாட்டிலுள்ள சில ஜாதியார் தம் மாடுகளுக்கு 'நந்தகோபால்சாமி' என்பது போன்ற பல பெயர்களை இற்றைக்கும் வழங்கி வருகின்றனர்,

நமது நாட்டில் ஆடுமாடுகளின் பெருமையை அறியாதார் இலர். ஆயினும், அவை பலமுள்ளன வாகவும், பாலுக்காக வளர்க்கப்படுபவை அதிகப் பால் கொடுப்பனவாகவும் இருக்கவேண்டும் என்ற உண் மையை உணர்ந்தோர் சிலரே. இதற்கு மக்களின் வறுமையே காரணம் எனக்கூறுவது தவறு. முற் காலத்தைப்போல இக்காலத்திலும்

[1]ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்

வளர்க்கப்படவேண்டும்.

மேலும், கன்றுகளுக்குச் சரியான அளவு பால் கொடுக்க வேண்டும். அங்ஙனங் கொடாமல் அவற் றைக் குறைவயிறும் அரைஉயிருமாக வளர்ப்பது அதர்மம். இவ்வாறு செய்வோர் நரகத்திற்கு ஆளா வார் என நமது முன்னோர் கூறியிருக்கின்றனர்.

'கன்றுயிர் ஓய்ந்துகக் கறந்து பாலுண்டோன் ...
உறுநர(கு) என்னதாகவே!'[2]

---

1. ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை, 21. இந்நூலின் 12-வது செய்யுளும் ஆழ்ந்து சிந்திக்கற்பாலது.

'கனைத்திளம் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சுவர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வம் தங்காய்'

2. கம்பராமாயணம், பள்ளியடைப் படலம், 104.

மேலும், சரியான அளவு பால் கொடுக்கப் படாததனால் இறக்கின்ற கன்றின் தோலை எடுத்து, அதனுள் வைக்கோலைத் திணித்து, அத்தோற்கன் றைக்கொண்டு பால்கறப்பதும் அதர்மம். இவ்வழக்கம் இப்பொழுது நமது நாட்டில் பெருகிவருவது எவ் வளவு வருந்தத்தக்கது! இப்படிக் கறந்தபாலை நற் குலத்திற் பிறந்தவர் எவரும் உண்ணார் என்பது நம் முன்னோருடைய கோட்பாடு.

**"தோற்கன்று காட்டிக் கறவார்; கறந்தபால்**
**பாற்பட்டார் உண்ணார்".**

சிறுபஞ்சமூலம் (84)

இக்கோட்பாடு இக்காலத்திலும் கைக்கொள்ளப் பட்டால் இக்குறையைச் சட்டமியற்றாமலே நாம் ஒழித்துவிடலாம் அல்லவா?

இப்பொழுதுள்ள எருமைகளும் பசுக்களும் வலிவு குன்றியவைகளும் அதிகப் பயன் அற்றவை களுமாயிருக்கின்றன. இக்குறைகளை நீக்க, உயர்ந்த ஜாதிப் பொலி காளைகளை (stud bulls) நாட்டுப் பசுக் கள் எருமைகளுடன் கலக்கச்செய்யவேண்டும். ஒவ் வொரு ஊரிலும், ஊர்ப்பொதுப் பணத்திலிருந்து இரண்டொரு காளைகளை வாங்கி வைத்திருப்பது அவ சியம். இப்படிப்பட்ட காளைகளின் போஷிப்புக்காக வியவசாய இலாகா அதிகாரிகள் 50 ரூபாய் முதல் 150 ரூபாய்வரை பணவுதவியும் கொடுத்துவருகின் றனர். மாடுகளைக் கேவல நிலையில் வைத்திருப்பது நமது குற்றமே.

பலமற்ற மாடுகளைப் போஷித்துவருவது நஷ்டமேயன்றி இலாபமல்ல; ஏனென்றால், பலமற்றவை பாதியளவு வேலைதான் செய்யும்; அல்லது பாதியளவு பால்தான் கொடுக்கும்; ஆனால் அவை பலமுள்ளவை தின்னுகின்ற அளவு தீனி தின்னும்.[1]

மேலும், மாடுகளுக்கு வருகிற நோய்களிற் பல தொற்று வியாதிகள் ஆம். புதிதாக வாங்கிவரும் மாடுகளைச் சில நாளைக்கு ஊருக்கு வெளியே வைத்திருத்தல், வியாதிகளினால் இறக்கும் மாடுகளைப் புதைத்தல் முதலான சில முறைகளைக் கைக்கொண்டால் 100-க்கு 75 மாடுகளுக்கு வருகிற நோய்களைத் தடுத்துவிடலாம் என்று கால்நடை வைத்திய நிபுணர் கூறுகின்றனர்.[2] இங்கிலந்து தேசத்தில் இப்படிப்பட்ட நிர்ப்பந்தமான விதிகள் அடங்கிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றை அத்தேசத்து மக்கள் கைக்கொண்டும் வருகின்றனர்.[3]

---

1. "You breed and feed bad cattle instead of good, although bad caltle eat as much as good, and they do only half the work and give less than half the milk", *Socrates in an Indian Village*, P. 83.

2. *Bulletin*, No. 4.

3. *Rural Reconstruction*, Appendix 6, P. xvi.

# 10

## கிராமப் பாடசாலை ஆசிரியர்

## (THE VILLAGE SCHOOLMASTER)

ஓர் ஊர் முன்னேற்றத்திற்குத் தோன்றாத்துணையாக உதவிபுரியவேண்டியவர் அவ்வூர்ப் பாடசாலை ஆசிரியர். "தேவரைப் போன்றவர் புலவர்; தேவரைச் சேர்ந்தவரைப் போன்றவர் அப்புலவரோடு ஒரே ஊரில் வாழ்கின்றவர்" என்று கூறிய நமது பழைய தமிழ்ப் புலவரின் கருத்து எத்துணைச் சிறப்பு வாய்ந்தது:

**தேவ ரனையர் புலவரும்; தேவர்**
**தமரனையர் ஓர் ஊர் உறைவார்!**

**நான்மணிக்கடிகை,** 76.

இக்காலத்தில் கிராமப் பாடசாலைகளிலுள்ள சில ஆசிரியர் அரசாங்கத்தாருடைய உதவிப்பணத்தைப் பெற்று **(grants)** வயிறு வளர்ப்பதற்காகவே பாடசாலைகளை வைத்து நடத்துகின்றனர். கிராம ஜனங்களுக்கும் ஆசிரியரைப்பற்றிக் கவலை கிடையாது. அவருக்கு எவ்வித மதிப்பையும் செலுத்துவதில்லை.

இதற்குக் காரணம் ஜனங்களுக்குக் கல்வியில் விருப்ப மில்லாதிருப்பதே. விருப்பமிருந்தால் எல்லா ஊர்களி லும் ஜனங்கள் தங்களுடைய சொந்தச்செலவிலேயே பாடசாலைகளை வைத்து நடத்துவார்கள். கோர்டு கச் சேரிகளிற் செலவழிக்கின்ற பணத்தைப் பள்ளிக் கூடங்களைவைத்து நடத்துவதிற் செலவிடுவது எவ்வ ளவு மேன்மையாயிருக்கும்![1] பண்டைக்காலத்தைப் போல வீட்டுக்குக் கொஞ்சம் நெல் முதலான பொருள் களைக் கொடுத்தால், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பாடசாலையாகிலும் வைத்து நடத்தலாமே. பாடசாலை யில்லாத ஊர் பாழ் என்பதில் ஐயமென்னை ?

**.................................. தனக்குப்பாழ்**
**கற்றறி வில்லா வுடம்பு[2]**

**கணக்காய ரில்லாத ஊரும், பிணக்கறுக்கும்**
**மூத்தோரை யில்லா அவைக்களனும்........**
**நன்மை பயத்த லில்[3]**

ஒரு கிராமப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் தமது ஊருக்கு எவ்விதம் சேவைபுரியலாம் என்பதைக் கீழே விளக்கிக் காட்டுவோம்.

---

1. *Socrates Persists in India*, P. 132.
2. நான்மணிக்கடிகை, 22.
3. திரிகடுகம், 10. கணக்காயர் = உபாத்தியாயர்.

'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'. ஆதலால், ஆசிரியர்கள், தம் பள்ளிக்கூடத்திலுள்ள சிறுவர்களுக்கு இளமையிலேயே நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டும். நல்லொழுக்கங்களைக் கற்பதே கல்வி என்பதை "ஆசாரம் என்பது கல்வி" (நான்மணிக்கடிகை, 96) என்பதனால் அறியலாம்.

எல்லா நல்லொழுக்கத்துக்கும் காரணமாவது சுத்தம். ஆதலால் பள்ளிக்கூடத்திற் படிக்கும் எல்லாச் சிறுவர்களும் தம் உடலையும் உடையையும் சுத்தமாக வைத்துக்கொள்ளச் செய்வதே ஆசிரியர் கற்றுக் கொடுக்கவேண்டிய முதல் நல்லொழுக்கம். ஒவ்வொரு கிராமப் பள்ளிக்கூடத்திலும் உள்ள எல்லாச் சிறுவர்களும் ஒழுங்காகக் குளிக்கவும், சுத்தமாகப் பல் துலக்கவும் உபாத்தியாயர் பார்த்துவர வேண்டும்.[1]

பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் கற்கவேண்டிய இரண்டாவது நல்லொழுக்கம் பள்ளிக்கூடத்தையும் அதற்குப் பக்கத்திலுள்ள இடங்களையும் சுத்தமாக

---

1. 'In order therefore that you may get the best results from school teaching children must be clean...No true education can be imparted in a state of dirt and slovenliness', *The Village Dynamo*, P. 7.

வைத்திருத்தல். பள்ளிக்கூடச் சிறுவர்கள் தெருக்களிலும் மந்தைவெளிகளிலும் மலஜலங் கழிக்கும் வழக்கத்தைத் தடுத்து, குழிக்கக்குசுகள் அமைத்துக்கொடுக்கவேண்டியது ஆசிரியருடைய கடமை. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் குப்பைக்குழிகளும் (rubbish pits) குழிக் கக்குசுகளும் அமைக்கப்பட வேண்டுமென்று ஜில்லா கல்வி அதிகாரி கட்டளையிட்டால் நலமாயிருக்கும். இம்முறை கிராம மக்களுக்குச் சிறந்த மாதிரியாக இருக்குமல்லவா?

ஆசிரியர் பள்ளிக்கூடச் சிறுவர்களைக்கொண்டு தெருக்களையும், ஊருக்குப் பக்கத்திலுள்ள இடங்களையும், குடிக்கிற தண்ணீர் எடுக்கின்ற கிணறுகள், குளங்கள் முதலியவற்றின் பக்கங்களையும் சுத்தஞ் செய்வதும் கூடாத காரியமல்ல.

சிறுவர்கள் கற்கவேண்டிய மூன்றாவது நல்லொழுக்கம் பள்ளிக்கூடத்தை அழகாக வைப்பது. பாடசாலை ஆசிரியர்கள் பயிர்த்தொழிலில் சிறிது பயிற்சி பெற்றவர்களா யிருப்பார்களானால், பள்ளிக்கூடத்துக்கருகிலுள்ள ஒரு சிறு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, அவ்வூர்ப் பயிர்த்தொழிலாளருக்குப் புதிய முறைகளைக் கற்பிக்கலாம். மூன்றும், நான்காம் வகுப்புப் பிள்ளைகளுக்கும் பயிரிடுவதில் ஊக்கமும் உண்டாகும்.

சிறுவர்கள் கற்கவேண்டிய எல்லா நல்லொழுக்கங்களையும் சாரணச் சிறுவர் இயக்கத்தின் (Boy



கிராமப்பாடசாலை ஆசிரியர் கற்றுக்கொடுக்கவேண்டிய பாடங்களில் முக்கியமானவை நல்ல விளையாட்டுகளும் பாட்டுகளும் ஆம்.

Scout Movement) மூலமாகவும் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆதலால், எல்லாக் கிராமப்பாடசாலைகளிலும் சாரணச் சிறுவர் படை அமைக்கப்பட வேண்டும்.

கிராமப்பாடசாலை ஆசிரியர் கற்றுக்கொடுக்க வேண்டிய பாடங்களில் முக்கியமானவை நல்ல விளையாட்டுகளும் பாட்டுகளும் ஆம். நமது நாட்டில் சிறுவர் சிறுமியர் விளையாடத்தக்க அருமையான விளையாட்டுகளும் பாடத்தக்க பாட்டுகளும் உள்ளன. முதலாவது, நமது நாட்டு விளையாட்டுகளையும் நாட்டுப் பாட்டுகளையும் கற்பிக்கவேண்டும். அதன் பின், மேனாட்டாருடைய விளையாட்டுகளில் சிறந்தவற்றையும் கற்பிக்கலாம்.

இக்காலத்திலுள்ள பாடசாலைகளிற் கற்பிக்கப்படும் பாடங்களிற் பெரும்பாலன கிராமங்களில் வசிக்கிற பிள்ளைகளுக்காவது அவர்களுடைய பெற்றோருக்காவது பயன்படாதவை. கிராமப்பாடசாலைகளில் புதிய கலப்பைகள், புதிய வித்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், நகையணிதல், இவை போன்ற பாடங்களைக் கற்பித்தல் நல்லது. ஒவ்வொரு கிராமப்பாடசாலையிலும், புதிய கலப்பைகள், புதிய வித்துக்கள், புதியஎரு முதலியவற்றிற் சில மாதிரிக்காக வைக்கப்படலாம். இவைகளைப் பாட்டு மூலமாகவும், நாடகம் மூலமாகவும் பள்ளிக்கூடச் சிறுவர்களைக்கொண்டு பாடி நடித்தும் காட்டலாம். ஒவ்வொரு பாடசாலை

ஆசிரியரும் ஒரு பயிர்த்தொழில் இலாகா பிரசாரகரைப் (demonstrator) போல உழைக்கவேண்டும்.

இப்பொழுதுள்ள நமது கிராமங்களில் மிகப் பெரிய தனவந்தர்கள் இல்லை. உயர்ந்த கல்வி கற்றவர்களும் இல்லை. இங்கிலந்து தேசத்தைப் போல பொதுஜன நன்மைக்காக உழைக்கும் பாதிரிகளும் அவர்களுடைய பாரியைகளும் இல்லை. ஓர் ஊரில் கல்விகற்றவர் அவ்வூர்ப் பாடசாலை ஆசிரியர் ஒருவரே; ஆதலால் பாடசாலை ஆசிரியரே ஓர் ஊரிலுள்ள எல்லாக்காரியங்களையும் மேற்கொண்டு செய்யவேண்டியவராயிருக்கின்றார்.

---

'In England a great deal of the beneficent work of the village is done by women, principally by the *padre's* wife and daughters and by the wife and daughters of the doctor, squire and so on. In India, the whole of this work is in the hands of the teacher' *The Village Dynamo,* P. 12.

# 11

## கள்ளுண்ணாமை

## (TEMPERANCE)

கள்ளுண்பதும் கள்ளுற்பத்தி செய்வதும் நமது நாட்டிலுள்ள பெரிய பழந்தீமைகள். இவற்றை நம் நாட்டைவிட்டு நீக்க இயலுமோ எனப் பலரும் ஐயுறுதல் இயல்பு. இந்திய வரி விசாரணைக் கழகத்தார் கள்ளுண்ணலை ஒழித்தல் மிக்க அரிது என்று முடிவுகூறியிருக்கின்றனர்.

குடிகள் கள்ளுண்பதனால் அரசாங்கத்தாருக்கு மிகுந்த வருமானங் கிடைக்கின்றது. நமது மாகாணத்தின் ஜனத்தொகையில் மிகச் சிறு பகுதியினராகிய கட்குடியர் செலுத்தும் வரியானது, ஜனத்தொகையில் 100-க்கு 70 விகிதமுள்ள குடியானவர்கள், மிட்டாதார்கள், ஜமீந்தார்கள் எல்லோரும் சேர்ந்து செலுத்தும் நிலவரியளவு அதிகமாயிருக்கின்றது. கட்குடியர் இல்லாவிட்டால் கல்வி, பயிர்த்தொழில், கைத்தொழில் முதலான அபிவிருத்தி இலாகாக்கள் நடைபெற முடியாதென்பது நமது மந்திரிமார் சட்டசபையிற் கேட்கும் கேள்விகளுக்கு அளிக்கும் பதில்.

கட் குடியர் இருக்கும் ஊர்களில் கள்ளுக்கடைகள் இல்லாதிருப்பது சிறப்பல்ல என்னும் பொருள்

தொனிக்கும்படி ஒரு பழம் புலவர் பாடியிருப்பது தற்காலத்து மந்திரிகளின் நியாயத்துக்கு மிகவும் பொருத்தமானது போலும்:[1]

**'கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்(கு) இன்னா'!**

ஆனல், நமது நாட்டில் கள்ளுண்பதைத் தடுப்பது மிக எளிது. அரசாங்கத்தார் சிறிது முயற்சி செய்தால் இக்குறையை முழுதும் நீக்கிவிடலாம்.

கள்ளுண்பதைத் தடுப்பதற்குக் கள்ளுண்பதால் விளையுந் தீமைகளைப்பற்றிப் பிரசாரஞ் செய்வதனல் பயனில்லை.[2]

உற்சவங்கள் நடக்குங் காலத்தைப் போன்ற சில சமயங்களில் கள்ளுக்கடைகளை மூடல், ஊர் ஜனங்கள் இஷ்டப்பட்டால், (local option) அவற்றை எடுத்துவிடல், இம் முயற்சிக்கு உதவிசெய்ய ஆலோசனைக் கழகங்களும் (Excise Advisory Committee) அமைத்தல் முதலிய முறைகள் ஒரு பயனை

---

1. இன்னா நாற்பது, 10.

2. 1934-35-ம் வருடத்தில் சுகாதார இலாகா அதிகாரிகள் சுமார் 500 ரூபாய் செலவிட்டுக் கள்ளுண்ணாமைப் பிரசாரஞ் செய்தனராம்! (*Report of the Director of Public Health*, Madras, 1934-1935).

யும் அளியா. இம்முறைகளால் அரசாங்க வருமானம் ஒரு சிறிதும் குறையவில்லை. அது வருடந்தோறும் வளர்ந்துகொண்டுதான் போகின்றது.

அப்படியானால் மக்கள் கள்ளுண்பதைத் தடுப்பது எப்படி?

நமது நாட்டில் கள்ளுண்போர் மிகச் சிலரே. அவர்கள் பெரும்பாலும் கீழ்க்குலத்தவரே யாவர். பழைய தமிழ்நாட்டின் நிலையும் இவ்வாறுதான் இருந்துவந்திருப்பதாகத் தெரிகின்றது. 'சான்றோர் அல்லாதார் கள்ளுண்க' என்னும் பொருளில் பல புலவர் பாடியிருக்கின்றனர்.[1] இதனாற்றான் கட்குடியர் ஊரில் கள்ளுக்கடை இல்லாதிருப்பது அவர்களுக்கு மிக்க வருத்தத்தைத் தரும் என இன்னா நாற்பது பாடிய கபிலரும் கூறினர். இக்கட்குடியருக்குக் கல்வியறிவூட்டி, நல்லொழுக்கத்தைக் கற்பித்தால் கள்ளுண்ணுந் தீமையிற் பெரும்பான்மையான பாகம் நீங்கும்.

கள்ளுண்ணும் குலத்திற் பிறந்த பல மக்கள் கிறிஸ்து மதத்தைத் தழுவி, அதன்மூலமாகக் கல்வியறிவும் நல்லொழுக்கமும் பெற்றிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் இப்பொழுது கள்ளுண்பதில்லை.

---

1. 'உண்ணற்க கள்ளை. உணி(ல்)உண்க சான்றோரால் எண்ணப் படவேண்டா தார்' (திருக்குறள், 922)
'கள்ளுண்ணார்...வடுவறு காட்சியார் (நாலடியார், 157)

வருவாயும் வாழ்க்கைநிலையும் உயர்ந்தால், இத்தீய வழக்கம் பெரிதும் குறையும். கள்ளிலிருந்து இக் காலத்திற் கிடைக்கும் வருமானத்தில் நான்கிலொரு பகுதியையேனும் ஹரிஜனங்களின் கல்விக்காகவும், பொருளாதார அபிவிருத்திக்காகவும் செலவிட்டால் மதுவிலக்குப் பிரசாரம் செய்யவேண்டிய அவசியமே யில்லை.

மிகக் கடினமான உடலுழைப்புள்ள மக்களே அபின் உண்கின்றார்கள் எனவும், வருவாய் உயர்ந்தவர்களிடத்து அவ்வழக்கம் குறைந்துவருகின்றது எனவும் சர்வதேச சங்கத்துத் தொழிலாளர் அறிக்கை (Report of the International Labour Office) வெளியிடுகின்றது.

கட்குடிப்பதை ஒழிப்போருக்கு, யாம் மேற் காட்டியவாறு, அரசாங்கத்தார் உதவிசெய்ய முன் வந்தால், ஒவ்வொரு ஊரிலும் ஹரிஜனங்களுடைய சங்கங்கள் அமைக்கப்படவேண்டும். அச்சங்கங்கள் மூலமாக அவர்கள் நல்லவீடுகளைக் கட்டவும், பயிர்த் தொழிலை நடத்தவும், கைத்தொழில்களை மேற் கொள்ளவும் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். இவ்வாறு செய்தால் பத்து அல்லது இருபது வருடங்களுக்குள் ஹரிஜனங்கள் முன்னேற்றமடைவர்.

# PART TWO

# இரண்டாம் பாகம்

# சிரமைப்புத் தொண்டுபுரிவோர்

உண்டால் அம்ம இவ்வுலகம்! ... ... ...
தமக்கென முயலா, நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

புறம்: 182.

# 12

## மார்த்தாண்டம்

## (MARTANDAM)

மார்த்தாண்டம் என்பது திருவனந்தபுரத்துக்கும் நாகர்கோவிலுக்கும் இடையிலுள்ள ஒரு சிற்றூர். சில வருஷங்களுக்குமுன் இவ்வூர்வாசிகளும் திருவாங்கூர் அரசாங்கத்தாருமே யன்றி, வேறெவரும் இவ்வூரைப்பற்றிக் கேட்டிரார். ஆனால் இற்றைப்போதில், இவ்வூர், சென்னை, பம்பாய், முதலான மாகாணத் தலைநகர்களைப் போலவும், காசி இராமேஸ்வரம் முதலான புண்ணிய ஸ்தலங்களைப் போலவும் இந்தியா முழுதும் அறியப்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணம் என்ன?

மார்த்தாண்டம் ஒரு பெரியபட்டினமாக மாறிவிடவில்லை. அஃது இன்னும் சிற்றூராகத்தான் இருந்து வருகின்றது. ஆயினும், அது சிறப்பும் பெருமையும் அடைந்து விளங்குகின்றது. அதற்குக் காரணம் அங்குச் செய்யப்படும் கிராமச் சீரமைப்புப் பணியேயாம்.

இப்பணியை ஆற்றிவரும் பெரியார் ஸ்பென்ஸர் ஹாச் (Dr. D. Spencer Hatch, B. Sc., M. Sc. in Agr., PH. D.) என்னும் பெயருடைய ஓர் அமெரிக்க மிஷனெரியார். இவர் இந்திய கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் (Y. M. C. A.) சார்பாக திருவாங்கூர், கொச்சி சம்ஸ்தானங்களடங்கிய பிரதேச முழுதிற்கும் காரியதரிசியாக விருப்பவர்.

ஹாச் துரையின் புகழுக்குக் காரணமாக விளங்கியவர் கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் தலைமைக் காரியதரிசியாகவிருந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் கே. டி. பால் (K. T. Paul, B A., O. B E.) என்பவர். இவர் தமது சங்கத்தார் கிராமச் சீரமைப்புப் பணியை இயற்றவேண்டுமெனத் தெளிந்து, தென்னிந்தியாவில் நான்கு தலைமைத் தலங்களைத் தெரிந்து, அவற்றில் வேலை தொடங்கச்செய்தனர். அத்தலங்களில் மார்த்தாண்டம் ஒன்று. 'கிராமச் சீரமைப்பு' என்னும் சொற்றொடரை ஆங்கிலத்தில் முதன்முதல் வழங்கியவரும் ஸ்ரீமான் கே. டி. பால் அவர்களே யாவர். இச்சொற்றொடர் இப்பொழுது எழுதப்படாத மொழியும், கேட்கப்படாத செவியும், இதனைற் குறிக்கப்பட்ட இயக்கம் விரும்பப்படாத இடமும் நம் நாட்டில் இல்லையென்றே சொல்லலாம். பெரியாரின் புகழ் இத்தன்மைத்தே. இத்தன்மைவாய்ந்த புகழே ஒருவருடைய மண்ணுடம்பு அழிந்த பின்னும் அழியாது விளங்குவது.

'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்ப(து) ஒன்(று) இல்.'

திருக்குறள், 233.

ஹாச்துரை தமது வேலையைத் தொடங்குமுன் மார்த்தாண்டமும் அதனைச் சுற்றிலுமுள்ள ஊர்களும் எந்நிலையில் இருக்கின்றனவென்பதை ஆராய்ச்சிசெய்தார். இவ்வாராய்ச்சிக்கு அப்பாகத்திலுள்ள பாடசாலை ஆசிரியர், வைத்தியர், அரசாங்க உத்தியோகஸ்தர் ஆகிய பலரும் உதவிசெய்தனர்.

இவ்வாராய்ச்சியாற் கண்டறிந்த சில குறிப்புக்கள் இங்கு எடுத்துக்காட்டத் தக்கன. மார்த்தாண்டத்திலும், அதனைச் சுற்றிலும் மூன்று மைல் பரப்புள்ள நாற்பத்தாறு ஊர்களிலும், எழுதப்படிக்கத் தெரிந்தோர் நூற்றுக்குப் பதினைன்குபேர். கல்வியறிவு மிகுந்த திருவாங்கூரிலும் கல்விகற்றோர் தொகை மிகக் குறைவென்பதற்கு வேறு என்ன சான்றுவேண்டும்? ஆனால், அப்பிரதேசத்தில், 8 கள்ளுக்கடைகளும், 4 சாராயக்கடைகளும் இருக்கின்றன! (65). கள்ளுக் கடைகளாற் சூழப்பட்டுக் கல்வியின்மையாகிய இருளில் ஆழ்ந்துகிடக்கும் மக்களின் பொருளாதார வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை விளக்கவேண்டுவதில்லை. ஆயினும், அதற்கு இரண்டொரு குறிப்புக்களைக் காட்டுதல் மிகையாகாது. நாம் மேற்கூறிய பிரதேசத்தில் ஏறக்குறைய 4000 எருதுகள் இருக்கின்றனவென்றாம், அவற்றுள் ஒன்றாகிலும்

வலிவுடையதல்லவென்றும் (68), பால் மாடுகளின் தொகை ஏறக்குறைய இரண்டாயிரமாக இருப்பினும் அம்மாடுகளுள் நாளொன்றுக்கு இரண்டு பவுண்டுக்கு மேற் பால்கொடுக்கத்தக்க வளப்பமுள்ளவை ஒன்றும் இல்லையென்றும் ஹாச் துரை கூறுகின்றார். ஒரு நாடு கேடுற்றிருப்பதற்கு, அதன் பசுக்கள் பால் குன்றியிருத்தலையன்றி வேறு என்ன சான்று வேண்டும்?[1] இப்படிப்பட்ட நாட்டிற்றான் ஹாச் துரை தமது சீரமைப்பு வேலையைத் தொடங்கினார்.

ஹாச் துரை செய்த முதல் வேலை மிகவும் சாதாரணமானது. அஃது மார்த்தாண்டத்தில், தமது உடன்வேலைத் தோழர் வீடுகளுக்குப் பக்கத்தில், நல்ல காய்கறிச் செடிகளைப் பயிரிட்டதாம். இச்செடிகளின் வளப்பத்தையும் பலனையுங்கண்ட அவ்வூராரும், சுற்றூராரும் அத்தகைய செடிகளைத் தாமும் பயிரிட விரும்பி, அவற்றின் விதைகளை வாங்கிச் சென்று, அவற்றைத் தம் நிலங்களிற் பயிரிட்டனர். "இச்சிறு தொழில் இப்பாகமுழுதிலும் பரவினால், மக்கள் உணவிலுள்ள குறையிற் பெரும்பாகத்தை நீக்கிவிடுவேன்" என ஹாச் துரை கூறுகின்றார் (75).

---

1. இக்கருத்துத் தோன்றும் பொருட்டே பசுக்களின் பால் குறைவதை முதலில் வைத்து,

‘ஆபயன் குன்று(ம்) அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா(ன்) எனின்’

எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். (திருக்குறள், 560).

ஹாச் துரை செய்துகாட்டிய வேறொரு தொழில் கோழி வளர்த்தல். "கோழி வளர்த்தலில் என்ன சிறப்பு அடங்கியிருக்கின்றது?" எனச் சிலர் கேட்பர். இவ்வாறு கேட்போர், தற்காலத்தில் கோழி வளர்த்து, முன்னேற்ற மெய்திய டென்மார்க்கு, ஸைக்கோஸிலோவியா முதலான தேசங்களின் சரித்திரத்தை அறியாதார். மேல்நாடுகளில் வருடத்தில் ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் முட்டையிடக் கூடிய கோழிகள் இருக்கின்றன. இவற்றின் முட்டைகள் நமது நாட்டுக் கோழிகளின் முட்டைகளைவிட இருமடங்கு கனமுள்ளவை. இப்படிப்பட்ட கோழிகளை ஹாச் துரை மார்த்தாண்டத்தில் வளர்த்துக் காட்டினர். இந்த ஜாதிச் சேவல்களை நாட்டுக் கோழிகளுடன் கலக்கவும் செய்தனர். இக்கலப்பினுற் பிறந்த கோழிகளும் சீமைக் கோழிகளைப்போலவே பெரிய முட்டைகளிடுகின்றன. இத்தகைய கோழிகள் வளர்த்தலைப் பக்கத்திலுள்ள எல்லா ஊர்களிலும் பரப்புவதற்காக ஹாச் துரை ஒரு சங்கத்தையும் நிறுவியிருக்கின்ருர்.

இச்சங்கத்தைச் சார்ந்த கிராமவாசிகள் தம் கோழிகளுடைய முட்டைகளை விற்பதற்காக ஹாச் துரை ஒரு கூட்டுறவுச் சங்கத்தையும் நிறுவியிருக்கின்ருர். கிராமவாசிகள் ஒவ்வொரு வாரமும், திங்கள், வியாழன் ஆகிய இருநாட்களிலும், தமது வீட்டிலுள்ள முட்டைகளை மார்த்தாண்டத்துக்குக்கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டுவரப்படும்

முட்டைகள் முதல்தரம் (A) இரண்டாம்தரம் (B) எனப் பிரிக்கப்படுகின்றன. பிரிக்கப்பட்டபின், முட்டை கொண்டுவந்தவரின் பெயரைக் குறிக்கும் ஒரு எண்ணும் (number) தரத்தைக் குறிப்பிடும் எழுத்தும் (A or B) முட்டைகளின்மேல் 'ரப்பர் ஸ்டாம்பி'னால் பொறிக்கப்படுகின்றன. பின்னர், ஒவ்வொரு முட்டையையும் மெல்லிய அழகிய காகிதத்திற் பொதிந்து, கூடைகளில் அடுக்கி. அவற்றைத் திருவனந்தபுரம் 'ரெயில்வே ஸ்டேஷனி'லிருந்து, மதுரை, சென்னை முதலான நகரங்களிலுள்ள ஐரோப்பியர்களுக்கு அனுப்புகின்றனர்.

புதியமுறையிற் கோழிவளர்த்தலால் இருமடங்கு அதிகமான முட்டைகளும், இருமடங்கு அதிகமான விலையும் மார்த்தாண்டவாசிகளுக்குக்கிடைக்கின்றன.* "திரைகடலோடியும் திரவியம் தேடு" எனக் கிராமவாசிகளுக்குக் கற்பிப்பதில் யாது பயன்? அதற்குப் பதிலாக, "கோழிவளர்த்துக் கொள்க பொருளை" எனக் கற்பிக்கலாமென்று தோன்றுகிறது.

மேலும், முந்திரிப் பருப்புகளைப் பக்குவமாய் உடைத்து விற்றல், தேனீக்களை வளர்த்துத் தேன் செய்தல், புதிய முறையில் வெல்லம் செய்தல்,

---

* The slogan for this project 'twice, as many eggs and twice as large ones'is rather an understatement than an exaggeration' (P. 72).

அதிகப் பால்கொடுக்கும் 'சூரத்' (Surti) ஆடுகளையும் நல்ல ஜாதிப் பசுக்களையும் வளர்த்தல் போன்ற வேறு பல புதிய கைத்தொழில்களையும் ஹாச் துரை கற்றுக்கொடுத்து, மார்த்தாண்டத்து மக்களுக்குப் பொருள்வருவாயைப் பெருக்கியிருக்கின்றனர்.

மார்த்தாண்டத்திற் செய்துகாட்டப்படும் வேலையையும் தொழிலையும் சுற்றிடங்களுக்கெல்லாம் பரப்புவதற்காக ஒரு 'கிராம அபிவிருத்திச் சங்கம்' (Rural Development Association) நிறுவப்பட்டுள்ளது (70-110). இதன்மூலமாக எல்லாக் கிராமங்களிலும், பஜனைகள், பாட்டுகள், நாடகங்கள், பொருட்காட்சி, சுற்றிவரும் புத்தகசாலைகள் (circulating libraries), மதுவிலக்குப் பிரசாரம் ஆகிய மிகப் பல இயக்கங்கள் நடைபெறுகின்றன. இத்தொண்டுகளுக்கு உதவி புரிவோர் அவ்வவ்வூர்களிலுள்ள மாணவர், ஆசிரியர், வாலிபர் முதலானோர் (81).

மார்த்தாண்டம் தலைமைத் தலத்திலும் சுற்று ஊர்களிலும் செய்யப்பட்டுவரும் சீரமைப்புச் சேவை முறையைப் பிறரும் கற்றுக்கொள்ளுமாறு வருடந் தோறும் ஒரு பாடசாலையும் நடத்தப்படுகின்றது.

"மார்த்தாண்டத்தில் நடைபெறும் வேலையைக் கண்டேன். கடவுளைத் புகழ்ந்தேன். தைரியங்கொண்டேன்" என ஒரு பெரியார் கூறியிருக்கின்றனர் (189).

இந்திய கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் ஆதரவில் வேறு மூன்று கிராமச் சீரமைப்புத்தலங்களும் உள்

ளன. கோயம்புத்தூருக்குப் பக்கத்திலுள்ள இராமநாதபுரம் என்னும் கிராமத்தில் கோழி வளர்த்தல், கல்விகற்றிராத வாலிபர் முதியோருக்குக் கல்விகற்பித்தல் முதலான பல அரிய சேவைகள் ஆற்றப்படுகின்றன. மேலும், மலபார் ஜில்லாவிலுள்ள அரியக்கோடு என்னும் கிராமத்தில் தச்சுவேலை முதலான கைத்தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன. நெல்லூர் ஜில்லாவிலுள்ள இந்துக்குருப்பேட்டை என்னும் கிராமத்தில் இந்துக்கள், மகமதியர் கிறிஸ்தவர் ஆகிய எல்லா மதத்தினருக்கும் கூட்டுறவு முறையிற் பல கைத்தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன.

---

இவ்வத்தியாயத்திற்கண்ட சில குறிப்புக்கள் யான் நேரிற் கண்டும், நேரிற்கண்ட பிறரிடம் கேட்டும் தெரிந்தவை. இவையன்றிக் கீழ்க்கண்ட நூல்களினின்றும் சில குறிப்புக்கள் எடுத்தாளப்பட்டன.

1. *Service in the Villages.*

2. *Creative Service.*

3. Articles in the *Young Men of India*, September, 1927; August, September, October, 1929; January, July, 1931.

4. *Up from Poverty*, Dr. D. Spencer Hatch, Oxford University Press, 1932. இவ்வத்தியாயத்தில் ஆங்காங்கே வளைவு கோடுகளுக்குள் இடப்பட்டிருக்கும் எண்கள் *Up from Poverty* என்ற நூலின் பக்கங்களின் எண்களைக் குறிப்பன.

# 13

## ஆலமூரு*

(ALAMURU)

நமது மாகாணத்தில், கிராமச் சீரமைப்பு இயக்கத்தால், மார்த்தாண்டத்தைப் போலச் சிறப்புற்று விளங்கும் வேறொரு கிராமம் கிழக்குக் கோதாவரி ஜில்லாவிலுள்ள ஆலமூரு. இந்தக் கிராமத்திலும் இதனைச் சுற்றிலுமுள்ள 15 ரெவினியூ கிராமங்களிலும் சத்திய நாராயணா என்னும் பெயருடைய ஒருவர், 1924-ம் வருடத்தில், கூட்டுறவுப் பிரசாரஞ்செய்யத் தொடங்கினார்.

இங்ஙனம் செய்துவரும்பொழுது, சென்னையில், மந்திரி பதவி வகித்துவந்த ஸ்ரீமான் அரங்கநாத முதலியார் அவர்கள் தாம் மாதந்தோறும் பெற்று

---

* Rural Reconstruction in Alamuru என்னும் நூலைத்தழுவி எழுதப்பட்டது.

வரும் சம்பளத்தில் ஒரு பகுதியை கிராமச் சீரமைப்புச் சேவைக்காக வழங்குவதெனை வாக்களித்தனர். இந்நிதியை நிர்வகிக்க அவர் ஒரு கழகத்தையும் நிறுவினர்.

ஒவ்வொரு மாகாணத்திலும் அவ்வம்மாகாணக் கவர்னருடைய ஆதரவில் இத்தகைய கிராமச் சீரமைப்பு நிதியொன்றைநிறுவி, அதற்கு எல்லா மந்திரிகளையும், பெருஞ் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் பொருளுதவி அளிக்கச் செய்தால் நமது கிராமங்களுக்கு எக்காலத்திலும் குறைவில்லை. பெரிய அறிவாளிகளுடைய செல்வம் ஊருணி நீரைப்போல எல்லோருக்கும் பயன்பட வேண்டுவதன்றோ! ஸ்ரீமான் அரங்கநாதமுதலியாரவர்களின் நன்மாதிரியைப் பின்பற்றுவோர் நம் மாகாணத்தில் இல்லாமலிரார். இது நிற்க.

ஸ்ரீமான் அரங்கநாத முதலியாரவர்களின் நிதி ஸ்ரீமான் சத்தியநாராயணாவின் சேவைக்குப் புத்துயிர் அளித்தது. அதிலிருந்து அவருக்கு மாதந்தோறும் ஐம்பது ரூபாய் வழங்கப்பட்டது. இத்தொகை கதர் உற்பத்தியையும், கள்ளுண்ணாமையையும்பற்றிப் பிரசாரஞ் செய்யும் ஒரு தொண்டருக்குச் சம்பளமாக அளிக்கப்பட்டது. இங்ஙனமாகக் கிராமச் சீரமைப்புப் பணி சிறிது சிறிதாகப் பெருகிவந்தது.

ஆனால் **1928**-ம் ஷ ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீமான் அரங்கநாத முதலியாரவர்கள் மந்திரி பதவியிலிருந்து

நீங்கினர். நீங்கவே, அவர் கிராமச் சீரமைப்பு நிதிக்காகப் பணஞ்சேகரித்தலைக் கைவிட்டார். முன்னிருந்த சேமநிதியும் உலர்ந்தது.

ஸ்ரீமான் சத்தியநாராயணாவின் வேலையும் நின்றுவிடும் நிலைமையிலிருந்தது. அச்சமயத்தில் சென்னை மாகாணக் கூட்டுறவுப் பாங்கியிலிருந்தும் இராமச்சந்திரபுரம் தாலூகாத் தலைமைப் பாங்கியிலிருந்தும் ஸ்ரீமான் சத்தியநாராயணாவின் வேலைக்கு வருஷத்திற்கு ஆயிரம் ரூபாய் வாக்களிக்கப்பட்டது.

இத்தொகையிலிருந்து மூன்று தொண்டர்கள் நியமிக்கப்பட்டனர். ஒருவர் கிராமப் பஞ்சாயத்துக்களை அமைத்து, அவற்றை மேற்பார்த்து வந்தார். மற்றொருவர் வாலிபர்களுக்கு உடற்பயிற்சி கற்றுக் கொடுத்துவந்தார். மூன்றாவது தொண்டர் ஓர் மாது சிரோமணி. அவர் பெண்களுக்குக் கல்வி கற்பித்தலிலும், தையல்வேலை கற்றுக்கொடுத்தலிலும் முயன்றார். ஸ்ரீமான் சத்தியநாராயணா, முன்போலக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதிலும் மேற்பார்ப்பதிலும் ஈடுபட்டுவந்தார்.

நமது தேசத்தில் கொடுக்கல்வாங்கல் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களால் (Co-operative Credit Societies) அதிகப்பயன் விளைந்திலது. சிலவிடங்களில் அவை குடிகள் மேலும் மேலும் கடனுக்குட்பட்டுக் கெட்டுப்போவதற்குக் காரணமாகிவிட்டன. ஆனால் ஆலமூரு வட்டகையில் கூட்டுறவுச் சங்கங்கள்

அளவற்ற பலனை அளித்திருக்கின்றன. இதற்குக் காரணம் ஸ்ரீமான் சத்தியநாராயணாவின் தொண்டு தான். "கூட்டுறவு இயக்கம் நன்மை பயக்கவேண்டு மானால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ரய்பீசன் வேண்டும்" என மிக அழகாக எடுத்துக்காட்டிய நமது சென்னை மாகாணக் கூட்டுறவு இலாகாவுக்குச் சிலவாண்டுகளுக்குமுன் தலைவராகவிருந்த ஸ்திராதி (D. N. Strathie Esq., I. C. S.) துரையவர்களின் கூற்று பொன்னேபோற் போற்றத்தக்கது.

ஆலமூரு வட்டகையின் கூட்டுறவுச் சங்கங்களால் சாவகாரிகளின் கொடுமைகள் நீங்கி, வட்டி விகிதங்கள் குறைந்திருக்கின்றன. கூலியாட்களாகவிருந்த சிலர் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து, கூட்டுறவுச் சங்கங் களிலிருந்து குறைந்த வட்டியிற் பணத்தைப்பெற்று, பருத்தி, புகையிலை முதலான மூலப்பொருள்களை விளைவித்து, நல்ல இலாபம் பெற்று, நிலங்கரைகள் வாங்கி இன்புற்று வாழ்கின்றனர். 1919-ல் சொந்த நிலங்களையுடையவர் 80 பேர்கள்மாத்திரமே யிருந்த ஒரு கிராமத்தில் இப்பொழுது (1934) 400 பேர் இருக்கின்றனர். நன்முறையில் நடத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் மணலையும் பொன்னாக்கும் திறத்தன.

மேலும், இக்கூட்டுறவுச் சங்கங்கள் சமூக ஒற்று மையையும், பொதுஜன சேவை யுணர்ச்சியையும் பெருக்கியிருக்கின்றன. ஆலமூரு வட்டகையிலுள்ள

எல்லாக் கிராமங்களிலும், கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர் தமது சொந்தச் செலவிலேயே பாடசாலைகள், குடிதண்ணீர் வசதிகள், பாட்டைசாலைகள் முதலியன அமைத்திருக்கின்றனர். அன்றியும், கோர்ட்டுகளுக்குச் செல்லும் வழக்கமும், கள்ளுண்ணலும் மிகவும் குறைந்திருக்கின்றன. இராமச்சந்திரபுரம் தாலூகாவிலுள்ள முன்சீப் கோர்ட்டில் 100-க்கு 95 விகிதத்தில் வழக்குகள் குறைந்திருக்கின்றன. சில கிராமங்களில் கட்குடி முழுதும் நீக்கப்பட்டிருக்கின்றது.

கூட்டுறவுச்சங்கங்களுக்கு உதவிபுரியும் வேறொரு ஸ்தாபனம் கிராமப் பஞ்சாயத்து. கூட்டுறவுச் சங்கங்களும், கிராமப் பஞ்சாயத்துக்களும் கிராமச் சீரமைப்பு இயக்கமாகிய பெருந்தேரின் இரு சக்கரங்கள் எனலாம். ஸ்ரீமான் சத்தியநாராயணா எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்துக்களை நிறுவியிருக்கின்றனர். இவற்றின் மூலமாகப் பாடசாலைகள், வாசகசாலைகள் அமைத்தல் முதலிய பலவகைச் சேவைகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

ஆலமூருவில் செய்யப்பட்ட பணியின் பலனைக் கண்ட ஸ்ரீமான் இராமதாஸ் பந்துலு அவர்கள் சென்னை மாகாணக் கூட்டுறவுத் தலைமைப் பாங்கியின் பொதுநல நிதியிலிருந்து வருடத்திற்கு 6000 ரூபாய் வழங்கி, அத்தொகையைக்கொண்டு ஆறு கிராமங்களில் கிராமச் சீரமைப்புப் பணி தொடங்குவதென

ஒரு திட்டத்தை வகுத்தார். இந்த ஆறு கிராமங்களிலும் இப்பொழுது வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை மாகாணக் கூட்டுறவு யூனியன் (Provincial Co-operative Union) காரியதரிசியும், இந்திய சேவா சங்கத்தின் (Servants of India Society) முக்கிய அங்கத்தினருள் ஒருவருமாகிய ஸ்ரீமான் வெங்கிட்ட சுப்பையா அவர்களின் மேற்பார்வையிலிருந்துவருகின்றன.

---

நமது மாகாணத்தில் 32 ஜில்லாக் கூட்டுறவு தலைமைப் பாங்கிகள் இருக்கின்றன. இவற்றின் பொதுநல நிதி ஏறக்குறைய 2 லக்ஷம் ரூபாய். இங்ஙனமே நில அடமான பாங்கிகளிலும், எல்லாவிதமான கூட்டுறவுச் சங்கங்களிலும் போதிய அளவு பொதுநல நிதி சேர்க்கப்பட்டிருக்கின்றது. கூட்டுறவுப் பாங்கிகளும் சங்கங்களும் ஸ்ரீமான் சத்திய நாராயணனைப் போன்ற தொண்டர்களைத் தெரிந்தெடுத்துக் கிராமச் சீரமைப்பு இயக்கத்தைத் தொடங்கினால் இவ்வியக்கம் ஆற்றுப் பெருக்கைப் போலப் பெருகி விளங்கும்.

# 14

## மாயனூர்

## (MAYANUR)

இந்திய சேவா சங்கம் என்னும் ஸ்தாபனம் நமது தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் அரும்பெரும் சேவையை ஆற்றிய கோகலே (Gokhale) என்னும் பெரியாரால் **1905**ம் வருடத்தில் பூனா நகரத்தில் நிறுவப்பட்டது. இதன் அங்கத்தினர், அரசியல் சேவையையே பிரதானமாகக் கருதுபவர். ஆயினும், இவர்கள் கிராமச் சீரமைப்பு இயக்கம் பல விடங்களிலும் பயனளிப்பதைக் கண்டு, அச்சேவையையும் தாம் புரிவதெனத் தீர்மானித்து, பீரார், ஒரிஸா சென்னை ஆகிய இம் மூன்று மாகாணங்களிலும் ஒவ்வொரு தலைமைத் தலத்தைத் தெரிந்து, அவ்வொவ்வொன்றையும் தம் சங்கத்தைச் சார்ந்த அங்கத்தினர் அதீனத்தில் விட்டிருக்கின்றனர். அவற்றுள் சென்னை மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள தலைமைத்தலம் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள மாயனூர் என்னும் கிராமம். இது

ஸ்ரீமான் கே. ஜி. சிவசாமி என்பவரின் மேற்பார்வையி லிருந்துவருகின்றது.

யாம் முதலிற் கூறிய மார்த்தாண்டம் கிராமத்திற் செய்யப்படும் சிறப்புப்பணி கைத்தொழிலபிவிருத்தி. இரண்டாவது கூறிய ஆலமூரு என்னும் கிராமத்திற் செய்யப்படும் சிறப்புப்பணி கூட்டுறவுச் சங்கங்களும் கிராமப் பஞ்சாயத்துக்களும் அமைத்தல். யாம் இங்கு விவரிக்கப்புகுந்த மாயனூர்க் கிராமத்தில் செய்யப் படும் பணியோ கல்வி, சமூகவாழ்க்கைச் சீர்திருத்தம் (social reform), அரசியலுணர்ச்சியை வளர்த்தல் போல்வனவாம். இவை ஒவ்வொன்றைப்பற்றியும் சிறிது கூறுவோம்.

**கல்வி:** நமது தேசத்தில் இப்பொழுது கற்றுக் கொடுக்கப்படும் கல்வி மேனாட்டுமுறைகளைத் தழுவி யதும் நகரவாழ்க்கைக்குப் பயன்படத்தக்கதுமானது. இக்காரணத்தால் இரு பெருங் குறைகள் ஏற்படு கின்றன. ஒன்று, கல்வி கற்றலில் நமது பண்டை அறவொழுக்கங்களுக்கு இடமில்லாதிருப்பது; மற்றொன்று, உத்தியோகங்கள் கிடைத்தாலன்றி, வேறு பிழைப்பற்றிருப்பது. உத்தியோகத்துக்கும் பிழைப்புக்கும் உதவாவிட்டாலும் நல்லொழுக்கத்துக் கேனும் கல்வி உதவவேண்டும். நல்லொழுக்கத்துக் கும் பிழைப்புக்கும் உதவுமாறு கல்வி முறையைத் திருத்தியமைப்பது நற்பணியென்பதில் ஐயமென்னே? இத்தன்மைய பணியே இப்பொழுது மாயனூரில் செய்யப்பட்டுவருகின்றது.

இந்திய சேவா சங்கத்தாரால் மாயனூரில் அமைக்கப்பட்டிருக்கும் பாடசாலை **2—7—1934**ல் நிறுவப்பட்டது. இப்பாடசாலையில் ஏழாவது வகுப்பு வரை சாதாரணக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. அத்துடன் எல்லா மாணவர்களுக்கும் பயிர்த்தொழிலிலும் கைத்தொழில்களிலும் பயிற்சியளிக்கப்படுகின்றது. அதாவது, கல்வி வேறு, தொழில் வேறாகப் பிரிக்கப்படாமல், கல்வியும் தொழிலும் கலந்தே கற்பிக்கப்படுகின்றது. கிராமாந்தரங்களிலுள்ள எல்லா மத்திய தரப் பாடசாலைகளும் (higher elementary schools) இத்தகைய முறையில் நடத்தப்படுமேல் நம் நாட்டுக் கல்விமுறையில் இப்பொழுது காணப்படும் ஒரு பெருங்குறை நீங்கும்.

**சமூக சீர்திருத்தம் :** மாயனூரில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலையானது மாணவர்களுக்குமட்டும் பயன்படத்தக்கதாய் இல்லாமல் மாயனூரிலும் அதனைச் சுற்றிலுமுள்ள எல்லாக் கிராமமக்களுக்கும் பயன்படத்தக்கதாய் அமைக்கப்பட்டுள்ளது. இதை 'சமூகப் பாடசாலை' (community school) என்பர். ஏனெனில், மாயனூரில் நடைபெறும் பாடசாலை அதனைச் சுற்றியுள்ள சமூகத்துக்கு ஒரு கலங்கரை விளக்கம்போல இலங்குகின்றது. இப்பாடசாலையில் 'மாணவர் கிராம சேவா சங்கம்' (The Student Rural Service) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இச்சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் கிராம மக்களுடைய வாழ்க்கையைப்பற்றி ஆராய்ச்சி

செய்தும் அவர்களுக்கு வேண்டும் தொண்டு புரிந்தும் வருகின்றனர். நமது தேசத்திலுள்ள எல்லா வகைக் கலாசாலைகளும் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டால் கிராமமக்களுக்கு எத்துணைப் பயனை அளிக்கும் என்பதை நாம் விளக்கிக்காட்டவேண்டுவதில்லை. நமது தேச மாணவர்களுக்குச் சமூக சேவை செய்யவேண்டும் என்ற உணர்ச்சியை ஊட்டி, அதற்கென அவர்களைப் பயிற்றுவிப்பதே நமது தேசத்தலைவர்கள் செய்யவேண்டிய முதற் சமூக சீர்திருத்தம் ஆம்.

மாயனூரில் நடைபெறும் வேறொரு சமூக சீர்திருத்தத் தொண்டு கிராமங்களில் வாலிபர் சங்கங்களை (Youth League) அமைப்பதாகும். இதுகாறும் அமைக்கப்பட்டுள்ள சங்கங்களின் தொகை 50. அவற்றின் அங்கத்தினர் தொகை 1000. இவ்வைம்பது சங்கங்களும் மாயனூரிலுள்ள தலைமைச் சங்கத்துடன் இணைக்கப்பெற்றிருக்கின்றன.

இவ்வாலிபர் சங்கங்களிலுள்ள அங்கத்தினர் எழுத வாசிக்கத் தெரியாதாருக்குக் கல்வி கற்பித்தல், கள்ளுண்ணலைத் தடுத்தல் போன்ற ஏதேனும் ஒரு நற்பணியை மேற்கொண்டு சமூக முன்னேற்றத்துக்காக உழைத்துவர வாக்குக்கொடுத்தும் அவ்வாக்கை நிறைவேற்றியும் வருகின்றனர். சமூக முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கும் குலாசாரங்களை ஒழித்தல், பெண்களுக்குரிய உரிமையையும் அந்தஸ்தையும் அளித்தல், தாழ்த்தப்பட்டோரை உயர்த்தல்

முதலாயின இவ்வாலிபர் சங்கத்தின் பிற சேவைகளாம். இப்படிப்பட்ட வாலிபர் சங்கங்கள் கிராமச் சீரமைப்புக்கு இன்றியமையாத வேண்டும் தொண்டர்படை என்னலாம்.

நமது மாகாணத்தில் பாடசாலைகள் இல்லாத ஊர்கள் பலவுள. இக்குறை ஒருபுறமிருக்க, வேறொரு புறத்தில், தாம் கல்வி கற்றும், அக்கல்வியைப் பிறருக்குக் கற்றுக்கொடுக்கப் பயிற்சி பெற்றுமுள்ள பலர் வேலை கிடைக்காது துன்புற்றும் வருகின்றனர். இவ்விரு குறைகளையும் நீக்க ஸ்ரீமான் சிவசாமியவர்கள் ஒரு முயற்சி செய்து வருகின்றார். அஃது பயிற்சிபெற்ற ஆசிரியர்களை ஒரு கூட்டுறவுச் சங்கமாகச் சேர்த்து, அவர்களுக்குப் பரோபகாரிகளுடைய பண உதவியைத் தேடிக்கொடுத்து, அவர்களைக் கொண்டு பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊர்களிலெல்லாம் பள்ளிக்கூடங்கள் அமைத்தலாம். இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஒவ்வொரு தாலூகாவிலும் நிறுவப்பட்டால் கல்வியின்மையாகிய குறை விரைவில் நீங்குமென்பதில் ஐயமில்லை.

**அரசியலுணர்ச்சியை வளர்த்தல்:** ஸ்ரீமான் சிவசாமியவர்களின் வேறொரு முயற்சியும் யாம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அஃது, பண்ணையாட்களுக்கு ஒரு 'தொழிலாளர் சங்கத்தை' (Agricultural Labour Union) அமைத்துக் கொடுத்தது ஆம்.

திருச்சிறைப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பண்ணையாட்களிற் பெரும்பாலானோர் வறுமைக்கும்

கல்வியின்மைக்கும் உறைவிடமானவர்கள். தம் உரிமைகளைப்பற்றிய உணர்ச்சி ஒன்றும் இல்லாதவர்கள். இம்மக்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரியும்படியாகவும், எல்லோரும் சேர்ந்து தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டும்படியாகவும் இவர்களுக்கு ஒரு சங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய சங்கம் நமது தமிழ் நாட்டில் வேறொரு இடத்திலும் நிறுவப்படவில்லை. எனவே, இப்புதிய சேவையைத் தொடங்கிய பெருமை ஸ்ரீமான் சிவசாமிக்கே உரியது. சிறந்த முறைகளிற் புதுப்புதுத் தொண்டாற்றும் அறிவாளிகளே நமது நாட்டில் அவசியம். "அறிவுடையார் எல்லாம் உடையார்".

இந்திய சேவா சங்கத்தின் அங்கத்தினர் மேற்பார்வையில் கள்ளிக்கோட்டையிலும், மங்களூரிலும் இரண்டு மத்தியதரப் பாடசாலைகளும், கைத்தொழிற் பாடசாலைகளும் நடைபெறுகின்றன. "தேவதார் கிராமச் சீரமைப்பு நிதி" (The Devadhar Rural Reconstruction Trust) யிலிருந்து, மலபார் ஜில்லாவில், தானூர், கோபாலபுரம் என்ற இரு கிராமங்களிலும் கைத்தொழிற் பயிற்சியும் கல்விப்பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. வேறு நான்கு கிராமங்களில் கல்விகற்றிராத வாலிபர் முதியோருக்குக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இச்சேவைகளினால் இப்பாகங்களிலுள்ள 'மாப்ளா' (Moplahs) ஜாதியைச் சேர்ந்த மகமதியர் பலர் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர்.

இந்திய சேவா சங்கத்தினரின் அங்கத்தினர் உயர்தரக் கல்விகற்றவர்கள். பலவாண்டுகளாகத் தம் துறையிற் பயிற்சிபெற்றவர்களும் ஆவர். ஆதலால் இத்தகையோர் எடுத்துச் செய்யும் சேவை மிக்கப் பயன் அளிப்பதாகும். இவர்களுக்குவேண்டிய பொருளுதவியை அரசாங்கத்தாரும் பொது மக்களும் அளித்துவருவரேல் இவர்கள்மூலமாகச் செய்யப்படும் கிராமச் சீரமைப்புப் பணி மிகச் சிறப்பாக நடைபெறும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

---

இவ்வத்தியாயத்திற்கண்ட குறிப்புக்கள் பின்வரும் நூல்களினின்றும் துண்டுப் பிரசுரங்களினின்றும் பொறுக்கியெடுக்கப்பட்டன: (1) *Reports of the Servants of India Society*, 1931 to 1935. (2) *The Servants of India Society Rural Centre, Mayanar, Report of Activities*, (3) The Servindia Rural Centre, *The Community Training School*, (4) *The Civic and Social Progress League*, (5) *The Tamil Nadu Agricultural Labour Union*, (6) *The Teacher's Co-operative Society*.

# 15

## கிறிஸ்தவ மிஷன்கள்

## (CHRISTIAN MISSIONS)

நாம் இதுகாறும் விவரித்துக்கூறிய இந்திய கிறிஸ்தவ வாலிபர் சங்கம், கூட்டுறவுப் பாங்கிகள், இந்திய சேவா சங்கம் ஆகிய ஸ்தாபனங்களின் கிராமச் சீரமைப்புப் பணி மிகவும் போற்றத்தக்கதே. ஆயினும், இத்தாபனங்களின் பணியைவிட நூறு மடங்கு அதிகப்பணி கிறிஸ்தவ மிஷன்களால் (Christian missions) ஆற்றப்பட்டுவருகின்றது. இம் மிஷன்கள் ஒவ்வொன்றையும், அவை செய்துவரும் ஒவ்வொருவகைச் சேவையையும் தனித்தனியே விவரிக்கப் புகுந்தால் இடம் போதாது. ஆதலின் இவை மிகச் சுருக்கமாகக் கீழே தொகுத்துக் காட்டப் பட்டிருக்கின்றது.

**கல்வி :** கிறிஸ்தவ மிஷன்களே நமது தேசத்தில் முதன்முதல் ஆங்கிலக் கல்வியைத் தொடங்கியவை. 'பிராட்டெஸ்டண்ட் (Protestant) மிஷன்களுடைய

மேற்பார்வையில் இப்பொழுது **16,000** கிராமப் பாடசாலைகளும், **722** ஹைஸ்கூல்களும், **40** கல்லூரிகளும் நடைபெறுகின்றன. 'ரோமன் கத்தோலிக்' (Roman Catholic) மிஷன் மேற்பார்வையில் ஏறக்குறைய **3000** கிராமப் பாடசாலைகளும் பல உயர்தரப் பாடசாலைகளும், **10** கல்லூரிகளும் நடைபெறுகின்றன.

மேலும், இம்மிஷனெரிகள் கல்வி கற்பிக்குந் துறையில் மிக்க தேர்ச்சிபெற்றவர்கள். இவர்களிற் சிலர் புதிய புதிய முறைகளில் ஆங்காங்கே கல்வி முற்றையைத் திருத்தியும் புதுப்பித்தும் வருகின்கின்றனர். உதாரணமாக, நமது மாகாணத்தில், 'அமெரிக்கன் ஆர்க்காட் மிஷன்' ஆதவிரல் வேலூரில் நடைபெறும் கிராமப் பாடசாலையும், பஞ்சாப் மாகாணத்தில் மோஹா (Moga) என்னுமிடத்தில் நடைபெறும் போதனுமுறைப் பாடசாலையும், அலகபாத்தில் நடைபெறும் பயிர்த்தொழிற் கலாசாலையும், நாம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. மிஷனெரி ஸ்தாபனங்களால் நடைபெறும் கல்வி மிகச் சொற்பமான செலவில் நடைபெறுகின்றது. இத்தகைய ஸ்தாபனங்களுக்கு இப்பொழுது அரசாங்கத்தார் அளித்து வரும் பணஉதவி மிகக்குறைவு.

**வைத்தியம்:** **1878**-ம் வருடத்தில் உண்டான பெரும் பஞ்சத்திற்குப் பின்புதான் கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபனங்கள் வைத்தியசாலைகளை நிறுவி, மக்களின்

நோய், வறுமை முதலான குறைகளை நீக்கமுயன்றன. நமது தேசத்திலுள்ள மிகச்சிறந்த ஆஸ்பத்திரிகளிற் பல மிஷன் ஆஸ்பத்திரிகளாக விளங்குவதே இத்தாபனங்களின் பெருமையைப் புலப்படுத்தும். இவற்றின் சேவையாற் பயன்பெறும் மக்களின் தொகையை அளவிட்டுக் கூறவியலுமோ?

**கைத்தொழில்:** மிகச் சிறிதுகாலத்துக்கு முன்புதான் கிறிஸ்தவ மிஷன்கள் தமது மதத்தைச்சேர்ந்த கிறிஸ்தவர்களுடைய பிழைப்புக்கு வேண்டிய கைத்தொழில்களைக் கற்றுக்கொடுக்கத் தீர்மானித்து, இத்துறையிற் பணிசெய்யத் தொடங்கின. இப்பணி பெரும்பாலும் பாடசாலைகளிற் கைத்தொழிற்பயிற்சி அளிப்பதோடு நின்றுவிடுகின்றது. எனினும், இப்பயிற்சிபெற்ற பல மாணவர்கள் நெசவுவேலை, தச்சுவேலை, கொல்வேலை, அச்சுவேலை முதலானவற்றைச் செய்து கௌரவமாகப் பிழைத்து வருகின்றார்கள். நமது சென்னை மாகாணத்தில்மட்டும் கைத்தொழிற் பயிற்சியளிக்கும் மிஷன் பாடசாலைகளின் தொகை 120. இவற்றிற் பயிற்சிபெறுவோரின் தொகை 1100. இவையன்றிச் சிற்சில இடங்களில் அச்சியந்திரசாலை, பாற்பண்ணை, கைநெசவுத் தொழிற்சாலை போன்ற மிகச்சில சிறிய தொழிற்சாலைகள் மிஷன் ஸ்தாபனங்களின் ஆதரவில் நடைபெற்றுவருகின்றன. இத்தகைய தொழிற்சாலைகள் வேறுபலவற்றை அமைத்து அவற்றால் பலருக்குப் பிழைப்பூட்டினால் அது சிறந்த பணியாகும் என்பதற்கு ஐயமில்லை.

**பயிர்த்தொழில்:** கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபனங்கள் இதுகாறும் பயிர்த்தொழிலபிவிருத்தித் துறையில் பெருமுயற்சிகள் ஒன்றும் செய்யவில்லை. ஆயினும், சென்ற சிலவாண்டுகளாக இம்முயற்சியிற் சில மிஷனெரிமார் ஈடுபட்டு அரிய வேலையைத்தொடங்கியிருக்கின்றனர். 'சாங்கிலி' (Shangli) என்ற ஸ்தலத்திலுள்ள **ஜான்கோகீன்** என்னும் பெயருடைய மிஷனெரியார் புதிய பயிர்த்தொழில் முறைகளைக் குடிகளுக்குக் கற்றுக்கொடுத்து வருகின்றார். குஜராத்திலுள்ள 'அங்கலேஸ்வரா' (Ankleshwar) என்னும் தலத்தில் 'மூமா' (The Rev. Moomaw)என்னும் பெயருடைய மிஷனெரியார் தம் மாணவர்களுக்குப் பயிர்த்தொழிற் பயிற்சி அளித்து வருகின்றார். 'எட்டா' (Etah) என்னும் இடத்திலுள்ள 'சிலேடர்' (The Rev. Slater) என்னும் மிஷனெரியார் நல்ல ஆடுகள் கோழிகள் வளர்த்தலைக் கற்றுக்கொடுத்துவருகின்றார்.

அஸாம், வங்காளம், பஞ்சாப், மத்திய மாகாணங்களிலுள்ள சில மிஷனெரிமார் தாழ்த்தப்பட்ட மக்கள் என்னப்படுவோரிலிருந்து கிறிஸ்துமதத்தைத் தழுவிய பலருக்கு அரசாங்கத்தாரிடமிருந்து நிலங்களை இனமாகப் பெற்று, அந்நிலங்களைத் திருத்திப் பலரைக் குடியேற்றி வருகின்றனர். மத்திய மாகாணத்தில், 6000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காடான நிலம் ஒன்று இப்பொழுது அரசாங்கத்தாராற் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலத்தைத் திருத்தியபின் சுகமாக்கப்பட்ட குஷ்டரோகிகள் பலரைக்

குடியேற்றுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இக்குடியேற்ற ஸ்தலம், 'தாம்தாரி' (Dhamtari) என்னுமிடத்தில் வேலைபார்த்துவரும் அமெரிக்க மிஷனெரியாராகிய பிஷப் லாப் (Bishop G. J. Lapp) என்பவரின் மேற்பார்வையிலிருக்கும். இத்தகைய புதிய குடியேற்ற ஸ்தலங்களை (colonies) அமைப்பது கிராமச் சீரமைப்புப் பணியில் மிகச் சிறந்தமுறை எனக் கருதப்படுகின்றது.

**கிராமச் சீரமைப்பு:** யாம் இதுகாறும் விவரித்த சேவை கிராமச் சீரமைப்புக்கு உறுதுணையானதென்பது சொல்லாமலே விளங்கும். ஆயினும், சில முக்கிய கிராமங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றின்கண் யாம் மேற்காட்டிய சேவையையெல்லாம் திறம்பட ஆற்றியும் ஒருவழிப்படுத்தியும் இங்ஙனமாகக் கிராமச் சீரமைப்புப் பணியைச் சிறப்பாகச் செய்யவேண்டுமென 1928-ம் வருஷம் முதல் ஒரு பெரிய இயக்கத்தை மிஷனரிமார் தொடங்கியிருக்கின்றனர். எருசலேம் (Jerusalem) நகரில் கூடிய "சர்வதேச மிஷனெரிமார் மகாநாட்டில்" இச்சேவையின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அதன் பின் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மிஷன் ஸ்தாபனமும் இச்சேவையைத் தனது முக்கிய சேவையாகக் கருதி ஆங்காங்கே பல நற்பணிகளைத் தொடங்கியிருக்கின்றது. பணமுடையுள்ள இக்காலத்திலும் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுவது இம்மிஷனெரி ஸ்தாபனங்களின் பெருமையேயன்றோ?



அமெரிக்கன் கலாசாலை ஆதரவில் யானைமலை நரசிங்கம் கிராமத்தில் நடைபெறும் சீரமைப்புப்பணி. படத்தில் கலாசாலை ஆசிரியர்கள் இவ்வூர்ப்பள்ளிக்கூடச் சிறுவர்களுக்குப் புதிய விளையாட்டுகளைக் கற்றுக்கொடுக்கின்றனர்.

**ஆராய்ச்சியும் சேவையும்:** டெல்லி, ஆக்ரா, லாகூர், நாகபுரி, மதுரை ஆகிய இந்நகரங்களிலுள்ள கிறிஸ்தவக் கல்லூரிகளில் கிராமச் சீரமைப்பைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும் (research), அவ்வாராய்ச்சியாற் கண்டவற்றைக் கிராமங்களிலும் பிறவிடங்களிலும் பரப்பவும் செய்துகாட்டவும் (extension) தனிப்பட்ட இலாகாக்கள் நிறுவப்பட்டுள்ளன. மதுரை, அமெரிக்கன் கல்லூரியிலுள்ள ஆராய்ச்சி—சேவை இலாகா கடந்த நான்காண்டுகளாக, வருஷத்திற்கு ஆயிரம் ரூபாய் செலவில், இரண்டு கிராமங்களில், சுகாதாரம், கல்வி, கூட்டுறவு, பஞ்சாயத்து ஆகிய பலதுறைகளிலும் சேவைபுரிந்துவருகின்றது. பாளையங்கோட்டை சாரா டக்கர் (Sarah Tucker) கல்லூரியில் தலைவராகவும் உபதலைவராகவும் உழைத்துவந்த இரு மாதுசிரோமணிகள், (ஒருவர் ஆங்கிலேயர், மற்றவர் இந்தியர்) அவ்வுத்தியோகங்களிலிருந்து ஒழிவுபெற்று, ஒரு கிராமத்துக்குச்சென்று, அங்கேயே குடியிருந்து, அம்மக்களுக்கு வேண்டுந் தொண்டுபுரிந்துவருகின்றனர். **"தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்" (அகம்: 54)** என மிக அழகாகக் கூறிய நமது பண்டைக் கவியின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவோர் இவரேயன்றோ?

**சீரமைப்பங்கம்:** இந்தியாவில் உழைத்துவரும் எல்லாக் கிறிஸ்தவமிஷன் ஸ்தாபனங்களுக்கும் பொதுவான ஒரு கழகம் (The National Christian Council) நாகபுரியில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இக்கழகம் கிறிஸ்தவமிஷன்களாற்செய்யப்பட்டுவரும் கிராமச் சீரமைப்புப் பணிக்கு ஆலோசனை கூறியும், பல மிஷன்களாற் செய்யப்படும் பணியை ஒருவழிப் படுத்தியும் நற்றொண்டு புரிந்து வருகின்றது.

நமது சென்னை மாகாணத்தில் இந்து சமூகத்துக்குரிய ஆலயங்கள் எத்தனை? மடங்கள் எத்தனை? அரசாங்கத்தாரால் அவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள மானியங்களையும் பக்தகோடிகள் அளிக்கும் உண்டியற்காணிக்கைகளையும் கணக்கிட்டுப்பார்த்தால் இந்து சமய ஸ்தாபனங்களின் செல்வநிலையானது கிறிஸ்து சமய ஸ்தாபனங்களின் செல்வ நிலையைக் காட்டிலும், பதினாயிர மடங்கு உயர்ந்து காணப்படுமென்பதை எவர் மறுக்கக்கூடும்? ஆயினும், இந்து சமய ஸ்தாபனங்களால் கிராம மக்களுக்கு ஆற்றப்படும் சேவை எதுவேனும் உண்டோ என்று ஆராய்ந்தால் இல்லையென்றே விடையளிக்கும் நிலைமையிருக்கின்றது.

மிகவுயர்ந்த நெறிகள் பொதிந்து மிளிரும் அறநூல்களையுடைய தமிழ்மக்கள் தம் ஆலயங்கள் மூலமாகவும், மடங்கள் மூலமாகவும் கிறிஸ்தவமிஷன் ஸ்தாபனங்களைக்காட்டிலும் மிகச் சிறந்த தொண்டு ஆற்ற வேண்டியவரன்றோ? இவர்கள் இங்ஙனம் செய்வரென்று நாம் எதிர்பார்க்கவுஞ் செய்கின்றோம். தாம் மந்திரியாராகவிருந்தபோது கிராமச்சீரமைப்புநிதியை நிறுவிய அரங்கநாதமுதலியாரவர்கள் தாம் திருப்பதி தேவஸ்தானத்துக்கு நிர்வாக அதிகாரியாக (Commissioner) நியமிக்கப்பட்டவுடன் தமது தேவஸ்தானம்

மூலமாகக் கிராமச்சீரமைப்புப்பணியியபற்ற முயலுவே னெனக்கூறியது நடந்து சென்னை மாகாணத்திலுள்ள எல்லா மக்களுக்கும் சிறப்பாக இந்துமத சமூகத்தின ருக்கும் மிக்க திருப்தியை யளிப்பதாகும். எல்லாத் தேவஸ்தானங்களும் தம் வருவாயில் ஒரு சிறு பாகத் தைக் கிராமச் சீரமைப்பு நிதியாகச் சேர்த்து, ஒரு திட்டத்தையும் வகுத்துக் கிராமச் சீரமைப்புப் பணி யைத் தொடங்குமேயானல் இந்துமத சமூகத்தின் பெருமை ஓங்கும் என்பதில் தடையுமுண்டோ?

நாம் சொல்வது புதிதன்று. பண்டைக்காலத்தி லுள்ள கோவில்கள் இத்தகைய பணிகளைச்செய்து வந்தமை பழைய கல்வெட்டுக்களிற் காணப்படுகின் றது. இக்கல்வெட்டுக்களை ஆராய்ச்சிசெய்த ஸ்ரீமான் கோபிநாதராவ் அவர்கள் தாம் எழுதிய 'சோழவமிசச் சரித்திரச்சுருக்கம்' என்ற நூலில் பின் வருமாறு காட்டியிருப்பது உய்த்துணரத்தக்கது.

"கோயில்களிலுள்ள பண்டாரத்திட (treasury) அவற்றிற்கு விட்ட இறையிலி (tax-free) நிலங்களின் வருவாயாலும், பலர் கொடுக்கும் நன்கொடைகளாலும் பணஞ்சேரும். இப்பணத்திற் கோயிற் செலவு போக, மிகுவது நாட்டுக் குடிகளின் க்ஷேமத்துக்குப்பயன் பட்டுவந்தது. நிலம் சீர்திருத்தவேனும், பணமில் லாத அவசரகாலத்து, குடிகள் தம் நிலத்தைக் கீழ் டாக வைத்துக் கோயிற் பண்டாரத்திற் பணம் பெறுவது வழக்கம். இவ்வாறு பெற்ற பணத்துக்குப்

பலிசை (interest) கோயிலுக்கு வேண்டும் கற்பூரமோ எண்ணெயோ எதையேனும் சபையார் பணித்த வண்ணம் கொடுக்கக்கடவர்" (பக்கம் எஎ).

இவ்வாறு கோயிற் பண்டாரங்களிலிருந்து பயிர்த் தொழிலாளருக்குப் பணங் கொடுத்து உதவுவதேயன்றி, மத சம்பந்தமான இலக்கியங்களைப் பாதுகாத்தலை நோக்கமாகச் சில திட்டங்களும் அமைத்திருந்தனரென்பது கீழ்க்கண்ட பகுதியினாலும் அறியலாகும்.

"கோயில்கள்தோறும் திருப்பதிகம் பாடும்படி இவ்வரசர்கள் (சோழர்கள்) திட்டஞ்செய்து மானியமும் விட்டிருந்தனர். திருவாமாத்தூரில் ஒரு சாஸனம் குலோத்துங்கன் அவ்வூரிலே திருப்பதிகம் பாட 16 குருடர்களை ஏற்படுத்தி, அவர்களுக்கு உணவுக்கும் ஆடைகளுக்கும் வேதனம் கொடுத்துவரத் திட்டஞ்செய்தானென்று கூறுகிறது. குருடர்களுக்கு இஃதோர் நல்ல விர்த்தியன்றோ?" (பக்கம் எஉ).

இவ்வாறு கிராமச் சீரமைப்புப் பணிக்கும் இலக்கியப் பாதுகாப்புக்குமாகப் பணங்கொடுத்த தேவஸ்தானங்கள் இந்நாளில் ஏனோ அத்தகைய ஒப்புரவாற்றுப் பணியை மேற்கொள்ளத் தயங்குகின்றன? இப்பொழுது நம் நாட்டிலுள்ள இந்து சமூகத் தலைவர்கள் நம் பண்டைத் தமிழர்களின் முறைகளைப் பின்பற்றித் தம் சிறப்பை நிலைநிறுத்துவார்களாக.

# 16

## அகில இந்திய ஸ்தாபனங்கள்

## (ALL-INDIA AGENCIES)

கிறிஸ்தவ மிஷன் ஸ்தாபனங்களைப்போலக் கிராம முன்னேற்றத்திற்காகத் தேச முழுதிலும் உழைத்து வரும் வேறு சில ஸ்தாபனங்களும் உண்டு. அவைபற்றி இவ்வத்தியாயத்திற் சிறிது கூறுவோம்.

இத்தாபனங்கள் எல்லாவற்றுள்ளும் முதன்மையாகக் குறிக்கப்படத்தக்கது நமது மத்திய அரசாங்கமேயாம்.

மத்திய அரசாங்கத்தார் இப்பணியைக் கடந்த ஆண்டிற்றான் தொடங்கினர். அதற்காக அவர்கள் வழங்கிய நிதியும் ஒருகோடி ரூபாய் மட்டுமே. ஆயினும் இந்நிதி ஒதுக்கிவைக்கப்பட்டதன் காரணமாக ஒவ்வொரு மாகாணத்திலும், ஜில்லாவிலும், தாலூகாவிலும், கிராமத்திலும் அரியபெரியவேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றிய குறிப்புக்களை அநுபந்தத்தில் காண்க.

அரசாங்கத்தார் தொடங்கியுள்ள கிராமச் சீரமைப்புப்பணி கிராமமக்களின் எல்லாக் குறைகளையும்

ஒருங்கே நீக்கும் பெற்றியின. ஆனால் யாம் மேலே கூறப்புகும் ஸ்தாபனங்களின் பணியோ கிராம மக்களின் சிலசில குறைகளைமட்டுமே நீக்குமாறு தொடங்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, கிராம மக்கள் தம் ஒழிவுநேரங்களில் ஒரு தொழிலைச் செய்து அதன்மூலம் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளுமாறு 'அகில பாரத நூல் நூற்போர் சங்கம்' (All-India Spinners' Association) ஒன்று பலவாண்டுகளுக்குமுன் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தின் கிளை ஸ்தாபனங்கள் ஒவ்வொருமாகாணத்திலும், ஜில்லாவிலும், தாலூகாவிலும், சிற்சில பெரிய கிராமங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இச்சங்கத்தின் ஆதரவில் இந்தியா முழுவதிலும் ஏறக்குறைய 7,000 கிராமங்களில் நூல் நூற்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நூல் நூற்போர் தொகை ஏறக்குறைய 2 லக்ஷம்; நெய்வோர் தொகை 15,000; விற்போர் முதலானோர் தொகை 1,500; வருடந்தோறும் உற்பத்தியாக்கப்படும் துணியின் விலை மதிப்பு ரூபாய் 55 லக்ஷம். இத்தொழிலின் சிறப்பை விளக்க நமது மாகாணத்திலிருந்து இரண்டு உதாரணங்கள் காட்டுவோம்.

சேலம் ஜில்லாவிலுள்ள திருச்செங்கோடு என்னும் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள "காந்தி ஆசிரமம்" என்னும் ஸ்தாபனத்தின் ஆதரவில் கடந்த பத்தாண்டுகளாகக் கதர்த்துணி உற்பத்தி செய்யும்

தொழில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்தாபனத்தின் வருஷ சராசரி நூலுற்பத்தியின் விலைமதிப்பு ஏறக்குறைய ரூபாய் 80,000. கடந்த பத்தாண்டுகளாக இவ்வாசிரமத்தில் நடத்தப்பட்ட சேவையினால் கிராம மக்களுக்கு ஆறு லக்ஷம் ரூபாய் கிடைத்திருக்கின்றதென்று 1934-ம் வருட அறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாசிரமத்திலுள்ள தொண்டர்களால், கல்விப்பயிற்சி, வைத்திய சிகிச்சை, கள்ளுண்ணாமைப் பிரசாரம், ஹரிஜன முன்னேற்றம் ஆகிய பல சேவைகளும் ஆற்றப்பட்டுவருகின்றன.

கையால் நூல் நூற்றலையும் துணி நெய்தலையும் பிரதானமான கைத்தொழிலாகக்கொண்டு, பிறவகைச் சேவைகளையும் மிக்க சிறப்பாக ஆற்றிவரும் வேறொரு ஸ்தாபனம், பெஜவாடா (Bezwada) நகரிலுள்ள "கதர் சம்ஸ்தானம்" என்பது. இஃது 18-4-1927ல் நிறுவப்பட்டது. இதன் அங்கத்தினர் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றனர். முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தமக்கென ஒரு உடைமையும் வேண்டாதார். இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் தம் ஆயுள் முழுவதும் உழைத்துவருவோம் என வாக்களித்தவர்கள். மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் இத்தாபனத்திற்கு வேண்டும் முதல் (capital) அளிக்கவேண்டியவர்கள்; இவர்கள் அளிக்கும் முதலுக்குக் கிடைக்கும் இலாப நஷ்டம் இவர்களைச் சார்ந்ததாகும். நான்காவது வகுப்பைச் சேர்ந்தவர்கள்

உழைப்போர் (labourers); இவர்களுக்கு இவர்களது உழைப்புக்குரிய கூலிமட்டும் கொடுக்கப்படுகின்றது. இந்நான்குவிதமான வகுப்பு மிகச் சிறந்த தத்துவங்களைக் கொண்டுள்ளது என்பதற்கு ஐயமில்லை.

கதர் சம்ஸ்தானத்தில் உற்பத்தியாக்கப்படும் துணியை விற்பதற்குப் பண்டமாற்று முறையில் ஒரு திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அஃது நெல்லுக்கும் பிறபொருள்களுக்கும் ஒரு குறிப்பிட்ட மாறாத மாற்று மதிப்பை இறுத்து, அம்மதிப்புப்படி பிற பொருள்களை மாற்றிக்கொள்வதாகும். அம்மாற்று மதிப்பு பின்வருமாறு:—166 பவுண்டு நிறைகொண்ட ஒரு மூட்டை நெல் = 250 பவுண்டு நிறையுள்ள காய்கறிகள் = 4 ஜோடி செருப்புகள் = 12½ பவுண்டு நிறையுள்ள பஞ்சு = 25 பவுண்டு நிறையுள்ள மிளகாய் = 6 பவுண்டு நெய் = 50 பவுண்டு நிறையுள்ள புளி அல்லது வெல்லம் = 25 பவுண்டு நிறையுள்ள தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய். இங்ஙனம் பண்டமாற்றுச் செய்துகொள்வது மிகச் சிறந்தமுறையென்பது இத்தாபனத்துத் தலைவருடையகொள்கை.

நமது தேசத்திலுள்ள சில சமூகத்தினர் தீண்டாதார் எனவும் தாழ்த்தப்பட்டவர் எனவும் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கின்றனர். இன்னவர்களுடைய குறைகளை நீக்குவதற்காக 'அகில இந்திய ஹரிஜன சேவா சங்கம்' நிறுவப்பட்டுள்ளது. இச்சங்கத்தை நிறுவிய செயல் நமது தேச சரித்திரத்திலேயே என்றும் நின்றிலங்கத்தக்க பெருமை வாய்த்தது.

இச்சங்கத்தின் சேவை பலதிறப்பட்டது. ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமைக்காகப்போராடுவது ஒன்று. கல்வி கற்பிப்பது மற்ருென்று. தமிழ் நாட்டு மாகாணக்கழகத்தின் மூன்ருவது வருடத்திய அறிக்கைப்படி ஹரிஜனபிள்ளைகளுக்கென இச்சங்கத்தின் ஆதரவில் 121 பாடசாலைகள் நடைபெறுகின்றன. இவற்றிற் படிக்கும் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் முதலியனவும் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஏறக்குறைய 3500 ரூபாய் 'ஸ்காலர்ஷிப்' ஆக வழங்கப்பட்டிருக்கின்றது. சென்னைக்கருகிலுள்ள கோடம்பாக்கத்தில் ஒரு கைத்தொழிற் பாடசாலையும் நிறுவப்பட்டுள்ளது.

அகில இந்திய ஸ்தாபனமாகக் கிராமச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மூன்ருவது நிலையம் "அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கம்" (The All-India Village Industries Association). இச் சங்கத்தின் நோக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் அவ்வக்கிராமமக்களுடைய உணவு, உடை முதலான ஜீவனோபாயத்துக்குரிய சிறிய கைத்தொழில்களைத் தொடங்கி, அவற்றைக் கிராமமக்களே தமது சொந்த முயற்சியினல் வளர்த்துவருவதற்கு உதவிபுரிதலாம். பல பல பெரிய கைத்தொழில்களைத் தொடங்கி, மிகுந்த அளவிற் பொருள்களை உண்டுபண்ணி, அவற்றை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்பதற்குரிய முயற்சிகளைச் செய்வது இச்சங்கத்தின் நோக்கமல்ல; இத்தகைய முறையிற் கைத்தொழில்களை

நடத்துவது நமது பண்டைக் கிராம அமைப்புக்கும் மக்களின் வாழ்க்கைநலனுக்கும் கேடுண்டாக்குவது என்பதே இச்சங்கத்தைநடத்துவோரின் கோட்பாடு.*

ஆதலால், இச்சங்கத்தின் தலைமைக் கழகத்தார் (Central Board) தாமே எவ்விதக் கைத்தொழிலை யும் தொடங்கி நடத்துபவரல்லர். "இன்னின்ன கைத்தொழில்களைத் தொடங்குங்கள்" என மாகா ணக் கழகத்தாருக்குக் கட்டளையிடுபவரும் அல்லர். மத்திய கழகத்தாரின் முக்கிய வேலை யெல்லாம் ஆராய்ச்சியும், அவ்வாராச்சியாற் கண்ட விஷயங் களைப் பிற கழகங்களுக்கு அறிவிப்பதும் ஆம்.

அகில இந்திய கைத்தொழிலபிவிருத்தி சங்கத் தின் ஆதரவில் நமது தேசத்தின் பற்பல பாகங்களி லுள்ள 15 ஜில்லாக்களில் வேலை தொடங்கப்பெற் றுள்ளது. வேலை செய்யப்படும் கிராமங்களின் தொகை 115. இவ்வேலையை மூன்று பாகங்களாகப் பிரித்து விளக்கிக்காட்டலாம்.

**சுகாதாரம்:** கிராமத்தார் தங்கள் தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், மலஜலங் கழிப்ப தற்குக் குழிக் கக்குசுகள் அமைத்துக்கொள்ளவும், குப்பை கூளங்களைக் குழிகளிற் சேமித்து வைக்கவும் பலவிடங்களிற் பிரசாரஞ் செய்யப்பட்டது. சிலவிடங் களில் பிரசாரத்தால் ஒரு பயனும் விளையவில்லை.

---

**Vide "Aims and Objects of the A.I.V.I.A.," Pp. 3-4. Also "Village Industries Association," Pp.5-7.*

ஆனால், குஜராத்திலும் பஞ்சாபிலும் உள்ள சில கிராமங்களில் கிராமத்தாரும் பள்ளிக்கூடச் சிறுவர்களும் ஒழுங்காகத் தெருக்களைச் சுத்தஞ்செய்துவருகின்றனர்.

ஒரு கிராமத்தில் தட்டார் வசிக்கும் தெருவை அத்தெருவிலுள்ள மாதர்களே சுத்தஞ் செய்து வருகின்றனர். சில கிராமங்களில் தண்ணீர் வீணாய்த் தேங்கிக்கிடக்கும் குளங்குட்டைகள் மூடப்பட்டிருக்கின்றன, மேலும், பல கிராமங்களில் வைத்திய சிகிச்சைக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. **(8—11)***

**உணவு**: வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயங்களைக்கேட்டு, கைக்குற்றரிசி, திரிகையிற்றிரித்தமாவு, செக்கிலாட்டிய எண்ணெய், நாட்டுச்சர்க்கரை ஆகிய உணவுகள் மிகச் சிறந்தவை எனத்தெரிந்து, இவ்வுணவுகளை மக்கள் உண்ணும்படி பிரசாரஞ் செய்யப்பட்டுவருகின்றது.

**கைத்தொழில்:** கையினால் நெல்குற்றும் தொழில் அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றது. குண்டூரில் இதற்கென நிறுவப்பட்ட ஒரு சங்கத்தின் ஆதரவில் இத்தொழில் மிகச்சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இங்ஙனமாகவே, மாவு திரித்தல், வெல்லம்

---

* வளைவு கோடுகளுக்குள் இடப்பட்டிருக்கும் எண்கள் இச்சங்கத்தின் முதல் வருட அறிக்கையின் பக்கங்களின் எண்களைக் குறிப்பிடுவன.

செய்தல், எண்ணெய் ஆட்டல் ஆகிய தொழில்களும் பற்பலவிடங்களில் அபிவிருத்திசெய்யப்படுகின்றன. இத்தொழில்களைச் செய்வோர் இப்பொழுதுள்ள முறைகளைக்காட்டிலும் சிறந்த முறைகளைக் கைக்கொள்ளும்படி ஆராய்ச்சி செய்யப்பட்டுவருகின்றது. இவ்வாராய்ச்சியாற் கண்டறியப்பட்ட முறைகளில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது சுத்தமாகவும் வெள்ளையாகவும் வெல்லம்செய்தலும், ஒருநாளைக்குப் பதினாறு சேர் எண்ணெய் ஆட்டக் கூடிய ஒரு புதிய செக்கைச் செய்ததுமாம் (17). மேலும், மத்திய மாகாணத்தில் விளையும் எள்ளிலிருந்து அதிக எண்ணெய் எடுக்கலாம் என ஆராய்ச்சியாற் கண்டறியப்பட்டு, மத்திய மாகாணத்து எள்ளை வங்காளத்தில் விதைத்து வரும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன (18).

இச்சங்கத்தாரின் ஆதரவில் புதிய முறையில் தேன் செய்தல், (bee-keeping) வெண்ணெய் செய்தல் (dairying), மீன் அபிவிருத்தி செய்தல் (fish-culture) ஆகிய பல புதுக் கைத்தொழில்களும் ஆங்காங்கே வளர்க்கப் படுகின்றன (18-19). இத்தகைய புதுக் கைத்தொழில்களை மிகத்திறமையுடன் நடத்துவதற்கான புதிய முறைகளும் ஆராயப்படுகின்றன. உதாரணமாக, கால்மிதியினால் இயங்கக்கூடிய கைமனை (petal-ginnig machine) யொன்று செய்யப்பட்டிருக்கின்றது. இம்மனை பழைய கைம்மனையைக் காட்டிலும் மூன்று மடங்கு வேகத்தோடு வேலை செய்கின்றது (20). இங்ஙனமாகவே, கையினாற் செய்யப்படும் காகிதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து, அவ்வாராய்ச்சியின் பயனாக இப்பொழுது ஒரு 'ரீம்' நான்கு அல்லது ஐந்து பவுண்டு மட்டும் நிறை கொண்ட மெல்லிய காகிதம் செய்யப்பட்டு வருகின்றது (21). பல அலங்காரமான கோலங்களுடன்

பாய், சீப்பு முதலான பொருள்கள் செய்யப்படுகின்றன. நமது தேசத்தில் வருடத்தில் 3 கோடி மாடுகள் இறக்கின்றன; இறந்த மாடுகளின் தோலைப் பக்குவமாய் உரிக்கவும், சிறந்த முறையிற் பதனிடவும், குடல்களிலிருந்து பந்தடிக்கும் மட்டைகளுக்குரிய நரம்புகளைச் செய்யவும் (guts for tennis rackets) ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாராய்ச்சியின் பயனாகப் பல புதிய முறைகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இம்முறையைப் பல தொழிலாளருக்குக் கற்பித்துத் தோல் பதனிடும் தொழிலை மிகச் சிறப்பாக நடத்தலாம் என இவ்வறிக்கையிற் கூறப்பட்டுள்ளது (23—24).

# 17

## மைசூர்
## (MYSORE)

கிராமச் சீரமைப்பு இயக்கம் சிலசுதேச மன்னர்களின் இராஜ்யங்களிலும் மிகத் தீவிரமாகத் தொடங்கப்பெற்றுள்ளது.

நமது மாகாணத்திலும், மைசூர், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை ஆகிய இராஜ்யங்களிலும் கிராமச் சீரமைப்பு இயக்கம் நடைபெறுகின்றது. இவை யெல்லாவற்றுள்ளும் மைசூர் அரசாங்கத்தார் செய்துவரும் சேவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. ஆதலின் இதுபற்றி இவ்வத்தியாயத்திற் சிறிது கூறுவோம்.

மைசூர் அரசாங்கத்தார் **1927**-ம் வருடத்தில் கிராமச்சீரமைப்புப்பணியைத் தொடங்கினர். அவ்வருடத்தில் கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அச்சட்டத்தின்படி ஏறக்குறைய எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் நிறுவப்

பட்டிருக்கின்றன. இதுகாறும் நிறுவப்பட்டுள்ள பஞ்சாயத்துக்களின் தொகை 11,257. இப்பஞ்சாயத்துக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் வரி விதித்து, சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம் ஆகிய எல்லாச் சேவைகளையும் தாமே ஆற்றிவருகின்றன. இச் சேவைகளுக்குரிய செலவுக்காக அரசாங்கத்தார் மிகச் சொற்பமான பணவுதவியும் அளிக்கின்றனர் (7).

குளங்கள் கிணறுகள் தோண்டுவதற்கும், பாடசாலைகள் கட்டுவதற்கும், ரோடுகள் அமைப்பதற்கும் இன்னும் இவைபோன்ற பிறசேவைகளுக்கும் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள எல்லா மக்களும் வாரந் தோறும் கட்டாயமாக வேலை செய்யவேண்டும் (compulsory weekly labour) என்ற ஒரு திட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது (8). இஃது பண்டைக்காலத்து முறை. இம்முறையைச் சென்னை மாகாணப் பஞ்சாயத்துக்களும் கைக்கொள்வது நலம்.

102 பஞ்சாயத்துக் கிராமங்களில் தெருக்களில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. 128 கிராமங்கள் மின்சார சக்தியைப் பயிர்த்தொழில் அபிவிருத்திக்காகவும், 24 கிராமங்கள் கைத்தொழில் அபிவிருத்திக்காகவும் உபயோகிக்கின்றன (10).

இப்பஞ்சாயத்துக்களிற் பல மிகத்திறமையாய் நடைபெறுகின்றன. அதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் யாம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன கீழ் வருவனவாம். பஞ்சாயத்துக்களில் நிர்வாகத்திறமை

யுடைய சிலர் அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுகின்றனர். பஞ்சாயத்துக்கள் வரிவசூல் இலாகாவின் மேற்பார்வையிலிருந்துவருகின்றன. மேலும் இவை விதிக்கும் வரிகளைக் கிராம மணியகாரர் வசூலித்துக் கொடுக்கின்றனர்.* இப்பஞ்சாயத்துக்களின் வேலையைப்பற்றி அரசாங்கத்தார் வெளியிடும் வருடாந்தர அறிக்கையில் நற்றொண்டுபுரியும் பஞ்சாயத்தார்களின் பெயரும் வெளியிடப்படுகின்றன (20—26).* நமது சென்னை மாகாண அரசாங்கத்தார் யாம் இங்குக் காட்டிய முறைகளை நமது பஞ்சாயத்து நிர்வாகத்திலும் அமைப்பார்களானால் நமது பஞ்சாயத்துக்களும் சிறப்பாக நடைபெறும். இது நிற்க.

கிராமங்கள்தோறும் பஞ்சாயத்துக்களை நிறுவி, அவை மிகச்சிறந்த சேவையை ஆற்றிவருதற்கு வேண்டிய பல விதிகளை அமைத்த மைசூர் அரசாங்கத்தார் அப்பணி போதாதென்று கருதி, கிராமச்சீரமைப்பை மிகத் தீவிரமாகச் செய்வதற்காக ஒரு புதிய திட்டத்தையும் இவ்வருடம் மே மாதத்தில் தொடங்கியிருக்கின்றனர். இத்திட்டமாவது, மிகத் திறமையுடன் வேலை நடத்தப்பெறும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுள்ள சில கிராமங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றில் எல்லா அரசாங்க இலாகாக்களும்

---

* 'The *Mysore Village Panchayat Manual*' (1931) (பக்கங்கள் 87–137). இவ்வத்தியாயத்தில் வளைவு கோடுகளுக்குள் இடப்பட்டிருக்கும் எண்கள் 1934-35-வது வருஷத்து அறிக்கைப்பத்திரத்தின் பக்கங்களைக் குறிப்பன.

தம் வேலையைச் சிறப்பாகச் செய்து, அக்கிராமங்களை மாதிரிக் கிராமங்களாக அமைக்க முயல்வதாம். இக் கிராமங்களைச் 'சீரமைப்புத் தலைமைத் தலங்கள்' (rural reconstruction centres) என வழங்கலாம். இத்தகைய தலங்களை நமது மாகாணத்திலும் அமைக் கப்படவேண்டுமென மேல்வரும்பாகத்திற் கூறப்படும்.

தலைமைத் தலங்களைத் தெரிந்தெடுப்பதும், அவற்றிற் செய்யப்படவேண்டிய வேலையைத்திட்டஞ் செய்வதும், அங்குப் பணிசெய்யவேண்டிய அரசாங்க இலாகாக்களைத் தூண்டுவதும் அந்தந்த ஜில்லாவி லுள்ள டிப்டி கமிஷனருடைய பொறுப்பு என அர சாங்கத்தார் கட்டளையிட்டிருக்கின்றனர்.* இக் கட் டளையில் ஒவ்வொரு அரசாங்க இலாகாவும் செய்து முடிக்கவேண்டிய வேலைக்குறிப்பும் காட்டப்பட்டுள் ளது. அது விவரம் கீழே காண்க.

---

நிலவரி இலாகா:

1. பஞ்சாயத்துக்களின் நிர்வாகம் மிகத்திறமையுடன் நடைபெற உதவிசெய்தல்.
2. குடி தண்ணீர் வசதியளித்தல்.
3. தெருக்களும் கிராமங்களும் அழகாகக் கட்டப்பட ஒரு திட்டத்தைத் தயாரித்தல்.

---

* Order No. L. 8508-8567—V. P. 44-35-2, dated Bangalore, the 9th May 1936. Also Order No. L. 8988-9038—V. P. 44-35-3, dated Bangalore, the 27th May 1932.

4. கிராமங்களை வாரத்திற்கொரு முறையாகிலும் சுத்தஞ் செய்தல்.

கல்வியிலாகா:

1. படிக்கும் வயதிலுள்ள சிறுவர் சிறுமியர் பள்ளிக்கூடஞ் செல்லச் செய்தல்.
2. கல்வி கல்லாத இளைஞர் பெரியோர்களுக்குக் கல்வி கற்பிக்கும் அறிவுரைச் சாலையை அமைத்தல்.
3. சாரணச் சிறுவர் இயக்கத்தைப் பரப்புதல்.

பயிர்த்தொழில், கால்நடை இலாகா:

1. புதிய பயிர்த்தொழில் முறைகளைக் கற்பித்தலும், புதிய வித்துக்கள், புதிய கருவிகள் முதலானவற்றை விற்றலும்.
2. தேன் செய்தல், கோழி வளர்த்தல் போன்ற சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.
3. கொல்லைப் புறங்களிற் காய்கறிச் செடிகளைப் பயிரிட உதவியளித்தல்.
4. ஆடுமாடுகள் அபிவிருத்தி முதலாயின.

சுகாதார இலாகா:

1. அம்மை குத்தல்.
2. சிசு பரிபாலனம்.
3. காய்ச்சல் மருந்தாகிய 'கொய்னு' (Quinine) விற்பது.

கைத்தொழில்:

1. பட்டுப்பூச்சி வளர்த்தல், கைநெசவு முதலான குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.
2. சரியான நிறைகளும் படிக்கற்களும் வழங்கச் செய்தல்.

கூட்டுறவு:

1. பணம் கடனுகக் கொடுத்து வழங்கல்.
2. விளைபொருள்களை விற்பதற்குரிய முறைகளைச் செய்தல்.

# PART THREE

# மூன்றாம் பாகம்

# கிராமச் சீரமைப்புத் திட்டம்

அருவினை யென்ப வுளவோ? கருவியாற்
கால(ம்) அறிந்து செயின்.

இதனை இதனா(ல்) இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல்.

திருக்குறள் : 483, 517.

# 18

## மாகாணப் பொருளாதாரக் கழகம்

## (PROVINCIAL ECONOMIC COUNCIL)

கிராமச் சீரமைப்புக்காக அரசாங்கத்தார் ஒரு முயற்சியும் செய்யவில்லை எனக் கூறுவது தவறு.[1] ஏனெனில், கல்வி, சுகாதாரம், பயிர்த்தொழில், நீர்ப்பாசனம், கால்நடை, கைத்தொழில் ஆகிய பலதுறைகளிலும் கிராமமக்களுக்குவேண்டிய பற்பல சேவைகளையும் அரசாங்கத்தார் அவ்வக்காலத்தே ஆற்றிவந்திருக்கின்றனர்.

---

1. "It has sometimes been said that the Indian Government has......attacked almost every problem except the one which is the most important of all, namely, the improvement of the conditions of rural life. That is not entirely true; but the charge is to this extent true, that we have never made a direct and concerted attack on this problem" Sir Malcolm Hailey in the Foreword to "*Village Uplift in India.*"

ஆனால் இச்சேவைகளைச் செய்யவேண்டிய முறை யிலும், செய்யவேண்டிய அளவிலும் செய்யவில்லை. ஆதலாற்றான் கிராம வாழ்க்கையில் இன்னும் பல குறைகள் பல்கிக்கிடக்கின்றன.

ஆயினும் இப்பொழுது தோன்றியுள்ள பொரு ளாதாரக் குழப்பம் கிராமமக்களுடைய வருவாயைக் குறைத்து, அவர்களுடைய வரிசெலுத்தும் ஆற்றலைப் போக்கியிருப்பதனால், அரசாங்கத்தார் கிராம முன் னேற்றத்தைத் தமது பெருமுயற்சியாக மேற்கொண் டிருக்கின்றனர்.

இந்நோக்கத்துடன் சென்ற வருடத்தில் மத்திய அரசாங்கத்தார் கிராமச் சீரமைப்புக்காக எல்லா மாகா ணங்களுக்கும் ஒரு கோடி ரூபாய் அளித்தனர். இத் தொகை மிகக்குறைவாக இருந்தபோதிலும், இதனால் விளைந்த பலன் மிகவும் அதிகம். மேகத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தமாத்திரத்தில் பூமியில் பசும்புல் தோன்றுவதுபோல, மத்திய அரசாங்கத்தாருடைய பணவுதவியைப் பெற்றமாத்திரத்தில் எல்லா மாகாண அரசாங்கத்தாரும் கிராமச்சீரமைப்பு இயக்கத்தை மிக்க ஆர்வத்துடன் தொடங்கியிருக்கின்றனர்.

இவ்வுதவியளிக்குமுன்னும் சில மாகாண அரசாங் கத்தார் கிராமச்சீரமைப்பைத் தொடங்கியிருந்தனர். உதாரணமாக, பஞ்சாபில் எல்லா அரசாங்க இலாகாக் களின் வேலையையும் ஒருவழிப்படுத்திக் கிராமச் சீரமைப்பு வேலையைத் தீவிரமாகச் செய்வதற்காகத்

தனிப்பட்ட ஒரு அதிகாரி (Rural Reconstruction Commissioner) நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.[1] வங்காளத்திலும் இப்படிப்பட்ட ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பம்பாய் மாகாணத்தில் அதன் கவர்னராகவிருந்த ஸர் பிரடரிக் ஸைக்ஸ் (Sir Frederick Syxes) என்பவரால் அம்மாகாணம் முழுதிற்கும் ஒரு பெருந்திட்டம் வகுக்கப்பட்டு, ஏறக்குறைய இரண்டாண்டுகளாகச் சிறந்தசேவை ஆற்றப்பட்டு வருகின்றது.[2] மத்திய மாகாணத்திலும் இதைப் போன்ற ஒரு திட்டமும் தொடங்கப்பெற்றுள்ளது.

ஆனால், சென்னையில் இன்னும் தீவிர முயற்சி ஒன்றும் செய்யப்படவில்லை. ஒரு திட்டமும் வகுக்கப்படவுமில்லை. நமது மாகாணத்தை "இருண்ட மாகாணம்" (benighted province) என்பர். இங்கு, எல்லோரும் எப்பொழுதும் உறங்கிக்கொண்டேயிருப்பர் போலும்!

ஆயினும், அரசாங்கத்தார் இனிக் காலந்தாழ்த்தாது, ஒரு பெருந் திட்டத்தை வகுத்து, கிராமச்சீரமைப்பு இயக்கத்தை விரைவில் தொடங்கவேண்டும். திட்டத்தை வகுப்பதே நமது முதல் வேலை.

---

1. The Punjab Government Letter No. 392-D, dated 8th February, 1934.

2. The Hindu dated 1—10—1934.

திட்டம் (plan) என்னும்போது ரஷ்யர்கள் செய்தவாறு ஐந்துவருடத்திட்டம் அல்லது பத்துவருடத் திட்டம் எனப் பொருள் கொள்ளவேண்டா. அத்தகைய திட்டத்தை வகுப்பது உடனே செய்யத்தக்க காரியமன்று.

இப்பொழுது செய்யவேண்டுவது என்னையெனின், கிராமச் சீரமைப்பு இயக்கத்துக்கு ஊக்கமும் பொருளுதவியும் அளிக்கக்கூடிய ஒரு கழகத்தை நிறுவுவதே.

நமது மாகாண அரசாங்கத்தார் சிறிது காலத்துக்குமுன், மந்திரிமார்களும் நிர்வாக சபை அங்கத்தினர்களும் அடங்கிய ஒரு பொருளாதாரக்கழகத்தை (Economic Council) நிறுவியிருக்கின்றனர். இக்கழகத்தையே கிராமச் சீரமைப்புப் பணியியற்றும் முக்கிய அரசாங்க ஸ்தாபனமாகக் கொள்ளலாம்.

இக்கழகம் கிராம அபிவிருத்திக்கென உழைக்கும் எல்லா அரசாங்க இலாகாக்களின் வேலையையும் தூண்டல், ஒருவழிப்படுத்தல் ஆகிய சேவையை ஆற்றிவரவேண்டும். இத்தகைய சேவை இப்பொழுது சிறிதளவில் தொடங்கப்பெற்றும் உள்ளது. ஆனால் இக்கழகத்தாருடைய முயற்சிகள் அதிகப் பயன் அளிக்கவேண்டுமானால், அரசாங்கத்தாரல்லாத வேறு ஸ்தாபனங்களின் உதவியையும் அவ்வப்போது தேடிக்கொள்ள வேண்டும். இத்தகைய ஸ்தாபனங்களில் மிக முக்கியமானது கிராமசேவையில் ஈடுபட்

டிருப்பவர்களின் பிரதிநிதிகளடங்கிய ஆலோசனைச் சங்கமாகும்,

நமது மாகாணத்தில் இத்தகைய ஆலோசனைச் சங்கம் இதுகாறும் நிறுவப்படவில்லை. ஆ த லா ல் இதை நிறுவுவது நமது இரண்டாவது முக்கிய வேலையாகும். எனவே, இதைப்பற்றிய சில குறிப்புக்களை யாம் இங்கு எடுத்துக்காட்டுவது மிகையாகாது.

இவ்வாலோசனைச் சங்கத்தை "மாகாணக் கிராமச் சீரமைப்புச் சங்கம்" (Provincial Rural Reconstruction Association) என வழங்கலாம். இச்சங்கமானது ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனங்கள், பெண்கள் சங்கங்கள், சாரணச் சிறுவர் சிறுமியர் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமசேவையிலீடுபட்ட பிற வகை ஸ்தாபனங்கள் ஆகிய பலவற்றிலிருந்து தெரிந்தெடுத்தனுப்பப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய பெரிய ஸ்தாபனமாக இருக்கவேண்டும். இச்சங்கம் வருஷத்திற் கொருமுறை ஒரு மகாநாட்டைக் கூட்டி, கிராமச் சீரமைப்பு இயக்கத்தால் நடைபெற்றுவரும் வேலையைச் சீர்தூக்கி, அவ்வேலையின் அபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளை அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்க வேண்டும். கிராமச் சீரமைப்பு நடைபெறும் முக்கிய தலங்களிலும், ஒவ்வொரு தாலூகாவிலும், ஜில்லாவிலும், சிறிய மகாநாடுகளும் நடைபெறுவது அவசியம் என்பதை நாம் விளக்கிக் காட்ட வேண்டியதில்லை. மாகாணக் கிராமச் சீரமைப்புச் சங்கத்தின் நிர்வாகம் பத்துமுதல் பதினைந்துபேர்

அடங்கிய ஒரு சிறு கழகத்தாரால் நடைபெறலாம் என்பது வெளிப்படை. இது நிற்க.

மாகாணப் பொருளாதாரக்கழகத்தின் வேறொரு சேவை கிராமச்சீரமைப்புக்குரிய நிதியைச் சேகரித்த லாம். மைசூர் அரசாங்கத்தார் இப்படிப்பட்ட நிதி களுக்குப் பொருளுதவி அளிப்போரின் நாமங்களை அரசாங்க 'கெஜட்டில்' (Gazettee) வெளியிடுகின்றார் கள். சென்னை அரசாங்கத்தாரும் இம்முறையைப் பின்பற்றினால் நலம். நமது மாகாணக் கவர்னர் துரை யவர்களும் பொருளாதாரக் கழகத்தாரும் சிறிது முயன்றால் கிராமச் சீரமைப்புநிதி விரைவில் வளர்ந்து பெருகுமென எதிர்பார்க்கலாம்.

இவ்வாறு சேகரிக்கப்படும் நிதியைக் கிராமச் சீரமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பரோபகார ஸ்தா பனங்களுக்கே வழங்கவேண்டும். கிராமச் சீரமைப்பு இயக்கத்தில் அரசாங்கத்தார் எவ்விதப் பணியையும் தாமே மேற்கொண்டு செய்யவேண்டா. அங்ஙனஞ் செய்வது வீண் நஷ்டத்திற்குள்ளாக்கும் என்பது இதற்கு முன் செய்யப்பட்ட வேலையினாற் கண்ட அநுபவமாகும். சிறிது காலத்திற்கு முன் நமது சென்னை அரசாங்கத்தார் திருவெவ்வுளூர்த் தாலூகா வில் (Trivellore Taluq) கிராமச் சீரமைப்புப் பணி செய்வதெனத் தீர்மானித்து, மிக்கப் பெருஞ் செல வில் ஓர் ஆராய்ச்சியைத் தொடங்கினர். இவ்வாராய்ச்சி சர்வகலாசாலையாரின் ஆதரவில் நடைபெற்றிருந்தால்

அரசாங்கத்தார் செலவழித்த தொகையில் நூற்றில் அல்லது ஐம்பதிலொரு பாகமே சென்றிருக்கும். இங்ஙனமாகப் பெருஞ் செலவில் செய்யப்பட்ட ஆராய்ச்சியால் விளைந்த பயனும் ஒன்றுமில்லை.

நமது சென்னை அரசாங்கத்தார் இப்பொழுது பூவிருந்தவல்லியில் தொடங்கியுள்ள சுகாதார அபிவிருத்தித்திட்டமும் (The Poonamalle Health Unit Scheme) பெரும்பயன் அளிக்கத்தக்கதன்று. இச்சேவைக்கெனச் செலவிடப்படும் தொகையில் நான்கிலொரு பாகத்தையேனும் சுகாதார அபிவிருத்திக்காக உழைக்கும பரோபகார சங்கங்கள் எவற்றுக்கேனும் அளித்தால் அவை இச்சேவையை ஆற்றிவைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆதலால் கிராமச் சீரமைப்புப் பணியில் தாம் நேரே ஈடுபடாமலிருப்பதே நமது சென்னை அரசாங்கத்தார் செய்யவேண்டிய பணி. நமது மாகாணத்தில் பொதுஜன சேவைபுரியும் சங்கங்கள் மிகப் பல உள்ளன. இது நம் மாகாணத்தின் பெருமைகளில் ஒன்று.. இப்படிப்பட்ட பொதுஜன சேவைச் சங்கங்களுக்கு ஆலோசனைகளைக் கூறியும், பரோபகாரிகளிடமிருந்து பொருளுதவியைத் தேடிக்கொடுத்தும், இவற்றால் செய்யப்படும் பணியை ஒருவழிப்படுத்தியும் உதவிசெய்வதே மாகாணப்பொருளாதாரக்கழகத்தின் முக்கிய தொண்டு ஆகும்.

# 19

## கிராம அபிவிருத்தி ரிஜிஸ்டர்

(VILLAGE IMPROVEMENT REGISTER)

மாகாணப் பொருளாதாரக் கழகம் சென்னைநகரில் நிறுவப்பட்டபோதிலும், கிராமச் சீரமைப்பு இயக்கம் கிராமங்களில் நடைபெற வேண்டும் என்ற உண்மையை யாம் இங்கு எடுத்துக்கூறவேண்டுவது அவசியம்.

மேலும், இவ்வியக்கம் நமது மாகாணத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் தொடங்கப்படவேண்டும். ஒரு சில கிராமங்களைமட்டும் சீர்ப்படுத்தி, அவற்றை மாதிரிக்கிராமங்கள் (model villages) ஆக்கி, அவற்றைப்பார்த்து மற்றக்கிராமங்க்ள் தங்களைத் தாங்களே சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும் என விட்டுவிடுவது உசிதமல்ல. எல்லாக் கிராமங்களும் சீர்ப்படுத்தப் படவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் அவ்வக்கிராமத்தாராலேயே செய்யப்படவேண்டியவேலைகள் இவையிவை

யென யாம் முற்கூறினோம். இத்தகைய வேலைகளைக் கிராமத்தார் ஒழுங்காகச் செய்துவருவதற்கு அநுகூலமாக ஒரு சிறுமுறையைக் கைக்கொள்ளலாம். ஒவ்வொரு கிராமத்திலும் அதன் அபிவிருத்தியைக் காட்டும் ஒரு ரிஜிஸ்டர் வைத்துவருவதே அம்முறை.

இந்த ரிஜிஸ்டரை எழுதிவருவது கிராமக்கணக்கருடைய பொறுப்பாக இருக்கவேண்டும். இதை எழுதுவதில் நல்வாழ்க்கைச் சங்கத்தின் அதிபரும், காரியதரிசியும், மற்ற அங்கத்தினர்களும் உதவிபுரிய வேண்டும். இதில் எழுதப்படவேண்டிய குறிப்புகள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

## கிராம அபிவிருத்தி ரிஜிஸ்டர்.

ஜில்லா.................. தாலூகா ..................கிராமம்

நிலப்பரப்பு...............ஏக்கர்... நன்செய்......புன்செய்...

மக்கள் தொகை......ஆண்கள் ... பெண்கள்...பிள்ளைகள்...

### நமூனா 1.

### அபிவிருத்திக் குறிப்பு.

### (Record of Improvement)

சுகாதாரம்: எருக்குழி, கிணறு, நந்தவனம், பிற ... ...

கூட்டுறவு. அங்கத்தினர்தொகை, கடன்தீர்த்தல், சேமிப்பு.

பயிர்த்தொழில்: புதிய வித்துக்கள், புதிய கலப்பைகள், பிற

கைத்தொழில்: (பெயர்களைக் குறிப்பிடுக) ... ... ...

கல்வி: சிறுவர் சிறுமியர் பெரியோர். ... ... ... ...

நமூனு 2.

(வருமானக் குறிப்பு)

| | வருவாய் (sources of income) | அளவு | விலை | ஷரா |
|---|---|---|---|---|
| 1 | விளைபொருள்கள் | ... | ... | |
| | 1. நெல் | ... | ... | |
| | 2. சோளம் | ... | ... | |
| | 3. பருத்தி etc. | ... | ... | |
| 2 | கைத்தொழில்கள் | ... | ... | |
| 3 | பிற | | | |
| 4 | மொத்தம் | ... | ... | |

நமூனு 3.

வளர்ச்சிக் குறிப்பு.

(Record of Progress)

| வருஷம் | கிராமத்தின் மொத்த ஜனத் தொகை | மொத்த வருமானம் | வீதாசார வருமானம் | ஷரா. |
|---|---|---|---|---|
| 1936—37 | ... | ... | ... | |
| 1937—38 | ... | ... | ... | |
| 1938—39 | ... | ... | ... | |
| 1939—40 | ... | ... | ... | |

யாம் மேலே காட்டியபடி, ஒவ்வொரு கிராமத்திலும், கிராமச் சீரமைப்பின் வேலையபிவிருத்தியையும், அதன்பயனுகக் கிடைக்கும் வருமான வளர்ச்சியையும், அவ்வளர்ச்சி ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு உயருகிறது என்பதையும் காட்டும் குறிப்புக்கள்

அடங்கிய ஒரு ரிஜிஸ்டர் ஒவ்வொரு கிராமத்திலும் வைக்கப்படுமானால், அது அக்கிராமத்தின் வளர்ச்சியைக்காட்டும் கண்ணாடிபோல விளங்கும்.

இந்த ரிஜிஸ்டரிற் கண்ட குறிப்புக்களை எல்லாருக்கும் விளங்குபடி பட ரூபமாய் விளக்கிக் காட்டலாம். அப்பொழுது ஒவ்வொரு கிராமத்தாருக்கும் தத்தம் குறைகளை நீக்க ஆவல் உண்டாகும். மற்றக் கிராமங்களின் வளர்ச்சியைக் காட்டும் குறிப்புக்களும் மேலே கூறியபடி விளக்கிக் காட்டப்பட்டால், அவை ஒவ்வொரு கிராமத்துக்கும் உற்சாகத்தையும் போட்டியையும் அளிப்பதாகும்.[1] ஒரு கிராமத்துக்குச் செல்லும் எல்லா அரசாங்க அதிகாரிகளும் மேற் காட்டிய ரிஜிஸ்டர்களைப் பார்வையிட்டுக் கையொப்பமிடுவதுடன் கிராம அபிவிருத்திக்குரிய ஆலோசனைகளையும் எடுத்துக் கூறவேண்டும். இங்ஙனம் செய்துவந்தால், கிராமங்களின் உண்மை நிலையையும் அவற்றிற் செய்யப்பட்டுவரும் வேலையின் அளவையும் அரசாங்க அதிகாரிகள் தாமே நேரில் அறிந்துகொள்வர்.

---

1. 'The data thus collected may be compiled also into charts or graphs in a form which may carry conviction to the villager ... Comparing the results from year to year in this way and the same with those of their neighbours ... would create a spirit of healthy rivalry and enterprise among them." (*Rural Reconstruction in India*, P. 13–14).

"கலெக்டர்கள் கிராமங்களுக்குப் போகவேண்டும்; ஆபீஸ்களில் இருந்து செய்யும் வேலையைக் காட்டிலும் கிராமங்களுக்குச்சென்று செய்யும் வேலை மிக்கப் பயன் அளிக்கும்"* என நமது மாட்சிமை தங்கிய புதிய இராஜபிரதிநிதியவர்கள் கூறுகின்றார்கள். யாம் மேலே காட்டியபடி, ஒவ்வொரு கிராமத்திலும் அபிவிருத்தி ரிஜிஸ்டர்கள் இருந்தால்மட்டும் கலெக்டர்கள் கிராமங்களுக்குச் செல்வதிற் பயனுண்டு.

அபிவிருத்தி ரிஜிஸ்டர்களை வைத்துக்கொள்வது கஷ்டமல்ல. அவற்றிற் குறிப்பிடவேண்டிய வேலையைச் செய்வதுதான் கஷ்டம். ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்படவேண்டிய நல்வாழ்க்கைச் சங்கங்கள்தாம் இப்பணியை மேற்கொண்டு, கிராம மக்களைத் தூண்டி வரவேண்டும். "இந்த மரம் நான் வைத்து உண்டாக்கியது! இந்தக் கிணறு எங்களால் தோண்டப்பட்டது!"[1] என்று சொல்லத்தக்க பெருமையுணர்ச்சியைக் கிராமமக்களுக்குள் தோன்றச்செய்வது எத்துணைச் சிறப்பு![2] கிராமச் சீரமைப்பின் பாதிப்பாகம் கிராமமக்களாற் செய்யப்படவேண்டும் பணியேயாம்.

---

* 'The tent is mightier than the pen' *Broad cast speech.*

1. *The Village Dynamo*, P. 4.
2. *Pamphlet*, P. 1.

கிராமத்தாருடைய முயற்சியால் ஆகாத காரியங்களும் சில உண்டு. அவற்றிற்குப் பிறர் உதவி வேண்டும். அவை கிராமச் சீரமைப்பு ஸ்தாபனங்களின் மூலமாக நடைபெற ஒழுங்கு செய்யவேண்டும். இத்தாபனங்கள் நிறுவப்பட்டுள்ள ஸ்தலங்களைக் "கிராமச் சீரமைப்புத் தலைமைத்தலங்கள்" (Rural Reconstruction Units or Centres) என்னலாம். இவை எவ்வாறு அமைக்கப்படவேண்டுமென்பதை மேல்வரும் அத்தியாயத்தில் விவரித்துக் கூறுவோம்.

---

# 20

## கிராமச் சீரமைப்புத் தலைமைத்தலங்கள்

## (RURAL RECONSTRUCTION CENTRES)

நமது தேசத்துக் கிராமவாசிகள் பல்லாயிர ஆண்டுகளாகப் பெருந் தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். இவர்களை இத்தூக்கத்தினின்று எழுப்பிவிடுவது அவசியம். எழுப்பிவிட்டால் இவர்கள் கும்பகர்ணனைப்போல வீரதீரச் செயல்களைச் செய்ய வல்லவராவர்.

இவர்களை எழுப்பிவிடவேண்டியவர்கள் பரோபகாரிகளேயாவர். யாம் இரண்டாம் பாகத்தில் காட்டியபடி, நமது மாகாணத்தில் பற்பலவிதமான பரோபகாரச் சங்கங்கள் கிராமச் சீரமைப்புச் சேவையை நன்முறையில் ஆற்றிவருகின்றன.

அரசாங்கத்தார் சிறிது பணவுதவி அளித்தால், இச்சங்கங்கள் இன்னும் பலவிடங்களில் தங்கள் வேலையைத் தொடங்கக்கூடும். எனவே, பரோபகாரிகளை எழுப்பிவிடுவது அரசாங்கத்தார் கடமையாகும்.

பரோபகாரச் சங்கங்கள் செய்யவேண்டிய வேலை கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலங்களை நிறுவுவது தான். இப்படிப்பட்ட தலங்களைத் தெரிந்தெடுத்து, அவை ஒவ்வொன்றிலும் அடியிற்கண்ட ஸ்தாபனங்களை அமைக்கவேண்டும். ஒவ்வொரு தலைமைத் தலமும் அதனைச் சுற்றிலுமுள்ள எல்லாக் கிராமங்களையும் மேற்பார்த்து வரும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால், நமது மாகாண முழுதுமுள்ள எல்லாக் கிராமங்களின் சீரமைப்புக்குமுரிய ஒரு பெருந்திட்டத்தை நாம் வகுத்தவர்களாவோம்.

தலைமைத் தலங்கள் தம் அதீனத்துக்கு அளிக்கப்பட்ட சுற்றுக் கிராமங்களுடைய முன்னேற்றத்தையும் கவனித்து வரவேண்டுமாதலால், அவை பத்துப்பதினைந்து கிராமங்களுக்கு இடையே உள்ள சிறந்த தலங்களாக இருக்கவேண்டும். இவை ஒரு நாட்டின் பாதுகாப்புக்காகக் கட்டப்பட்ட அரண்களைப்போல விளங்கவேண்டும்.[1]

ஓர் அரணில் அந்நாட்டுப் பாதுகாப்புக்குவேண்டிய எல்லாப் பொருள்களும் சேமித்து வைக்கப்பட்டிருப்பதுபோல கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலங்களில் கிராம முன்னேற்றத்துக்கு வேண்டிய எல்லா நிலையங்களும் அமைக்கப்படல் வேண்டும்.

---

1. "எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்ஆள் உடையது அரண்" (திருக்குறள், 746)

இந்நிலையங்களிற் சில சிலவிடங்களில் அவசியமில்லாமலிருக்கலாம்; ஆயினும் பொதுவாகக் கூறினால், ஒவ்வொரு தலைமைத் தலத்திலும் கூட்டுறவு முறையில் நடத்தப்படும் 'பால் பண்ணைச் சங்கமும்' (Co-operative Dairy Society) ஆடு, கோழிகள் வளர்க்கும் சங்கங்களும் இருக்கவேண்டும். மேலும், இத்தலங்களில் மிக்க சுருக்கமான செலவில் நடைபெறும் ஆஸ்பத்திரியும், கால்நடை வைத்தியசாலையும் நிறுவப்படவேண்டும். அன்றியும், இளைஞருக்குக் கல்வி கற்பிக்கும் பாடசாலையும், முதியோருக்கு அறிவு புகட்டும் அறிவுரைச் சாலையும் (Adult Education Institute), வாசிக்கத் தெரிந்த எல்லாருக்கும் பயன்படத் தக்கதாகச் சுற்றிவரும் புத்தகசாலையும் (Travelling Library) இருக்கவேண்டும். மேலும், பயிர்த்தொழில், கைத்தொழில், நீர்ப்பாசனம், முதலான பொருளாதார அபிவிருத்திக்குரிய காரியங்களையும் இத்தலத்திலுள்ள நிலையமே மேற்பார்த்து வருவதனால், அச்சேவையை ஆற்றத்தக்க ஆற்றல் வாய்ந்தவர்களும் பயிற்சிபெற்றவர்களும் அவசியம்.

யாம் இங்குக் கூறிய தலைமைத்தலங்கள் ஒவ்வொன்றிலும் கிராமச் சீரமைப்பை இப்பொழுது ஆற்றிவரும் பரோபகாரச் சங்கங்களின் நிலையம் ஒன்று இருக்குமென்பது வெளிப்படை. இந்நிலையங்களுக்கு ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தின்மூலமாகப் பணவுதவி அளிக்கப்படவேண்டும். இந்நிலையத்தின் நிர்வாகம் அவ்வச்சங்கத்தை நடத்தும் தலைமைச் சங்கங்

களின் பொறுப்பாகவிருப்பதால், அது எவ்வாறு நடைபெறவேண்டுமென்பதை யாம் இங்குக் குறிப்பிடவேண்டுவதில்லை.

அங்ஙனமே, ஒவ்வொரு தலத்திலும் செய்யப்படவேண்டிய வேலையைப்பற்றியும் யாம் விரிவாகக் கூறவேண்டியதில்லை. ஏனெனில், அவ்வேலை அவ்வத்தலத்தின் அவசியத்துக்குத் தக்கபடி வேறுபடும். ஆயினும், ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தார் இத்தலங்களில்நடக்கும் வேலையைக் கண்காணித்தும், அதன் அபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறியும் ஒருவழிப்படுத்தியும் வருவது அவசியம்.

ஒவ்வொரு தலைமைத் தலமும் எல்லா அரசாங்க அதிகாரிகளாலும் அடிக்கடி பார்வையிடப்படவேண்டும். 'வரி வசூல் (Revenue) இலாகா' அதிகாரிகளால் நடத்தப்படும் "ஜமாபந்தி" இப்படிப்பட்ட தலங்களில் நடைபெறுவது நலம். 'நிலவரி ஏன் வசூலாகவில்லை'? 'கள் வருமானத்தில் ஏன் இவ்வளவு குறைவு'? என்று கேட்கும் கேள்விகளுடன் 'முத்தனேந்தல் கிராமத்தில் பயிர்த்தொழில் அபிவிருத்தி ஏன் குறைந்திருக்கின்றது'? எனக் கேட்கப்படும்நாளிற்றான் கிராம அபிவிருத்தி நிறைவேறியதாகக் கொள்ளப்படும்.

இரண்டு மூன்று இலாகாக்களைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் ஒன்றாகப்போய் இத்தலங்களைப் பார்வையிடுவது மிகவும் நல்லது. இங்ஙனம் பல

அதிகாரிகளும், பல கிராமவாசிகளும் ஒன்றுகக்கூடும் சமயங்களில் சிறு மகாநாடுகளும் நடத்திக்கொள்ளலாம். அரசாங்க இலாகாக்கள் செய்யும் வேலையை ஒருவழிப்படுத்துதற்கு இதைவிடச் சிறந்த முறை வேறில்லை என்னலாம்.*

நமது மாகாணத்தில் எத்தனை தலைமைத் தலங்கள் அமைக்கப்படவேண்டும் என்பதை நாம் இப்பொழுது கணக்கிட வேண்டா. பணவுதவி பெருகப் பெருக இத்தலங்களின் தொகையை அதிகப்படுத்தலாம். ஆனால், ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்த பக்ஷம் இருபது முப்பது தலைமைத் தலங்களையாகிலும் உடனே நிறுவவேண்டும். அவற்றுள் எல்லாவித வேலைகளையும் உடனே தொடங்குவதும் மிக்க அவசியம்.

இவ்விதத் தலைமைத்தலங்களைத் தெரிந்து, அவற்றில் வேலைதொடங்குவதன் நோக்கம் அவ்வவ்விடங்களில் கிராமச் சீரமைப்புக்காக உழைத்துவரும் எல்லோருடைய வேலையையும் ஒருவழிப்படுத்துவதாம். உதாரணமாக, ஒரு தலத்தில், அங்குள்ள மத்தியதர

---

* "Touring officers should, undoubtedly, not only exchange their tour programmes, but exchange their work programmes......All departments must learn to work together in the closest consultation and co-ordination" (*Lecture Notes*, P. 22-23).

அல்லது உயர்தரப் பாடசாலையிலுள்ள ஆசிரியர்களும், ஆஸ்பத்திரியிலுள்ள வைத்தியர்களும், வேறு ஸ்தாபனங்களிலுள்ள வேறு பலரும் இச்சேவையில் ஒன்றுசேர்ந்து உழைப்பதற்கு அநுகூலம் கிடைக்கின்றது. ஒன்றுசேர்ந்து உழைப்பதனால் ஒருவர் செய்ததையே பிறர் செய்தல், ஒருவர் செய்ததற்கு மாறாக வேறொருவர் செய்தல் முதலான குற்றங்களும் நீங்கும். மேலும், பலரும் ஒன்றுசேர்ந்து செய்யும் போது அவரவர் திறமைக்கும் அநுகூலங்களுக்கும் தக்கவாறு வேலையைப்பிரித்தும் இயற்றலாம். வேலைப் பகுப்பினால் (division of labour) கிடைக்கும் பலன்களும் இம்முறையினாற் சித்திக்கும் என்பதில் ஐயமென்னை ?

பல ஸ்தாபனங்களும், பரோபகார நோக்குடைய பல ஆட்களும் ஒன்று சேர்ந்து உழைக்கும் முறை நமது தேசத்தில் இன்னும் வேரூன்றவில்லை. ஒவ்வொரு ஸ்தாபனமும் ஒரு சாதி, மதம் அல்லது கோட்பாடு கருதித் தன் தன் பணியைத் தனியே இயற்றி வருகின்றது. உதாரணமாக, சில கிராமங்களில் ஒரு ரோமன் கத்தோலிக் பாடசாலை, ஒரு பிராடெஸ்டன்ட் பாடசாலை, ஒரு இந்து பாடசாலை ஆகிய இம்மூன்றும் ஒன்றற்கொன்று போட்டியாக நடைபெற்று வருகின்றன. இப்படிச் செய்வதனால் எவ்வளவு சங்கடங்களும் வீண் நஷ்டங்களும் விளைகின்றன. கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலத்தில் இப்படிப் பட்ட போட்டிக்கு இடமிராது. அங்கு எல்லா ஸ்தா

பனங்களும் எல்லா உழைப்பாளரும் ஒன்றுபட்டு வேலை செய்யவேண்டும். இவ்வாறு செய்வது நமது அரசியல், சமூக, பொருளாதார, சமய ஒற்றுமைகளுக்கு ஆதரவு அளிக்குமென்பதில் ஐயமென்னே? கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலங்களை நிறுவுவது எல்லோருடைய வேலையையும் ஒன்றுபடுத்தும் முறையாய் மட்டும் இராமல், நமது சமூக வாழ்க்கையிலேயே ஒரு புதிய கொள்கையைப் புகுத்தும் முறையாகவும் விளங்கும்!

---

"The Rural Reconstruction unit idea is a piece of social philosophy, and not merely a question of effective technique through concentration". *Christian Missions in Rural India*, P. 83.

# 21

## ஜில்லாப் பொருளாதாரக் கழகம்
## (DISTRICT ECONOMIC COUNCIL)

யாம் முந்தின அத்தியாயத்திற் காட்டியபடி, பல கிராமங்கள் சேர்ந்த ஒவ்வொரு தொகுதியிலும் கிராமச் சீரமைப்பு நிலையங்கள் நிறுவப்பட வேண்டும். இவ்வாறு நிறுவப்படும் நிலையங்களின் வேலையை மேற்பார்த்து நிர்வகிக்கவும், அவற்றிற்கு வேண்டிய ஆலோசனையைக் கூறவும் ஒரு மத்திய ஸ்தாபனம் வேண்டும். ஜில்லாப் பொருளாதாரக் கழகமே District Economic Council) அத்தாபனமாகும்.

ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தின் தலைவர் கலெக்டராக இருக்கவேண்டும். அந்த ஜில்லாவிலுள்ள அபிவிருத்தி இலாகாக்களின் தலைவர்களும், கிராம சேவை செய்துவரும் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் அதன் அங்கத்தினராக இருக்கவேண்டும். இக்கழகம் மிகப்பெரிதாக அமைக்கப்படுவதால்,

இதன் அங்கத்தினர் அடிக்கடி கூடவேண்டிய அவசிய மில்லை. ஒவ்வொரு முக்கியமான வேலைக்கும் ஒவ் வொரு உபகழகம் அமைக்கப்பட்டாற் போதுமானது. இந்த உபகழகங்களின் தலைவர்கள் ஜில்லாக் கழகத் தின் நிர்வாகக்கழகத்தின் அங்கத்தினர் ஆவர். இந் நிர்வாகக் கழகம் ஐந்து முதல் எட்டுப்பேர் அடங்கிய தாயிருக்கலாம். இவர்களுட் பாதிப்பேராயினும் அதி காரிகளல்லாதவராய் (non-officials)இருக்கவேண்டும்.

இதன் காரியாலயம் ஜில்லா போர்டு அல்லது கலெக்டர் ஆபீஸ் கட்டடங்களில் நிறுவப்படலாம்; இதற்கெனத் தனிப்பட்ட கட்டடங்களும், மிகப் பல குமாஸ்தாக்களும் அதிகாரிகளும் அவசியமில்லை. இரண்டு மூன்று குமாஸ்தாக்களும், ஜில்லா போர்டில் இப்பொழுது வேலைசெய்துவரும் பஞ்சாயத்து ஆபீஸ ராகிய ஒரு அதிகாரியுமே போதும். இவ்வதிகாரி யைக் 'கிராமச் சீரமைப்பு அதிகாரி' (Rural Reconstruction Commissioner) என்னலாம்.

இவர் ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தின் எல்லாக் காரியங்களையும் மேல்நடத்தும் ஆற்றல் உடையவராயிருப்பது அவசியம். இவர் ரெவினியூ, கூட்டுறவு, பயிர்த்தொழில், கைத்தொழில் முதலிய பல துறைகளிலும், கிராமச் சீரமைப்புச் சேவையிலும் நன்கு பயிற்சி பெற்றவரும் அநுபவம் உடையவரு மாக இருக்கவேண்டும். இவர் மாகாணப் பொருளா தாரக் கழகத்தாரால் தெரிந்தெடுக்கப்படுவது நலம்.

ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தின் வேலையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (1) ஆலோசனை கூறல் (2) நிர்வாகம் (3) ஆராய்ச்சி என்பன.

அது அவ்வாறு ஆலோசனை கூறுவது ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள கிராமச் சீரமைப்பு நிலையங்களுக்கும், சர்க்கார் இலாகாக்களிலுள்ள அதிகாரிகளுக்கும் மாகாணப் பொருளாதாரக் கழகத்துக்கும் ஆம்.

அதன் நிர்வாகமாவது கிராமச் சீரமைப்பு நிலையங்களில் நடக்கும் வேலையை மேற்பார்ப்பதும் ஒரு வழிப்படுத்துவதும் ஆம். இவ்வேலை பெரும்பாலும் கிராமச் சீரமைப்பு அதிகாரியாற் செய்யப்படும்.[1] ஆனால் ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தாரின் நிர்வாகப்பொறுப்பின் முக்கிய அம்சம் அவ்வவ்விடங்களிலுள்ள பரோபகாரிகளை ஏவி, அவர்கள் மூலமாக இவ்வேலைக்குப் பணத்தைச் சேகரித்தலாம். மாகாண அரசாங்கத்தாரிடமிருந்து கிராம அபிவிருத்திக்கென அளிக்கப்படும் தொகையைக் கிராமச் சீரமைப்பு நிலையங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தலும் இக்கழகத்தாரின் பொறுப்பாகும்.

---

1 இத்தகைய அதிகாரி ஒருவர் செய்யவேண்டிய வேலையைப்பற்றிய குறிப்புக்கள் பிரெய்ன் என்பவர் எழுதிய நூலில் (*Rural Reconstruction*) விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் 5-10.

மேலும், இக்கழகத்தார் அந்தந்த ஜில்லாவிலுள்ள பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சியைத் தூண்டவும் பெருக்கவும் வேண்டும். இவ்விஷயத்தில் கல்லூரி ஆசிரியர்கள் உதவிசெய்யக்கூடும். இச்சேவை பெரும்பாலும் செலவில்லாமலே நடைபெறக்கூடியது. கிராமச் சீரமைப்பு எல்லா மக்களும் சேர்ந்து செய்ய வேண்டிய பணி [1] என்று எண்ணினால், ஆராய்ச்சி சம்பந்தமாக எவ்விதச் செலவும் ஏற்படாது. எல்லா வேலைக்கும் பணஞ் செலவிட்டுக் கிராமச் சீரமைப்பை நடத்துவது கூடாதகாரியம். இவ்வுணர்ச்சி எல்லா மக்களிடத்தும் பரவவேண்டும். "பல்லார் பயன் துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே, நல்ஆண் மகற்குக் கடன்" என்பது நமது நாட்டின் நெறியன்றோ?

ஒவ்வொரு ஜில்லாவிலும் இத்தகைய கழகங்களை அமைக்வேண்டுமெனக் காலஞ்சென்ற ஸ்ரீமான் K. T. பால் அவர்கள் முதன் முதல் எடுத்துக் காட்டினார்கள். அவ்வாலோசனையை அரசாங்கத்தார் கவனியாது விட்டுவிட்டனர். பம்பாய் மாகாணத்தில் இத்தகைய கழகங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன.

---

1. "This is team work, and every one must join in and work loyally as members of the team ... Active good-will is required......There is work for every one and every one must find out how he can help and start away at once" (*Lecture Notes*, P;27).

நமது மாகாணத்தில் இவை அமைக்கப்படும் விஷயம் இன்னும் ஆலோசனையளவிலேயே இருந்துவருகின்றது. இக் கழகங்களை நிறுவுவதனால் அரசாங்கத்துக்கு அதிகச் செலவு நேரிடாது என்னும் உண்மை மேல்வரும் அத்தியாயத்தில் காட்டப்படும். ஆயினும், இவற்றின் அவசியத்தையும் இவற்றால் விளையும் பயன்களையும் அரசாங்கத்தார் நன்குணர்ந்து இவற்றை விரைவில் நிறுவுவார்களென நம்புகின்றோம்.

---

"This plan for rural reconstruction units does not mean that there should be a policy of serving only these isolated areas, but it means that here is the place to begin. As rapidly as possible adjoining areas should be developed as rural reconstruction units. Thus there will come to be in the near future a group of these contiguous units which may be administered as parts of the political district". *The Christian Missions in Rural India*, P. 131.

# 22

## ஸ்தல சுய ஆட்சி

## (LOCAL SELF-GOVERNMENT)

கிராமச் சீரமைப்புக்கு இன்றியமையாத ஸ்தாபனங்கள் யாம் முன் எடுத்துக் கூறிய கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலங்கள். அத்தலங்கள் மூலமாகச் செய்யப்படும் சேவையினாலேயே யன்றி, வேறெவ்வாற்றாலும் நமது கிராமங்கள் முன்னேற்றமடையா. ஒவ்வொரு கிராமத்துக்கும், பண்டைக் காலத்திலுள்ளபடி, சுய ஆட்சியை (village republics) அளித்துவிட்டால் கிராமங்கள் சீர்பெற்றுவிடும் என எண்ணுவது தவறு. ஆயினும், சுய ஆட்சி முறையிற் பயிற்சிபெறுவதற்கும் (training in self-government), குடி ஆட்சியை (democracy) நிலைநிறுத்துவதற்கும் ஒவ்வொரு முக்கிய கிராமத்துக்கும் சுய ஆட்சி அளிப்பது அவசியம்.

நமது மாகாணத்தில் 1920-ம் வருடத்திலிருந்து கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. ஆயினும், இதுவரையும் அமைக்கப்பட்ட

பஞ்சாயத்துக்களின் தொகை மிகமிகக் குறைவு. இக் குறையை நீக்கவேண்டுமானால் கிராமச் சீரமைப்பு மத்திய தலங்களிலுள்ள நிர்வாகக் கழகத்தாருக்குத் தம்மைச் சுற்றிலுமுள்ள முக்கிய கிராமங்களிலெல்லாம் பஞ்சாயத்துக்களை அமைக்கவும், அவற்றின் தேர்தல்களை (elections) நடத்தவும், அவற்றை மேற்பார்த்து வரவும் அதிகாரம் அளிக்கப்படவேண்டும். இப்படிச் செய்தால் இப்பொழுது ஜில்லா போர்டில் பஞ்சாயத்து ஆபீஸராக வேலை பார்த்துவருபவரை நாம் மேற்கூறிய ஜில்லாப் பொருளாதாரக் கழகத்தின் கிராமச் சீரமைப்பு அதிகாரியாக நியமிக்கலாம்.

கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளின் (Village Panchayat Courts) தொகையையும் அதிகப்படுத்த வேண்டும். அவற்றின் தலைவரும் ஒன்றிரண்டு அங்கத்தினர்களும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டும். இவ்வாறு செய்தால் இக்கோர்டுகளில் இப்பொழுது நடக்கும் சில தவறுகளும் குழப்பங்களும் நீங்கும். நியாய பரிபாலனமும் திறமையாகவும் அறநிலை வழுவாமலும் நடைபெறும். "மூத்தோரை இல்லா அவைக்களனும் ......நன்மை பயத்தல் இலா"

---

1. For judicial purposes a nominated Panchayat......is suggested" (*Rural Reconstruction*, P. 19.

2. திரிகடுகம், 10.

நகர பரிபாலன ஸபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ள நகரங்களைச் சுற்றிலுமுள்ள சில கிராமங்கள் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றன. இப்படிப்பட்ட கிராமங்களைச் சீர்ப்படுத்துவது நகரபரிபாலன ஸபையின் பொறுப்பாக இருக்கவேண்டும். இங்ஙனம் செய்தால் வறட்டிதட்டுவதைத் தடுத்தல், பால் விற்பனை ஒழுங்குகளைச் செய்தல், ஆடுமாடு கோழிகள் வளர்த்தல், தேன் உண்டாக்குதல் முதலான முக்கியமான சேவைகளை ஆற்றுவதற்கு அனுகூலம் ஏற்படும். நகர பரிபாலன ஸபையின் அதிகார வரம்பை (area of jurisdiction) அதிகப்படுத்திக் கொள்வதனால் இக்காரியத்தை மிக எளிதாகச் செய்து முடிக்கலாம். இத்தகைய நகரபரிபாலன ஸபைகளில் கிராமச் சீரமைப்புக்காக ஒரு தனிக்கமிட்டி இருப்பது அவசியம்.

நமது மாகாணத்தில் நிறுவப்பட்டிருந்த தாலூகா போர்டுகள் (taluk boards) 1930-ம் வருஷத்துச் சட்டத்தின்படி கலைக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக ஜில்லா போர்டுகள் பிரிக்கப்படுகின்றன. இந்த ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக 1930-ம் வருஷச் சட்டத்தில் காட்டிய சர்க்கிள் போர்டுகள் (Circle Boards) அமைக்கப்படுவது நலம். இவற்றில் கிராமச் சீரமைப்புக்காக உழைத்துவரும் ஸ்தாபனங்களுக்குப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டால் கிராமச் சீரமைப்பு இயக்கம் நன்கு நடைபெறும்.

# PART FOUR

## நான்காம் பாகம்

## அரசாங்க இலாகாக்கள்

'If the inertia of centuries is to be overcome, it is essential that all the resources at the disposal of the state should be brought to bear on the problem of rural uplift. What is required is an organised and sustained effort by all those departments whose activities touch the lives and the surroundings of the rural population.' *Report of the Royal Commission on Agriculture in India, P. 89.*

# 23

## பயிர்த்தொழில்

## (AGRICULTURE)

நமது தேசத்தின் முக்கிய தொழில் பயிர்த்தொழில். இத்தொழிலே நமது செல்வப் பெருக்குக்கு அடிப்படையாக இருக்கின்றது. ஆதலால் கிராமச் சீரமைப்பு இயக்கத்தில் பயிர்த்தொழில் அபிவிருத்தி முதன்மைபெற்று விளங்குகின்றது.

பயிர்த்தொழில் அபிவிருத்திக்காக அரசாங்கத்தார் அமைத்திருக்கின்ற ஸ்தாபனங்கள் மிகப்பல. பூசா (Pusa) என்னுமிடத்தில் நிறுவியுள்ள பயிர்த்தொழில் ஆராய்ச்சிக்கல்லூரி உலகப்பிரசித்தி பெற்றது. மேலும், இந்தியா முழுதும் நடத்தப்படும் பயிர்த்தொழில், அதனையொட்டிய ஆராய்ச்சி, கல்வி முதலிய பல இயக்கங்களையும் தூண்டவும், அபிவிருத்திசெய்யவும் ஒருவழிப்படுத்தவும் இந்திய பயிர்த்தொழில் ஆராய்ச்சிக் கழகம் (Imperial Council of Agricultural Research) ஒன்றும் அமைக்கப்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு மாகாணத்திலும்

ஒவ்வொரு தனிப்பட்ட இலாகாவும், நிர்வாக அதிகாரிகளும் உண்டு.

புதிய சாதனங்களும் புதியமுறைகளும் எதிர்பார்த்த அளவிற் பயனளிக்கவில்லை, இதற்குக் காரணம் வியவசாயிகளின் கடன்சுமையும், துண்டுதுணுக்கான புல உரிமையும், கல்வியின்மையும் ஆகிய குறைகளே. ஆதலின் இப்பொழுதுள்ள நிலையில் புதிய முறைகளால் பெரும்பயன் விளையாது. எனவே, அரசாங்கத்தார் புதிய முறைகளை மேலும் மேலும் ஆராய்ந்து, அவற்றைப் பெருக்கிவருதலையே தமது முழுநோக்கமாகக் கருதாது, இதுவரை கண்டு அறியப்பட்ட புதிய முறைகளில் வியவசாயிகளால் அவசியம் கைக்கொள்ளப்பட வேண்டிய முறைகளை மட்டும் பரப்புதற்குரிய முயற்சிகளைச் செய்யவேண்டும்.

நம் மாகாணத்தில் **221** தாலூகாக்கள் இருக்கின்றன; ஆனால் புதிய விவசாய முறைகளைக்கற்பிக்கும் பிரசாரகர்கள் (Agricultural Demonstrators) 150 பேர்தாம் இருக்கின்றனர். ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டாலும் புதியமுறைகள் விரைவில் பரவா. ஒவ்வொரு 'ரெவின்யூ பிர்க்கா' (revenue firka) வுக்கும் ஒவ்வொருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீமான் சத்தியநாதன் அவர்கள் தமது அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முறைகளிற் சில மிகச் சிறந்தவை. அவற்றைப் பரப்புவது மிக அவசியம், ஆனால் ஸ்ரீமான்

சத்தியநாதன் அவர்கள் கூறும் முறையில் அவற்றைப் பரப்ப முயன்றால் அரசாங்கத்தாரிடமுள்ள பணம் போதாது.

புதிய முறைகளைப் பரப்பும் ஸ்தாபனங்கள் யாம் முற்கூறிய (Rural Reconstruction Centres) கிராமச் சீரமைப்பு மத்தியஸ்தலங்களாகவே இருக்கவேண்டும். இவ்வொவ்வொரு ஸ்தலத்திலும் அவ்வத்தலத்தின் அவசியத்துக்கேற்றபடி புதிய முறைகளிற் பயிற்சி பெற்ற சிலர் நியமிக்கப்படுவார்களேயானால், புதிய முறைகளை விரைவில் பரப்பலாம்.

புதிய முறைகளைவிட நம் நாட்டுக்கு மிக அதிகப் பயனைக் கொடுப்பவை பயிர்த்தொழில் இலாகா நிபுணர்களின் ஆராய்ச்சியாற் கண்டறியப்பட்ட புதிய வித்துக்கள். இவை பலவிடங்களில் பாவியிருக்கின்றன; இன்னும் அதிகமாப் பாவுவதற்கு தடையாயிருப்பது பிரசாரகர்கள் இல்லாமையும், இவ்வித்துக்களை விற்பதற்குரிய ஏற்பாடுகள் குறைவாயிருப்பதும் ஆம். கோயம்புத்தூரில் கம்போடியாப் பருத்தி விதை அபிவிருத்தித் திட்டத்தைப்போல மேலும் பயிர்த்தொழில் இலாகா அதிகாரிகளால் மட்டும் இம் முயற்சி நடைபெறவேண்டுமானால் இப்பொழுது செலவிடப்படுவதைவிடப் பன்மடங்கு அதிகமான செலவு பிடிக்கும்.

புதிய வித்துக்களைப் பரப்புவதும் யாம் முற்கூறிய கிராமச் சீரமைப்பு மத்திய தலங்களின்

பொறுப்பாக இருக்கவேண்டும். இத்தலங்களில்விதை அபிவிருத்திச் சங்கங்கள் (Seed Societies) கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்பட்டால், இவை மிகச் சிறந்த பயனைக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்முறையில், கோயம்புத்தூர் ஜில்லாவில் ஜி. ஆர். ஹில்சன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு விதை அபிவிருத்தி சங்கங்கள் நல்ல சேவையை ஆற்றி வந்திருக்கின்றன.[1] வியவசாயிகளுக்கு விதையைக் கொடுத்து அவர்களிடம் அதற்குரிய விலையைப் பணமாகப் பெறுவதைவிட அவர்களிடமிருந்து அவ்விதையின் விளைபொருள்களையே பெற்றுக்கொள்வது உசிதம். இத்தகைய முறை மத்திய மாகாணத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.[2]

கிணற்று நீரை இறைத்துப் பயிர்செய்துவரும் வியவசாயிகளுக்குக் கிணறு வெட்டல், புதிய இயந்திரங்களை அமைத்தல் ஆகிய இத்தகைய சேவைகளை இப்பொழுது ஆற்றிவருவோர் கைத்தொழில் இலாகா அதிகாரிகள். கைத்தொழில் இலாகாவின் 'இயந்திர வேலைப்பிரிவு' (Engineering Section)முழுதும் பயிர்த் தொழில் இலாகாவுக்கு மாற்றப்பட்டு, ஒவ்வொரு

---

1. Madras Banking Enquiry Committee, Vol. II P. 255—267.

2. The All-India Village-Industries Association, Report, P. 24.

கிராமச்சீர்மைப்புமத்தியஸ்தலத்திலும் இதற்கென்று பயிற்றுவிக்கப்பட்ட மேஸ்திரிகளும் கூலியாட்களும் நியமிக்கப்பட்டால், கிணறுவெட்டுதல், புதிய இயந்திரங்களை அமைத்தல் போன்ற சேவைகள் விரைவாகவும் செம்மையாகவும் நடைபெறும்.

மேலும், கரும்பிலிருந்து வெள்ளைச் சர்க்கரை செய்வது, சோளத்திலிருந்து மால்ட் (Malt) செய்வது ஆகிய இச்சிறு கைத்தொழில்கள் பயிர்த் தொழில் இலாகா நிபுணர்களால் ஆராய்ந்து கண்டறியப்பட்டிருக்கின்றன.[1] இவை போன்ற வேறு பல கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதில் பயிர்த் தொழில் இலாகா நிபுணர்கள் தமது கவனத்தை மேலும் மேலும் செலுத்துவார்களானால், கிராமப் பொருளாதார நிலை உயரும் என்பதற்கு ஐயமில்லை.

நமது மாகாணம் முழுதிற்கும் ஒரு பெரிய பயிர்த் தொழிற் கலாசாலைதான் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. இதிலிருந்து உயர்தரக்கல்வி கற்றுத் தேறியவர்கள் பயிர்த்தொழில் இலாகாவில் உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெறுகின்றனர். யாம் முன்னே எடுத்துக்காட்டியபடி, சிறிதுகாலப் பயிற்சிக் கல்விக்குரிய வசதிகளை அதிகப்படுத்தி, கிராமச் சீரமைப்புத் தலங்களில் சேவைபுரிவோர் பலரைப்

---

1. Report on the Operations of the Department of Agriculture, 1934—35, P. 8.

பழக்கவேண்டும். **1934-35**ம் வருடத்தில் **13** பேர்களுக்குத்தான் இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றது.

கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ள உயர்தரக் கலாசாலேயும் ஆராய்ச்சிசாலேயும் நமக்கு அவசியமே; ஆயினும், நமக்கு மிக அதிக அவசியமாக வேண்டுவன சிறிய பயிர்த்தொழிற் கலாசாலேகளாம். இவற்றைப் பயிர்த்தொழில்மட்டும் கற்பிக்கும் தனிக் கலாசாலேகளாக வைத்து நடத்துவது அதிகச் செலவைத் தரத்தக்கது. ஆனால் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் சில முக்கியமான உயர்தரப் பாடசாலேகளேச்சார்ந்து, இப்பயிர்த்தொழிற் கலாசாலேகள் வைத்து நடத்தப்படவேண்டும். இலக்கியக் கல்வியும் (literary education) பயிர்த்தொழிற் கல்வியும் கலந்து நடத்தப்பெறும் பாடசாலேகளே அமைப்பது ஒவ்வொரு ஜில்லாபோர்டினுடைய கடமையாக இருக்கவேண்டும்.

"நமது தேசத்திலுள்ள பயிர்த் தொழிலாளர் தங்களுடைய விளேபொருள்களே விற்பதில் பெரு நஷ்டம் அடைகின்றனர்; ஏனெனில், மண்டிகளில் உள்ள வர்த்தகர்கள் மிக அதிகமான தரகை வசூலிக்கின்றனர்; நிறையிலும் விலேயிலும் வியவசாயிகளே ஏமாற்றுகின்றனர்; ஆதலால், பயிர்த்தொழில் இலாகா அதிகாரிகள் வியவசாயிகளுடைய விளேபொருள்களே விற்பதில் உதவிசெய்யவேண்டும்" என முதலில்

இந்திய பயிர்த்தொழில் விசாரணை ஸபையாரும், பின்னர் இந்திய பாங்கி விசாரணைக் கழகத்தாரும் ஆலோசனை கூறினர். இவ்வாலோசனைகளைத் தழுவி இந்திய பயிர்த்தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவிலும், ஒவ்வொரு மாகாண அரசாங்கத்தின் ஆதரவிலும் விற்பனை அதிகாரிகள் (Marketing Officers) நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

நமது மாகாணத்திலும், ஒரு விற்பனை அதிகாரியும் (Provincial Marketing Officer) மூன்று உதவி விற்பனை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது நடைபெறும் விற்பனைமுறைகளை இவர்கள் ஆராய்ச்சி செய்து, அவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்யப் போவதாகக் கூறுகின்றனர். இவர்களுடைய முயற்சியிற் பெரும் பகுதி வீண் முயற்சியாக முடியும். ஏனெனில் விற்பனை முறைகளிலடங்கிய குறைகள் தாமே நீங்கக் கூடியன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை அமைப்பது கூட்டுறவு இலாகா மூலமாகவே நடைபெறலாம். பயிர்த்தொழில் இலாகா விளைபொருள்களை மிகுதிப்படுத்துவதிலேயே உழைத்தாற் போதுமானது; வியாபாரத்தில் தலையிடுவது உசிதமல்ல. *

---

* பருத்திப்பஞ்சு விற்பனை முறைகளை ஆராய்ச்சி செய்ததில் யான் கண்டறிந்த உண்மை இதுவாகும். இம்முடிபு பிற விளைபொருள்களுக்கும் பொருந்தும் என்பது இத்துறையில் ஆராய்ச்சி செய்வோருக்குப் புலப்படும்.

# 24

## கால்நடை இலாகா

## (VETERINARY DEPARTMENT)

நமது மாகாணக் கால்நடை இலாகாவின் வேலை எல்லாம் மருத்துவ சிகிச்சை ஒன்றுதான். இவ்வேலையைச் சரிவரச் செய்யக்கூடப் போதுமான வைத்தியர்கள் இல்லையென்று கூறப்படுகின்றது.[1]

மருத்துவ சிகிச்சை அவசியம்; ஆனால் இப்பொழுதுள்ளவாறு ஆஸ்பத்திரிகளையும் சென்னையிலுள்ள கால்நடைக் கலாசாலையில் உயர்தரக் கல்விகற்றவர்களையும் அதிகப்படுத்தினால் அதிகமான பணச்செலவு பிடிக்கும். நமது கிராமங்களில் மாட்டு வைத்தியத்

---

1. நமது மாகாணம் முழுதிலும் 41 பெரிய ஆஸ்பத்திரிகளும், 72 சிறிய ஆஸ்பத்திரிகளுமே (dispensaries) இருக்கின்றன. இவைகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று ஸ்ரீமான் சத்தியநாதன் அவர்கள் தமது அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார். Report, P. 25.



கிராமங்களிற் காணப்படும் கோவில் மாடு. இத்தகைய மாடுகளை ஒழித்து, உயர்ந்த ஜாதிப் பொலிகாளைகளைப் (stud-bulls) பெருக்கவேண்டும்.

தில் நிபுணர்களாக உள்ளவர்களிற் சிலரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குப் புதிய முறை வைத்தியத்தைக் கற்றுக்கொடுத்து, அவர்களை ஒவ்வொரு கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலத்திலும் வேலைசெய்யும்படி நியமித்தால் கால்நடை வைத்தியம் அதிகச் செலவின்றி நடைபெறும். மிகப் பல கிராமங்களுக்கும் மாட்டுவைத்திய சிகிச்சை அனுகூலங்கள் கிடைக்கும்.

மிகப் பலவீனமானவைகளாகவும், அதிகப் பயனற்றவைகளாகவும் உள்ள ஆடு மாடுகளைக் கிராம மக்கள் அறியாமையினால் வளர்த்துவருவதைத் தடுக்காமல், அவற்றிற்கு நேரிடும் வியாதிகளை மட்டும் தடுத்து வருவதனால் யாது பயன்? எனவே, நமது மாகாணத்திலுள்ள கால்நடை இலாகா அதிகாரிகள் செய்யவேண்டிய முதல் வேலை மக்கள் நல்ல ஆடுமாடுகளை வளர்ப்பதற்கு உதவி செய்வதாம்.

யாம் முற்கூறியவாறு, புதியமுறைகளில் பயிற்றுவிக்கப்பட்ட நாட்டு வைத்தியர்கள் ஒவ்வொரு கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலத்திலும் நியமிக்கப்படுவார்களானால் அவர்கள் ஒவ்வொரு ஊரிலும் அவ்வவ்வூரார் பொலிகாளைகளை வாங்குவது, அவற்றைப் போஷிப்பது, முதலான விஷயங்களில் அவர்களுக்கு உதவிசெய்யக்கூடும்.

கால்நடை இலாகா அதிகாரிகள், விற்பனைக்காக ஆடுமாடுகள் வளர்க்கப்படும் முக்கியமான இடங்களில்

அவை நன்முறையில் வளர்க்கப்படுவதற்கு வேண்டிய உதவி செய்யவேண்டும். அவற்றை வளர்ப்பிப்போருக்குத் தகுந்த சன்மானங்களும் பணவுதவியும் அளிக்கவேண்டும்.*

மாட்டுச் சந்தை கூடும் இடங்களில் மாட்டுக் காக்ஷியும் (cattle show) பரிசளிப்பும் நடத்தவேண்டும். இவ்வாறு சந்தை கூடுமிடங்கள் நகர பரிபாலன சங்கத்தார் அதீனத்திலிருந்தால் அவர்கள் சந்தைகள் மூலமாகத் தாம் வரி பெறுவதையே தமது பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளனர். சந்தையை வைத்துப் பரிபாலிப்பதற்கு மேல் எஞ்சிவரும் வருமானத்தை ஆடு மாடுகளின் அபிவிருத்திக்காகச் செலவிடும்படி விதிகள் அமைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும், தாலூகா ஜில்லா மாகாணத் தலைநகரங்களிலும், மாட்டுப்பொங்கல் தினத்தன்று, அவ்வவ்விடங்களிலுள்ள முக்கியமான அரசாங்க அதிகாரிகளின் தலைமையில் 'மாட்டுவிழா'க் கொண்டாடப்படவேண்டும். மாட்டுவிழாக் கொண்டாடுவது

---

* மதுரை ஜில்லாவில் கம்பம் நாட்டிலுள்ள சில ஜாதிக்காரர் மாடு வளர்ப்பதில் மிகத் தேர்ச்சியடைந்தவர்கள். அவர்களுடைய முறைகள் மிகச் சிறந்தவை என எல்லாராலும் கொண்டாடப்படுகின்றது. ஆயினும் இவர்களுக்கு அரசாங்கத்தார் எவ்வித உதவியும் செய்யாதிருக்கின்றனர். *Madura District Gazatteer*, P. 22.

பழந்தமிழர் வழக்கம். இவ்வழக்கத்தைத் தற்கால முறைப்படி மிகச் சிறப்பாக நடத்தவேண்டும்.

நமது மாகாணத்தில் மிருகங்களுக்கு ஹிம்சை செய்வதைத் தடுக்கும் சங்கம் (Society for the Prevention of Cruelty to Animals) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அச்சங்கத்தைச்சார்ந்த அதிகாரிகளிற் சிலர் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வரும் மாடுகளின் உடம்பில் புண்கள் இருந்தால் அம் மாடுகளை ஓட்டிவருவோர் தண்டனை யடையும்படி செய்கின்றனர். இவ்வதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று அம்மாடுகளுக்குள்ள புண்களை ஆற்றுவதற்கு உதவிசெய்வதல்லவோ சிறந்த சேவை?

அரசாங்கத்தாருடைய கால்நடை இலாகாவாலும், மிருகங்களுக்கு ஹிம்சை செய்வதைத் தடுக்கும் சங்கங்கள் போன்ற பிற ஸ்தாபனங்களாலும் செய்யப்படவேண்டிய வேறொரு முக்கிய சேவை நகரங்களிற் பாற் பண்ணைகளை (dairy farms) அமைப்பது.

அலிகார், பம்பாய், டார்ஜிலிங், நாகபுரி, பங்களூர் முதலான இடங்களில் மிகச் சிறந்த பாற்பண்ணைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் மத்திய மாகாணத்து வியவசாய இலாகாவின் ஆதரவில் நாகபுரியில் நடைபெறும் பாற்பண்ணை மிகச் சிறந்தது. இப்பண்ணைக்கு அரசாங்கத்தார் 30,000 ரூபாய் இனமாக வழங்கினர். அத்தொகையிலிருந்து ரூபாய் 20,000 பெறுமான நிலத்தை வாங்கி, ரூபாய் 10,000

செலவிட்டுத் தொழுவங்களை நிறுவினார்கள். கூட்டுறவு முறையை ஒப்புக்கொண்ட பலர் இப்பண்ணையில் அங்கத்தினர் ஆயினர்.

அவர்கள் பால் கறக்கும் பசுவொன்றிற்கு ரூபாய் மூன்றும் மாதந்தோறும் கட்டணமாகச் செலுத்துகின்றனர். இத்தொகையிலிருந்து உணவுப்பொருள்கள் மொத்தமாக வாங்கப்படுகின்றன. பசுக்கள் சாஸ்திர முறையிற் போஷிக்கப்படுகின்றன. வியவசாய இலாகா அதிகாரிகள்முன் பசுவுக்குச் சொந்தக்காரர் பாலைக்கறந்து, ரூபாய்க்கு எட்டுச்சேர் வீதம் விற்கின்றார்கள். வியவசாய இலாகா அதிகாரிகள் குத்தகைதார்கள் மூலமாகப் பாலை மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பதற்குரிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

கல்கத்தா நகரில் கூட்டுறவு முறையில் பால் விற்பனை திறமையாக நடைபெறுகின்றது. கல்கத்தாவைச் சுற்றிலுமுள்ள 108 கிராமங்களில் பால் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் அங்கத்தினர் தொகை **6414.**[1]

இச்சங்கங்களிலுள்ள அங்கத்தினர் பாலை மோட்டார் லாரிகள் மூலமாகக் கல்கத்தாவுக்கு அனுப்புகின்றனர். கல்கத்தாவிலுள்ள 'பால் விற்பனை யூனியன்' (The Milk Supply Union) பாலை நகரிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் ஹோட்டல்களுக்கும் அதுவேண்டும்

1. *Co-operation in India*, H. L. Kaji, P. 176.

பிற ஆட்களுக்கும் விற்றுவருகின்றது. இப்பால் விற்பனைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபொழுது கல்கத்தா நகர சபை ரூபாய் 50,000 வட்டியின்றிக் கடனாகக் கொடுத்தது. இப்பொழுது இக்கடன் செலுத்தப்பட்டுவிட்டது. அன்றியும், பால் விற்பனைச்சங்கங்கள் மாடுகள் வளர்ப்போர்க்கும் அவர்கள் பிள்ளைகளின் கல்விக்கும் மிகப்பல நன்மைகளை அளித்திருக்கின்றன.

ஒவ்வொரு மாகாணத்திலும் பொதுஜன சுகாதார சட்டம் (Public Health Act) ஒன்று இயற்றப்பட்டு, அதன்படி நகர பரிபாலன சங்கங்கள் உள்ள விடங்களிலெல்லாம் மேற்காட்டிய முறைகளிற் பாற்பண்ணைகள் வைத்து நடத்தப்படுமாயின், மாடுகள் அபிவிருத்தி யடைவதுடன் நகரங்களில் பால் விஷயமாய்க் காணப்படும் குறைகளும் நீங்கும்.

யாம் சிபார்சு செய்யும் மாகாண பொதுஜன சுகாதாரச் சட்டத்தின்மூலமாக நகர பரிபாலன சங்கத்தார் ஆற்றவேண்டிய வேறொரு சேவையையும் இங்கு எடுத்துக்காட்டவேண்டியது அவசியம். அஃது மாட்டுச் சாணத்தை எருவறட்டியாக்கி விற்கும் வழக்கத்தைத் தடுத்தலாம். இவ்வழக்கம் நகரங்களிலும் நகரங்களையண்மிய கிராமங்களிலும் பெருகிவருகின்றது. இதனால் நிலத்துக்குச் செல்லவேண்டிய சிறந்த எரு அழிவுறுகின்றது. ஒவ்வொரு நகரபரிபாலன சங்கத்தாரும் தத்தம் எல்லைக்குள் எருவறட்டி செய்வோர்மீது லைசென்ஸ் வரி விதித்து, அதிலிருந்து

பெறப்படும் தொகையைக்கொண்டு எருக்குழிகளை அமைத்து, அக்குழிகளை வாடகைக்குவிட்டு, அவ்வாற்றால் எருச்சேர்ப்பதைப் பெருக்குவார்களானால் அது கிராம மக்களுக்குச் செய்யும் பேருபகாரமாக விருக்கும். இது நிற்க.

நமது மாகாணத்திலுள்ள ஆடுகள் பெரும்பாலும் இறைச்சிக்காகவே வளர்க்கப்படுகின்றன. இவ்வாடுகளின் தொகை குறைந்துவருகின்றது என திரு. சத்தியநாதன் அவர்கள் தம் அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார். இதுவரைக்கும் அரசாங்கத்தார் ஆடு வளர்த்தலை அபிவிருத்தி செய்தற்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. இதற்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவலாம். இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்தார் நேரிலாவது, பொருள் படைத்த பெருமக்கள் மூலமாவது பணவுதவி அளித்தால் இப்பொழுதுள்ள குறை நீங்கும். மார்த்தாண்டத்தில் அதிகப் பால் கொடுக்கக்கூடிய உயர்ந்த ஜாதி ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இத்தகைய ஆடுகள் வளர்ப்பதை அரசாங்கத்தார் போற்றினால் இப்பொழுதுள்ள பாற்குறைவும் நீங்கும். மாட்டுப் பாலுக்குப் பதிலாக (Soya bean) என்ற பயற்றுப் பாலை உபயோகிக்கலாம் எனவும் சிலர் கூறுகின்றனர். ('Soya Milk', The Hindu, 21—5—1936.)

# 25

## கைத்தொழில்

## (INDUSTRIES)

நமது மாகாணத்திற்றான் முதன்முதலாகக் கைத்தொழில் இலாகா 1906-ம் வருடத்தில் திறக்கப்பட்டது. பின், அது சிறிது காலம் மூடப்பட்டிருந்தது. அதன்பின் அது திரும்பவும் திறக்கப்பட்டு, இன்னும் வேலைசெய்து வருகின்றது.

இந்த இலாகாவின் முக்கிய வேலை கைத்தொழிற் கல்வி கற்பிப்பது. இப்பொழுது இவ்விலாகாவின் ஆதரவில் 8 பாடசாலைகள் நடைபெறுகின்றன. பிறர் ஆதரவில் நடைபெறும் பாடசாலைகளின் தொகையோ 70. இப்பொழுது கைத்தொழில் இலாகா ஆதரவில் நடைபெறும் பாடசாலைகளைப் பிற ஸ்தாபனங்களின் அதீனத்திற்கு மாற்றி, எஞ்சியவற்றைக் கல்வி இலாகா மேற்பார்த்துவருவது இலாபகரமான முறையாயிருக்கும்.

நமது மாகாணக் கைத்தொழில் இலாகா செய்து வரும் வேறொரு வேலை கிணறுகள் தோண்டுவதும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை நிறுவுவதும். யாம் முன்னரே கூறியபடி, இவ்வேலையைத் திறமையுடன் செய்யத்தக்கவர்கள் பயிர்த்தொழில் இலாகா அதிகாரிகளே.

கைத்தொழில் இலாகா செய்துவரும் வேறொரு வேலை குடிசைக் கைத்தொழிலாக வெள்ளைச் சர்க்கரை செய்யும் முறையைக் கற்பிப்பதும், அதற்குரிய சிறு இயந்திரங்களை வாடகைக்குக் கொடுப்பதும். மேலும், எண்ணெய் ஆட்டுவதற்குப் புதிதாகச் செய்யப்பட்ட 'பின்டோ' செக்குகளை உற்பத்திசெய்வதும் விற்பதும் இவ்விலாகாவின் வேலை. இப்படிப்பட்ட சேவைகளை ஒரு தனிப்பட்ட இலாகா ஆற்றி வருவது சற்று வியப்பாக இருக்கின்றது.

நமது தேசம் முழுதும், சிறப்பாக நமது மாகாணத்திலும், நடைபெறும் முக்கியமான கைத்தொழில் கைநெசவு (handloom-weaving). இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு நிபுணரும், இந் நிபுணரின் ஆராய்ச்சியாற் கண்டறியப்பட்ட புதிய முறைகளை நெசவுத் தொழிலாளருக்குக் கற்றுக் கொடுப்பதற்காக ஊரூராய்ச்சுற்றி வருவோரும் (peripatetic parties) நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், சென்னையில் ஒரு நெசவுத் தொழிற்கலாசாலையும் நிறுவப்பட்டுள்ளது. இம்முயற்சிகளால் அதிகப் பலன் விளைந்ிலது என்பது யாவருமறிந்த உண்மை.

'நெசவுத் தொழிலாளருக்குத் தமது பொருள்களை உற்பத்தி செய்வதில் ஒரு குறைவும் இல்லை. அப்பொருள்களை விற்பனை செய்வதில்தான் குறைகள் இருக்கின்றன. இக்குறைகளை நீக்கிவிட்டால் கைநெசவுத் தொழில் ஓங்கிவிடும்''[1] என்னும் புதியதோர் கொள்கையைச் சிலர் பிரசாரஞ் செய்துவருகின்றனர். இக்கொள்கையை ஆராய்ந்தால் இது முழுதும் பிழைபாடுடையதென்பது விளங்கும். உற்பத்தி செய்த பொருள்களை விற்கத்தக்க அறிவு இல்லாமல் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத குறை குறையல்ல. இப்பொருள்களை வெளிநாடுகளில் விளம்பரஞ்செய்யும் வர்த்தக தூதுவர் (Trade Commissioners) நியமிக்கப்படாத குறையும் குறையல்ல. இந்நெசவுத் தொழிலாளர் தம் பொருள்களை விற்கமுடியாதிருப்பதற்குக் காரணம் அப்பொருள்கள் விலையாகாமலிருப்பதுதான். விலையாகாமலிருப்பதற்குக் காரணம் இப்பொருள்களுடன் போட்டியிட்டுநிற்கும் ஆலைத்துணி மலிவாக விற்பதுதான். அயல்நாட்டு ஆலைத்துணிக்கு இன்னும் அதிக உயர்ந்த காப்பு வரியையிட்டு, உள்நாட்டு ஆலைகள் கைநெசவுத் தொழிலாளருடன் போட்டியிடாதிருக்கும் முறைகளைக் கையாண்டால்தான் கைநெசவுத்

---

1. 'The crux of the problem of handloom weaving is marketing', The Director of Industries, *The Villager's Calendar*, 1936. P. 180.

தொழில் ஓங்கும். இவ்வுண்மையை அறியாது, சிம்லா அரசாங்கத்தார் அளிக்கின்ற **59,500** ரூபாயையும் சென்னையில் நிறுவப்பட்டுள்ள ஒரு கூட்டுறவுச் சங்கத்துக்கும், அதற்காக நியமிக்கப்பட்டுள்ள விற்பனை அதிகாரிகளுக்கும் கொடுத்துவருவது 'தென்னை மரத்துக்குத் தேள்கொட்டப் பனைமரத்துக்கு நெறி கட்டின' வாறுதான்.

"கடந்த பத்தாண்டுகளாக கைத்தொழில் இலாகா செய்த வேலையெல்லாம் 'கைத்தொழில்களுக்குப் பணவுதவி யளிக்கும் சட்டத்தை' (State aid to Industries Act) இயற்றி, அதைச் சட்ட புத்தகத்தில் ஏற்றியதும், குடிசைக் கைத்தொழில்களைப் பற்றியும் வெள்ளைக்களிமண்ணைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ததுமே" என இவ்விலாகா நிர்வாக அதிகாரி குறிப்பிட்டிருக்கின்றார்.[1] மேற்கூறிய சட்டத்தால் ஒரு பயனும் விளையவில்லை யென்றும், பணமுடையினுற் குடிசைக் கைத்தொழில் ஆராய்ச்சியாற் கண்ட சிபார்சுகளை நிறைவேற்றி வைக்க முடியவில்லை

---

1. "The outstanding events in the history of the Department of Industries during the last decade were the placing on the Statute Book of the State Aid to Industries Act, the conduct of a survey of cottage industries and the taking up of a survey of the ceramic possibilities of the Presidency. *Madras Census Report*, P. 217.

யென்றும் இவ்வதிகாரி குறிப்பிட்டிருக்கின்றார்.[1] கடந்த பத்தாண்டுகளாகச் செய்யப்பட்ட வேலையினுற் கண்ட பலன் இதுவானுல் இவ்வளவு பெருஞ்செலவில் ஒரு இலாகாவை நடத்திவருவதில் யாது பயன்?

நமது மாகாணத்தில் காகிதம், சிமெண்ட், இரும்பு, ரசாயன எரு (Chemical fertilisers) எண்ணெய், தோல் ஆகிய இப்பொருள்களை உற்பத்தி செய்யப் பெருந்தொழிற்சாலைகள் பல அமைக்கப் படலாம் என நாம் மேற்கூறிய நிர்வாக அதிகாரி கூறியிருக்கின்றார். இப்படிப்பட்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு இலாகா இருப்பது அவசியம். அவ்விலாகாவுக்காகப் பணத்தைச் செலவிடலாம். இத்தகைய கைத்தொழில்கள் மைசூர் அரசாங்கக் கைத்தொழில் இலாகாவால் மிக்க இலாபத்துடன் நடைபெறுகின்றன. நமது சென்னைமாகாணக் கைத்தொழில் இலாகா இத்தகைய கைத்தொழில்களை நடத்தவேண்டும். அங்ஙனஞ் செய்யாது, 'குடிசைக் கைத்தொழில்களுக்கு உதவிசெய்துவருகின்ரேம்' என்பது சிற்றில் கட்டி விளையாடுவதைப் போன்றிருக்கிறது.[2]

---

1. *Madras Census Report*, P. 209.
2. "Soap is the only product that is being manufactured by the Department of Industries," *Ibid*, P. 218.

குடிசைக் கைத்தொழில்களைப் போற்ற வல்லோர் குடிகளே. ஒவ்வொரு ஜில்லாவிலும் குடிசைக் கைத்தொழிலாளர் சங்கங்களும், அச்சங்கங்களின் ஆதரவில் மகாநாடுகளும் நடைபெறவேண்டும். இம் மகாநாடுகள் சுதேசிப் பொருட் காட்சிசாலை நடத்தப் பெறும் நகரங்களிலெல்லாம் நடைபெறுவது எளிது.

பண்டைக் கைத்தொழில்களை நாம் எவ்வாருகப் போற்றினும் அவை அதிக அளவிற் பயனளியா என்னும் உண்மையை யாம் இங்கு வலியுறுத்தவேண்டும். ஆதலால், கிராம மக்களுக்குப் பயனளிக்கத் தக்க புதிய கிராமக் கைத்தொழில்களை வளர்க்க நாம் சிறப்பாக முயலவேண்டும். இப்பொழுது நமதுதேசத்தின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டுள்ள அரிசியாலை, பஞ்சாலை, சர்க்கரையாலை, எலும்புத்தூள் தொழிற்சாலை, தோல்பதனிடுந்தொழிற்சாலை, நெருப்புக்குச்சி, சோப் முதலியன செய்வதற்கு ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆகிய இவைபோன்ற தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும். ஜலமின்சார சக்தியினுல் இத்தகைய பல தொழிற்சாலைகள் நடத்தப்படலாம் எனக் கைத்தொழில் இலாகாத் தலைவர் கூறியிருக்கின்ருர். இத்தகைய சிறிய கைத்தொழிற்சாலைகளே ஜெர்மனி தேசத்தில் ஐந்தில் இரண்டு பகுதியினருக்கு வேலையளித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய தொழிற்சாலைகள் நமது தேசத்தில் விருத்தியடைய வேண்டுமானுல், ஜெர்மனியிலிருந்தும், ஜப்பானிலிருந்தும்,

இப்பொழுது இறக்குமதியாக்கப்படும் காகிதம், பென்சில், கண்ணாடி, விளையாட்டுக்கருவிகள் போன்ற இச்சிறு கைத்தொழிற்பொருள்களின் மேல் மிக உயர்ந்த காப்பு வரிகள் விதிக்கப்படவேண்டும்.

மேலும், நமது தானியங்கள், பழங்கள், கிழங்குகள் முதலியவற்றிலிருந்தும் நெடுநாள் வைத்துண்ணக்கூடிய உணவுப் பொருள்களைத் தற்கால முறைப்படி தயாரிக்கத்தக்க சிறிய கைத்தொழிற்சாலைகளையும் நிறுவவேண்டும். அவற்றிற்கு அரசாங்கத்தார் ஆதரவும் அளிக்கப்படவேண்டும்.

பெரிய ஆலைத் தொழிற்சாலைகள் கிராமங்களுக்குக் கேடு விளைப்பன எனக் கூறுவது இழுக்கு. நூலாலை, நெசவாலை, சர்க்கரையாலை, சிமென்ட் தொழிற்சாலை முதலிய பெரிய ஆலைகளால் நமது மக்களில் சுமார் 20 லக்ஷம் பேர்களுக்கு இப்பொழுது வேலை கிடைத்திருக்கின்றது. நமது தேச மக்களின் வருவாயும் வாழ்க்கை நிலையும் உயர்ந்து, காகிதம், துணிபோன்ற இவ்வாலைப் பொருள்கள் மிகுதியான அளவில் வாங்கப்படுமேல் இத்தகைய தொழிற்சாலைகள் இப்பொழுதுள்ளதைவிடப் பன்மடங்காகப் பெருக வழியேற்படும். இவ்வாலைகள் பெருகினால் பயிர்த்தொழிலைச் சார்ந்து வாழ்வாரின் தொகையும் குறையும். மக்களுடைய வறுமையும் நீங்கும்.

# 26

## கூட்டுறவு

## (CO-OPERATION)

கூட்டுறவு இயக்கத்தை ஆலமரத்துக்கு ஒப்பிடலாம். இவ்வியக்கம் தொடங்கப்பட்டபொழுது இது ஆலமரத்தின் விதையைப்போல மிகச் சிறிதாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ இது இந்தியா முழுதிலும் பரவிப் பயிர்த்தொழிலாளரின் பல்வகைத் துறைகளுக்கும் பயனளிக்கத்தக்கவாறு பலபல கிளைகளையுடையதாக விளங்குகின்றது. உதாரணமாக, 1905-ம் வருடத்தில் இந்தியா முழுதிலும் 41 ஐக்கிய நாணய சங்கங்கள்மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுதோ (1934) சுமார் 93,000 ஐக்கிய நாணய சங்கங்களும், விற்பனைச் சங்கங்கள், நல்வாழ்க்கைச் சங்கங்கள் போன்ற 11,000 பிறவகைச் சங்கங்களும் இருக்கின்றன. இவற்றின் அங்கத்தினர் தொகை 43 லக்ஷம். சங்கங்களின் மூலதனம் 50 கோடி ரூபாய். கிராம சங்கங்களுக்குக் கடன் கொடுத்து வழங்கும் பாங்கிகளின் தொகை 600. இக்கணக்கு விவரங்களி

லிருந்து நமது தேசத்தின் கூட்டுறவு இயக்கம் பெரிதும் வெற்றியடைந்திருக்கிறதெனத் தெரிகின்றது.

ஆயினும், இவ்வியக்கத்திற் பல குறைகள் காணப்படுகின்றன. அவற்றுள் முதன்மையானது கூட்டுறவுச் சங்கங்களிற் பெரும்பான்மையானவை கொடுக்கல் வாங்கல் நடத்தும் நாணய சங்கங்களாக விருப்பதே. மேலும், இச்சங்கங்களை நடத்துவோர் சுயநலப் பிரியராய்த் தங்களுக்காகப் பலர் பேரால் கடன்வாங்குகின்றனர் (binami loans). அங்கத்தினர் குறிப்பிட்ட தவணைப்படி அசலையும் வட்டியையும் செலுத்தாதிருக்கின்றனர். இன்னும் இவை போன்ற வேறு பல குறைகளும் காணப்படுகின்றன. சென்னை மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை பின்வரும் அட்டவணையால் விளங்கும்.*

| வருடம் | சங்கங்களின் எண் | கடன் (லக்ஷம் ரூபாய்கள்) | பாக்கி (லக்ஷம் ரூபாய்கள்) | தசாம்சம் (Percentage) |
|---|---|---|---|---|
| 1924–25 | 9·164 | 201·57 | 84·56 | 41 95 |
| 1925–26 | 9·822 | 233·57 | 107·79 | 45·15 |
| 1926–27 | 11·000 | 265·63 | 121·30 | 45·66 |
| 1927–28 | 11·969 | 316.74 | 135·58 | 42 81 |
| 1928–29 | 12·382 | 361·12 | 147·73 | 40 9 |
| 1929–30 | 12·540 | 379·72 | 176·24 | 47·00 |
| 1930–31 | 12·439 | 427·30 | 254·52 | 50·56 |
| 1931–32 | 12·080 | 436·88 | 275·74 | 63·11 |
| 1932–33 | 11·633 | 391·42 | 264·41 | 67·55 |
| 1933–34 | 11·348 | 356·24 | 251-24 | 70·71 |

* திரு சத்தியநாதன் அவர்களின் அறிக்கையினின்றும் பொறுக்கப்பட்டது. பக்கம் (61–62)

பிரதம சங்கங்களை மேற்பார்க்கும் பொறுப்பு அரசாங்கத்தார் அதீனத்துக்கு வரவேண்டுமென்றும், தகுதியற்ற பஞ்சாயத்தார்களை நீக்க ரிஜிஸ்டிராருக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்றும், தவணைகடந்த கடன்களை விரைவாகவும் கண்டிப்பாகவும் வசூல்செய்யவேண்டுமென்றும், கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கும் வட்டியை நூற்றுக்கு $7\frac{1}{2}$ விகிதம் குறைக்கவேண்டுமென்றும் திரு. சத்திய நாதன் அவர்கள் கூறிய ஆலோசனைகளை அரசாங்கத்தார் நிறைவேற்றுவர் என எதிர்பார்க்கின்றோம். இப்பொழுது ரிஜிஸ்டிராராக இருக்கும் திரு. கிரியப்பா அவர்கள் இதற்கென்று கூட்டுவித்த ஒரு கூட்டத்தில் இவ்விஷயங்களைக் கவனிக்காது விடுத்தது மிகவும் வருந்தத்தக்கதே.

நமது கூட்டுறவுஇயக்கத்தின் வேறொரு பெருங்குறை கொடுக்கல் வாங்கல் அல்லாத பிற சங்கங்கள் பெருகாதிருப்பது. கீழ்வரும் அட்டவணையில் இச்சங்கங்களின் நிலைமை குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 1931-32. | 1932-33. | 1933-34. |
|---|---|---|---|
| 1. விற்பனை சங்கங்கள் | 50 | 51 | 53 |
| 2. விற்பனை யூனியன் | 19 | 9 | 7 |
| 3. பயிர்த்தொழில் அபிவிருத்தி சங்கம் | 3 | 4 | 7 |
| 4. கூட்டுறவு மளிகை | 3 | 5 | 2 |
| 5. பால் விற்பனை யூனியன் | ... | ... | 1 |

| | | | |
|---|---|---|---|
| 6. பொருளுற்பத்திசெய்வோர் சங்கங்கள் | 14 | 12 | 10 |
| 7. நீர்ப்பாசன சங்கங்கள் | 11 | 11 | 10 |
| 8. மாதிரிப் பயிர்த்தொழில் சங்கங்கள் | 10 | 10 | 10 |
| 9. நிலந்திருத்தும் சங்கங்கள் | 12 | 12 | 12 |
| 10. கூலியாட்கள் பண்ணையாட்கள் சங்கங்கள் | 308 | 294 | 284 |
| 11. பிற சங்கங்கள் | 370 | 349 | 340 |

மேற்காட்டிய அட்டவணையிலிருந்து கொடுக்கல் வாங்கல் அல்லாத வேலைகளைச் செய்யத்தக்க சங்கங்களின் தொகையை சென்னை மாகாணத்தில் அதிகப்படுத்தலாம் என்பது புலனாகின்றது.* பம்பாய் மாகாணத்திலுள்ளவாறு பருத்தி முதலான விளைபொருள்களை விற்கும் சங்கங்களும், பஞ்சாப் மாகாணத்திலுள்ளவாறு நல்வாழ்க்கைச் சங்கங்களும், கிராமச் சீரமைப்புச் சங்கங்களும், வங்காளத்திலுள்ளவாறு சுகாதார சங்கங்களும் நிறுவப்படவேண்டும். இத்தகைய சங்கங்களை நிறுவுமுன் பொருளாதார நிபுணர்களைக்கொண்டு தகுந்த ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆய்ந்தோய்ந்து செய்யாததாற்முன்

* "Madras in this repect compares very unfavourably with the Punjab" (*Report on Agricultural Indebtedness*, P. 64).

நமது கூட்டுறவுச்சங்கங்களிற் பல பிறந்தவுடன் இறந்துவிடும் நிலைமையிலிருக்கின்றன.*

கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலங்களிலுள்ள தொண்டர்கள் மூலமாகத்தான் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைய வேண்டும். புதிய சங்கங்களை அமைத்தல், சங்கங்களின் வேலையை மேற்பார்த்தல் முதலான பல சேவைகளையும் உண்மையுடனும் ஊக்கத்துடனும் செய்ய வல்லோர் இவர்களே. கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலங்கள் பலவிடங்களிலும் அமைக்கப்பட்டால் கூட்டுறவு இயக்கம் அதிகச் செலவின்றியும் நடைபெறும்.

---

* "Really keen Deputy Registrars are often groping in the dark as to how best to break fresh ground in non-credit work. They are often obliged through ignorance to adopt a 'hit and miss' policy involving many avoidable failures before success is eventually achieved", *Report, Op. cit.*

# 27

## கல்வி

## ( EDUCATION )

நமது தேசத்தில் இரண்டு எழுத்துக்களைக் கூட்டி வாசிக்க அறிந்தவர் நூற்றுக்குப் பத்துப்பேர்; ஏனையோர் அறியாதார். பரந்த நூற்பயிற்சியைக் குறியாகவைத்துக் கணக்கிட்டால் கற்றவர் எனக் கருதப்படுவோர் தொகை நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டாகவிருக்கும். அந்தோ! இந்நிலையில் நமது தேசம் எங்ஙனம் முன்னேற்றமடையக்கூடும்?

நமது கல்வியின்மைக்கு அரசாங்கத்தாரைக் குறைகூறுவதிற் பயனில்லை. கட்டாயக் கல்வி கற்பிக்கும் இடங்களிற்கூட ஒரே வகுப்பில் இரண்டு வருஷம் மூன்று வருஷம் வரை படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களும், தாம் கற்ற கல்வியைப் பள்ளிக்கூடங்களைவிட்டு நீங்கிய சிறிது காலத்துக்குள் மறந்துவிடும் மாணவர்களும் இருக்கின்றனர்! பலர் ஒழுங்காகப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதில்லை. எல்லாப் பிள்ளை

களையும் ஒழுங்காகப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி, அவர்கள் நன்றாகக் கல்வி கற்கவும், கற்ற கல்வியை மறக்காமல் இருக்கவும் செய்தால், இப்பொழுது நம்மிற் காணப்படும் குறைகளிற் பல நீங்கும்.

பிள்ளைகள் தாம் கற்ற கல்வியை மறவாதிருக்க வேண்டுமானால் கிராமங்கள்தோறும் வாசகசாலைகளும் புத்தகசாலைகளும் அவசியம்; நமது மாகாணம் முழுதும் **961** புத்தகசாலைகள்தாம் இருக்கின்றன. இவை பெரும்பாலும் நகரங்களிலுள்ளவை. இவற்றிற்கு அரசாங்கத்தார் அளிக்கும் பண உதவி ரூபாய் **10,000.** ஒரு நூல் நிலையத்துக்கு ஏறக்குறையப் பத்து ரூபாய்! இது மிகவும் வருந்தத்தக்கது. இக் குறையை நீக்க, அரசாங்கத்தார் பின்வரும் திட்டத்தைக் கைக்கொள்வது நலம். புத்தகசாலைகளுக்குத் தகுந்த நூல்களை எழுதுவோருக்கு அரசாங்கத்தார் சிறிது பணவுதவி யளித்து, அந்நூல்களைத் தாமே பதிப்பித்து, நூல் நிலையங்களுக்குப் புத்தகங்களையே வழங்கினால் உத்தமமெனத் தோன்றுகின்றது. தமிழில் ஒரு சிறந்த நூல் எழுதப்படுமாயின் அதை மலையாளம், தெலுங்கு முதலான பாஷைகளிலும் மொழி பெயர்த்துக் கொள்ளலாம். இதுபோன்ற பல சிறப்புக்கள் யாம் கூறும் திட்டத்தில் அமைந்துள்ளன.

இத்திட்டம் பிரதம, மத்தியதரப் பாடசாலைகளிலுள்ள கணக்கு, பூகோளம், வாசகபாடங்கள் போன்ற புத்தகங்களுக்கும் பொருத்தமானதே.

இத்திட்டத்தைக கல்வியிலாகா நிறைவேற்றிவைக்க முன்வந்தால் பாடசாலைகள் நூல்நிலையங்களுக்கு இப்பொழுது புத்தகங்களைத் தெரிந்தெடுப்பதில் நடக்கும் பல அதர்மங்கள் நீங்கும்.

கிராமச் சீரமைப்புத் தலைமைத் தலத்தாருடைய முக்கிய சேவைகளில் ஒன்று ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வாசகசாலையும் புத்தகசாலையும் அமைப்பதாகும். நமது மாகாணத்தில் சென்னைப் புத்தகாலயக் கழகம் (The Madras Library Association) ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கழகம்யாம் இங்குக் கூறிய வாசகசாலைகள் புத்தகசாலைகளுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறும் ஆற்றல் வாய்ந்தது.

கல்வி கல்லாத வாலிபர் முதியோர்களிடையே கல்வியறிவைப் புகட்டுவது பரோபகாரிகளுடைய கடமையாகும். அரசாங்கத்தாரின் பொறுப்பும் ஆகும். நமது தேசத்தில் இத்தகைய கல்வியறிவு ஸ்தாபனம் இதுவரை நிறுவப்படவில்லை.† இதற்

---

† There is at present in India...no advanced adult education for workers such as is carried on in England by the Workers' Educational Association and similar bodies...Nor are there any 'University Settlements' for educational and social work among industrial workers". (Hartog Report, P. 50).

கெனப் புத்தகாலயக் கழகத்தைப் போன்ற ஒரு மத்திய ஸ்தாபனம் சென்னையில் நிறுவப்படவேண்டும். ஒவ்வொரு கிராமச் சீரமைப்பு மத்திய ஸ்தலமும் இத்தகைய கல்வியைப் பரப்பும் ஸ்தலமாகவும் இருக்க வேண்டும்.

அதுவுமல்லாமல், எல்லா உயர்தரப் பாடசாலைகளும் (high schools) போதனாமுறைக் கலாசாலைகளும் (Training schools), கல்லூரிகளும் மேற்கூறிய பணியை மேற்கொள்ளவேண்டும். மேல்நாடுகளில் உள்ள பெரிய கலாசாலைகளெல்லாம் பொதுமக்களுக்குக் கல்வி கற்பிக்கும் இலாகாக்கள் (Extension Departments) அமைத்திருக்கின்றன.

பொதுமக்களுக்குக் கல்விகற்பிப்பதற்காகக் கம்பியில்லாத் தந்திகளை அமைக்கலாம் எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.[1] இதற்கென ஒரு கோடி ரூபாய் செலவிடவேண்டுமென்று இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்ய இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஓர் ஆங்கில நிபுணர் கூறுகின்றார். இத்தந்தியின் சிறப்பு ஒருவர் பேசும் சத்தத்தை லக்ஷக்கணக்கான மக்கள் ஒரே சமயத்திற் கேட்டு ஆனந்திக்கத்தக்கதாயிருப்பதே. ஆனால் இத்தந்திகளைவிடச் சிறந்த

---

1. "Wireless is literally a God-given means of defeating ignorance and apathy in our scattered villages" (Brayne.)

சாதனம் தற்காலத்திலுள்ள 'சினிமா'வும் 'டாக்கீஸ்' களுமாம். பொதுஜனக் கல்வியைப் படங்களின் மூல மாகக் கற்பிப்பது ஜனங்களுக்கு மிக்க விருப்பத்தை அளிப்பதாகும். மேலும், இது பலருக்குப் பிழைப்பை உண்டுபண்ணும் சிறந்த தேசீயக் கைத்தொழிலாகவும் விளங்குகின்றது.* இங்கிலந்தில் இருப்பதுபோல ஒரு 'பட நிலையம்' (The British Film Institute) ஒவ் வொரு பாஷைக்கும் ஒவ்வொரு மாகாணத்திலும் அமைக்கப்பட்டு, சிறந்த கல்வியறிவுப் படங்கள் (educational films) தயாரிக்கப்பட்டு, இப்படங்களைக் காண்பித்துவரும் 'கம்பெனி'களுக்குச் சர்க்காரால் பணவுதவியும் அளிக்கப்பட்டால், பொது ஜனங்களு டைய கல்வியறிவு விரைவில் வளரும் என்பதற்கு ஐயமில்லை.

'ஆட்டில் பாதி ஓநாய்' என்றவாறு, கல்விக்காகச் செலவிடப்படும் தொகையில் ஒரு பெரும் பாகம் கட்டடங்களுக்காகவும் நிர்வாக அதிகாரிகளின் சம் பளத்துக்காகவும் செலவிடப்படுகின்றது. கட்டடங்

---

* 'இக்கைத்தொழிலை அபிவிருத்திசெய்வது இங் கிலந்து தேசத்திலும் அவசியம்' என நமது மாட்சிமைதங் கிய சக்கரவர்த்தி எடுத்துக் கூறியிருப்பது நாம் இங்கு உய்த் துணரத்தக்கது. "It is well worth the British nation's while to take the film industry seriously and to develop it to its utmost as a national industry", *Contemporary Review*, April 1936, P. 475).

களுக்காகச் செலவிடப்படும் தொகை கல் தச்சருக்கும் மாத் தச்சருக்குமே யன்றிக் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பயனளியாது. பண்டைக் காலத்திலுள்ளவாறு கிராமப் பாடசாலைகளையும் மத்தியதரப் பாடசாலைகளையும் மிகச் சுருக்கமான செலவில் கட்ட வேண்டும். அவற்றிற்குரிய எல்லாச்செலவுகளையும் அவ்வக்கிராமத்தாரே கொடுக்கும்படியும் செய்ய வேண்டும்.

சர்க்கார் உதவிப்பணத்துக்காகவே பாடசாலைகள் நடத்தப்படுவதனால் மேற்பார்க்கும் நிர்வாக அதிகாரிகள் பலர் வேண்டியதாயிருக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் கல்வியறிவைப் பரப்புவதே முதன் நோக்கமாகக் கருதி, அவ்வவ்வூர் மக்கள் தத்தம் பாடசாலைகளை நடத்திவருவார்களாயின் மேற்பார்க்கும் நிர்வாக அதிகாரிகள் பலர் வேண்டா. ஒவ்வொரு கிராமச் சீரமைப்புத் தலைமைத்தலமும் நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்டு இப்பணியை ஆற்றவேண்டும். நமது தேசத்திலுள்ள கூறடுறவுச் சங்கங்கள் தங்களுக்குள் 'யூனியன்களை' (Unions) அமைத்துக்கொண்டு, கணக்குகளைத் தணிக்கைசெய்து (audit) வருவது போல ஒவ்வொரு கிராமச் சீரமைப்புத் தலத்தின் எல்லையிலுள்ள எல்லாப்பாடசாலைகளும் தங்கள் வட்டகையிலுள்ள பாடசாலைகளின் மேற்பார்வையை நடத்தி வருமானால் அது இலாபகரமாகவிருக்கும்.

# 28

## முடிவுரை

## (CONCLUSION)

கிராம முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பது கிராமமக்கள் தாம் முன்னேற்றமடைய வேண்டும் என்ற உணர்ச்சியும் விருப்பமும் அற்றிருப்பதே எனச் சிலர் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இஃது உண்மையே. ஏனெனில், முன்னேற்றமடைய வேண்டும் என்ற உணர்ச்சி இருக்குமானால் அதற்குரிய முயற்சிகளைச் செய்ய விருப்பமேற்படும். முயற்சியிருந்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை.

“தாம் முன்னேற்றமடையவேண்டும்” என்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டுவது எப்படி? கல்வியறிவைப் பரப்புவதனாற்றான்.

மேல்நாட்டார் கல்வியறிவுடையவர்களாயிருப்பதனால் தாம் முன்னேற்றமடையவேண்டும் என்ற உணர்ச்சிமிக்கு விளங்குகின்றனர். எல்லாத் துறைகளி

லும் முன்னேற்றமுமெய்தியிருக்கின்றனர். ஆயினும், இவர்களுடைய வாழ்க்கைநெறிகளிற் பல நம் முன்னோர்களுடைய கோட்பாடுகளுக்கும் அறவொழுக்கங்களுக்கும் முரணானவை. ஆதலால் நமது தேசமக்கள் நம் முன்னோர்களுடைய நாகரிகத்தையே குறியாகக் கொண்டு, தம் அறவொழுக்கத்திற் பிழையாது முன்னேற்றத்திற்கான முறைகளைக் கொள்ளவேண்டும்.

நமது தேசத்தவர் மக்களுடைய வாழ்க்கை நெறிகளை மிகத் திட்டமாக வகுத்திருக்கின்றனர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. எவ்வளவு ஆழ்ந்த கருத்துக்கள் எவ்வளவு சுருக்கமாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ளன!

இவை ஒருவர் இருவருடைய கோட்பாடுகளல்ல. இவை எல்லா மக்களாலும் அறியப்பட்டிருந்தவை. கல்விகற்பதன் நோக்கமே இப்பயன்களை அடைவது என்பது எல்லா நூலாசிரியர்களும் முடிவாகக்கொண்ட கொள்கை. வாழ்க்கை நெறிகளை இவ்வளவு அழகாக வகுத்து, இந்நெறிகளை எல்லா மக்களும் கைக்கொண்டொழுகுமாறு கல்வி முறையை நம் தேசத்தவர் அமைத்தவாறு வேறெத்தேசத்தவரும் அமைத்துள்ளனரோவென்பது சந்தேகம். இவ்வாழ்க்கை நெறிகளைக் கற்பிப்பதே நம்நாட்டுக் கல்வி. இக்கல்வியைக் கற்பிப்பதே நம் மக்களை முன்னேற்றும் வழி.

இந்தியமக்கள் பொருள்தேடவேண்டும் என்னும் நோக்கமுடையர் அல்லர் எனப் பலர் கூறுகின்றனர்.

இக்கூற்றுக்கு நம் பழந்தமிழ்நூல்களில் எவ்வித ஆதாரமுங் கிடையாது.

'பித்தர்களே பொருள்வேண்டா' மென்பர் எனக் கூறினார் இன்னிலையாசிரியர்.[1] ஏனெனில், அறத்துக்கும் இன்பத்துக்கும் துணையாவது பொருளன்றி வேறில்லை.[2] பொருளை அறத்தை வளர்க்கும் வளர்ப்புத்தாய் எனக் கூறினர் திருவள்ளுவ நாயனார்.[3] அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லாததுபோலப் பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லையெனவும்[4], பொருளில்லார் நரகத்திலே போய் வீழ்வர்[5] எனவும் அவர் கூறியுள்ளார். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்றார் திருக்கோவையாரும். இத்தகைய சிறப்புவாய்ந்த பொருளை மேலும் மேலும் ஈட்டவேண்டுமென்பதும் நமது அறநெறி. "உடைமை

---

1. இன்னிலை. 11.

2. 'செய்க பொருள் ... ... யின்பம் அறனோடெவையுமாக்கும்' சீவகசிந்தாமணி. இதே கருத்துடையது நாலடியார் 114-வது செய்யுளும்.

3. அருளென்னும் அன்பின் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.' (திருக்குறள், 75).

4, அருளில்லார்க் (கு) அவ்வுலக(ம்) இல்லை பொருளில்லார்க்(கு)
இவ்வுலக(ம்) இல்லாகி யாங்கு (திருக்குறள், 247).

5. இன்மை யென வொருபாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் (திருக்குறள், 1042).

அறுது ஈட்டல்'' என்றார் இன்னிலை பாடியவர். ஏழை மக்களுக்கான கவிகளைப்பாடிய அவ்வையாருமன்றோ 'திரைகட(ல்) ஓடியும் திரவியம் தேடு' எனக் கூறிப் போந்தனர். பொருள் ஈட்டுவது நம் பண்டைமக்கள் கொண்டிருந்த மூலக்கோட்பாடு என்க.

பொருள் ஈட்டுவதை நம் பண்டைமக்கள் சிறப்பாகப் போற்றிவந்தனராயினும், அப்பொருளை அறவழியிற்றான் ஈட்டவேண்டுமென்றும், அங்ஙனம் ஈட்டிய பொருளை அறத்துக்கும் இன்பத்துக்கும் பயன்படுத்த வேண்டுமென்றும் அவர்கள் கொண்டிருந்தனர்.* "தீவினைவிட்(டு) ஈட்டல் பொருள்"; அப்பொருளை "ஈதல் அறம்". இவ்விரு கோட்பாடுகளையும் வாழ்க்கையில் அமைத்துவிட்டால் 'குடியுடைமை' (socialism) 'பொதுவுடைமை' (communism) என்பன போன்ற புதுக்கொள்கைகள் வேண்டா.

நமது தேசத்தில் மக்கட்பெருக்கு மிக்கிருப்பதனாலும், பயிரிடத்தகுதிவாய்ந்த நிலம் முழுதும் பயிரிடப்பட்டிருப்பதனாலும், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்விப் பயிற்சியற்றவர்களாயிருப்பதனாலும், கைத்தொழில்கள் விரைவில் விருத்தியடையப் பல இடர்ப்பாடுகள் நிரம்பியுள்ளமையாலும் 'குடியுடைமை', 'பொதுவுடைமை' என்னும் புதுக்கோட்பாடுகளடங்கிய திட்டங்களால் நம் கிராமங்களிலுள்ள

---

* "I have felt sometimes as if there must be a blessing in store for a people that delight so utterly in compositions thus remarkably expressive of a hunger and thirst after righteousness." *Introduction* to *Naladiyar, P. XI.* by G. U. Pope.

குறைகள் நீங்கிவிடா. இக்குறைகள் கிராம மக்களின் சுயமுயற்சியாலும் பரோபகார நோக்குடைய பிறர் முயற்சியாலுமே, சிறிது சிறிதாகக் காலப்போக்கிற்றான் நீங்கத்தக்கன. இங்ஙனம் நீங்கினும், யாம் மேற்கூறிய காரணங்களால், நம் கிராமமக்கள் மேல் நாட்டுக் கிராமமக்களைப் போல மிக்க பொருட் பெருக்கை அடைதலும் எளிதல்ல.

ஆயினும், இதுபற்றி நாம் வருந்தவேண்டியதில்லை. ஏனெனில், யாம் முற்கூறியபடி, பொருளீட்டுவதுமட்டும் நம் நோக்கம் அன்று. ஈட்டும் பொருள் நல்வழியில் வரல்வேண்டும் என்பதும், அங்ஙனம் ஈட்டிய பொருள் அறத்துக்கும் இன்பத்துக்கும் பயன்படவேண்டுமென்பதும் நம் நோக்கங்களாம். இவை நம் முன்னோர் கண்டுதெளிந்து, தம் வாழ்க்கையிற் பெற்றிருந்த உண்மைகள். இவ்வுண்மைகளை இப்பொழுதுள்ள நம் கிராமமக்களும் பெற்றநுபவிக்கும்படி நம் அரசியல், சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையைத் திருத்தியமைக்கவேண்டும். அங்ஙனம் திருத்தியமைப்பதற்குக் கிராமச் சீரமைப்பு இயக்கம் உறுதுணையாகுமென்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை. இவ்வியக்கத்தில் நாம் முனைந்துநின்று வெற்றிபெற்றால், நமது தேசத்துக் கிராமவாழ்க்கையானது பிறதேசங்களின் கிராமவாழ்க்கைக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக நின்றிலங்கும்.

# அநுபந்தங்கள்

## அநுபந்தம் 1.

# மத்திய அரசாங்கத்தார் கிராமாபிவிருத்தி நிதி.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்டதொகை (லக்ஷம்ரூபாய்):

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 14 | மத்தியமாகாணம் | ·5 |
| பம்பாய் | 7 | வடமேற்கு ,, | 3 |
| வங்காளம் | 16 | அஸாம் | 5 |
| ஐக்கியமாகாணம் | 15 | டெல்லி | ·5 |
| பஞ்சாப் | 8·5 | அஜ்மீர் | ·5 |
| பர்மா | 5 | மெர்வாரா | ·5 |
| பீகார்-ஒரிஸா | 12·5 | குடகு | ·5 |

தொடங்கியிருக்கும் வேலை (லக்ஷம் ரூபாய்):

**சென்னை:**—குடி தண்ணீர் வசதி 5·5; போக்கு வரவுசாதனங்கள் 4·5; கிராம சுகாதாரம் 3; மலேரியா காய்ச்சலைத் தடுக்கும் முறைகளுக்காக ·5; ஜில்லா அதிகாரிகளுடைய யுக்தப்படி செலவிடும்படி ·5.

**பம்பாய்:**—கிராமாபிவிருத்தி ·6; மாடுகள் பாற் பண்ணை ·42; கோழி வளர்த்தல் ·15; கூட்டுறவு மூட்டை விற்பனை ·02; தோல் பதனிடுதல் 25; மீன் அபி விருத்தி ·10 எஞ்சிய தொகை ஸர் பிரடெரிக்ஸைக்ஸ் தொடங்கிய திட்டத்துக்காகச் செலவிடப்படும்.

**வங்காளம்;**—நெல் விதை அபிவிருத்தி 1·09; ஆடு மாடுகள், அவற்றின் தீனி 1·75; கோழி வளர்த்தல் ரூபாய் 500; கம்பியில்லாத் தந்தி 1·1; சணல், நெல் விற்பனை முறை சீர்திருத்தங்கள் ரூபாய் 5000; கிராமச்சாவடிகள், விளையாட்டு ஸ்தலங்கள் ரூ 1800 சாரணச் சிறுவர், சிறுமியர் இயக்கம் ரூ. 20,000; ஜல வசதி 3·5; ஜில்லா அதிகாரிகள் யுக்தப்படி செலவிடும்படி 2·17.

**ஐக்கிய மாகாணம்:**—இம் மாகாணத்திலுள்ள 45 ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் ஆறு பிரசாரகர்களும் ஒரு நிர்வாக அதிகாரியும் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் கிராமமக்கள் தம் சுயமுயற்சியினால் செய்யவேண்டிய பணிகளைச் செய்துவைக்கும்படி தூண்டவேண்டுபவர்கள், இத்திட்டத்திற்காக 7 லக்ஷம் ரூபாய்; ஒவ்வொரு ஜில்லா அதிகாரியும் தம் யுக்தப்படி செலவிடும்படி ரூ. 2·25 லக்ஷம் ரூபாய்; பயிர்த்தொழில் அபிவிருத்தி 3·28 லக்ஷம்; 50 கிராமங்களடங்கிய 9 சுகாதாரத்திட்டம் (health units) 3·16; கிராமச் சீரமைப்புப்பணி தொடங்கப்பட்டுள்ள 3,240 கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் தினசரி பத்திரிகைகள் முதலியனவற்றிற்காக ரூ 30,000.

**பஞ்சாப்:**—புலங்களை ஒன்று கூட்டல், 1·04; 31 கிராமங்களில் சுகாதார அபிவிருத்திக்காக ரூ. 9,000; குழிக் கக்குசுகள் ரூ. 10,000; கம்பியில்லாத் தந்தி ரூ. 48,000; தோல் பதனிடல் ரூ. 76,000; ஆடு வளர்த்தல் ரூ. 15,000; ஜில்லாஅதிகாரிகள் 1 லக்ஷம்.

**பர்மா:**—கிராமச்சீரமைப்புத் தலைமைத் தலங்கள் அமைத்தல், 3 35; ஜில்லா அதிகாரிகள் ·5; மலேரியா காய்ச்சலைத் தடுத்தல் 1·15.

**பீகார்-ஒரிஸா:**-கிராமரோடுகள் 6; குடிதண்ணீர் 6.

**மத்திய மாகாணம்;**—குடிதண்ணீர் 1·2; ஜில்லா அதிகாரிகள் 1·0; பூர்வீகக்குடிகளுடைய நல்வாழ்வுக்காக ·4;5 கடன் சமரஸக் கழகங்கள் 1·0 (இப்பொழுது 6 கழகங்கள் நல்ல வேலை செய்துவருகின்றன); பயிர்த் தொழிலாளருடைய மகசூலை உயர்ந்த விலை வரும் வரை காத்திருந்து விற்பதற்காகக் கிடங்குகள் (godowns) கட்ட ரூ. 20000.

**அஸாம்:**—குடிதண்ணீர் 3; கிராம ரோடுகள் 1·0 முதலியன.

**வடமேற்கு மாகாணம்:**—குடிதண்ணீர் 1·2; கிராம ரோடுகள் ரூ. 10,000 பாடசாலைப் பண்ணைகள் ரூ. 10,000 முதலியன.

**குடகு:**—குடிதண்ணீர் ரூ. 32,500; ஆடு மாடுகள் ரூ. 2500; ஜில்லா அதிகாரிகள் ரூ. 15000.

**டேல்லி:**—கிணறுகள் ரூ. 42,000, கிராம ரோடுகள் ரூ. 10,000, ஜில்லா அதிகாரிகள் ரூ. 5000.

**அஜ்மீர்-மேர்வாரா:**—கிராம ரோடுகள் ரூ. 23,000 பயிர்த் தொழிலபிவிருத்தி பிரசாரம் ரூ. 23,000; ஆடு மாடுகள் ரூ. 1000; ஜில்லா அதிகாரிகள் யுக்தப்படி செலவிட ரூ. 3000.

## அநுபந்தம் 2.

# பூவிருந்தவல்லி சுகாதாரத்திட்டம்

(G O. No. 2007 P. H. dated 1-8-1935)

மொழிபெயர்ப்பு.

**திருவெவ்வெளூர்க் கிராம அபிவிருத்தித் திட்டம்:** 1933-ம் வருடத்தில் லெப்டினெனண்ட் கர்னல் வெப் துரையவர்கள் செங்கற்பட்டுஜில்லா திருவெவ்வெளூர் தாலூகாவில் கிராம அபிவிருத்தித் திட்டம் ஒன்று தொடங்கவேண்டுமெனச் சிபார்சு செய்தார்கள். அரசாங்கத்தார் அதை ஒப்புக்கொண்டு சுமார் ஒரு வருடமாக அதில் முயன்று வந்தனர். முடிவில் அத்தகைய முயற்சியினுல் அரசாங்க இலாகாக்களின் வேலையை ஒருவழிப்படுத்த வியலாதென அரசாங்கத்தார் அறிந்து அத்திட்டத்தைக் கைவிட்டனர்.

**பூவிருந்தவல்லி சுகாதாரத்திட்டம்:**—1934-ம் வருடத்தில் லெப்டினெனண்ட் கர்னல் ஸ்ரீமான் கணபதியவர்கள்—சில கிராமங்கள் அடங்கிய ஒரு பாகத்தில் சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்கள் அனைவரும் சேர்ந்து உழைத்தால் எவ்வளவு தூரம் கிராம மக்களுடைய சுகாதாரத்தைப் பெருக்கலாம் எனப் பரீட்சிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தனர். சென்னை அரசாங்கத்தார் இதை ஒப்புக்கொண்டு மத்திய அரசாங்

கத்தாருடைய கிராம அபிவிருத்தி நிதியிலிருந்தும் ராக்பெல்லர் நிதியிலிருந்தும் இத்திட்டத்தைத் தொடங்க அநுமதியளித்திருக்கின்றனர்.

இத்திட்டம் ஸ்ரீபெரும்புதூர் தாலூகாவிலுள்ள 25 கிராமங்களில் தொடங்கப்பெற்றுள்ளது. இப்பாகம் நான்கு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு சுகாதார அதிகாரி, இரண்டு மருத்துவச்சிகள் முதலானோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்திட்டத்துக்கு முதல் வருடத்தில் 29,300 ரூபாயும், மேல்வரும் வருடங்கள் ஒவ்வொன்றுக்கும் 24,800 ரூபாயும் செலவாகும்.

**செய்யப்பட்ட வேலை:** 1935 அக்டோபர் முதல்—1936 மார்ச்சு மாதம் முடிய:—

(Report of the Health Officer in Charge)

1. முதல் 6 மாதங்களிலும் சுகாதார நிலைமை எவ்வாறு இருக்கின்றதென்பதை அறிய ஆராய்ச்சி செய்யப்பட்டது.

2. 4327 நபர்களுக்கு காலரா இனக்குலேஷனும் 3763 நபர்களுக்கு அம்மை குத்தலும்.

3. கிராம மக்களுக்குச் சுகாதாரக் கல்வி கற்பித்தல்: ஒளிப்படங்களுடன் உபந்நியாசங்கள் 110; ஒளிப்

படங்கள் அல்லாத உபந்நியாசங்கள் 50; சினிமாப் படங்களுடன் உபந்நியாசங்கள் 6; கம்பியில்லாத் தந்தி மூலம் பிரசாரம் 7.

4. கிராமப் பள்ளிக்கூடங்களிலுள்ள 108 சிறுவர்களுடைய சுகம் பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டது.

5. கொக்கிப்புழு வியாதி இருக்கின்றதா என 64 நபர்களுடைய மலம் பரீக்ஷிக்கப்பட்டது.

6. மலேரியா காய்ச்சல் இப்பாகத்தில் இருக்கிறதா எனச் சோதிக்கப்பட்டு இல்லையென்க் கண்டயப்பட்டுள்ளது.

7. 523 பிரசவங்களில் மருத்துவச்சிகள் உத செய்தனர்.

---

உ